உள்நாடுவருட சந்தா ரூ. 3-0-
வெளிநாடு „ ரூ. 5-0
R. No. M. 3606 "PAHUTHARIVU" தனிப்பிரதி விலை ஒரு அணா

பகுத்தறிவு

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

ஞாயிறுதோறும் வெளிவரும்.
ஆசிரியர்:- ஈ. வெ. கிருஷ்ணசாமி.

எப்பொருளெத்தன்மைத்தாயினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

மாலை 1. | ஈரோடு, பவ-ஹூ ஐப்பசி-மீ 19-உ (4—11—1934) | மலர் 11.

துங்கநகர் மிராசுதார் தோழர்

M. அட்டியண்ணகவுண்டர்

அவர்களால் பாடப்பட்டது.

(எங்களது திருநாடு என்ற வர்ணமெட்டு.)

1. எங்களது திருநாடு—கேட்கலையோ—அம்மே
ஏற்றமுள்ள சமதருமம்—தழைத்தோங்கும் நாடு
2. ஏழை பணக்காரரில்லா—இன்பம் வளர் நாடு
எழுச்சிமிக்க பொதுவுடமை—எங்களது நாடு
3. மூட நம்பிக்கைகளற்ற—மொய்ம்புடைய நாடு
முன்னேற்றப்பகுத்தறிவு—முழங்குமெங்கள் நாடு.
4. விஞ்ஞான சாத்திரங்கள்—விளங்குமெங்கள் நாடு
மின்சார சக்தியினால்—வேலைசெய்யும் நாடு
5. ஈ. வெ. ராமசாமி அவர்—இலங்குமெங்கள் நாடு
இட்டமுள்ள அட்டியண்ணன்—இயங்கு தமிழ்நாடு

விற்பனைக்காக நம்மிடம் உள்ள

இதா பதிப்புப் புஸ்தகங்கள்.

சிதம்பர ரகசியம்	0-8-0
சுதந்தரப்போர்	0-4-0
மாதர் சுதந்திரம்	0-8-0
விவாக விடுதலை	0-4-0
மோட்டார் இயந்திரசாஸ்திரமும் பயிற்சி முறையும்	2-0-0
மனித உற்பவம்	0-8-0
ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்	0-6-0
The Right of Temple Entry (English)	1-0-0
The Crux of the Indian Problem (English)	1-0-0
உழைப்பாளிகளுக்குஏன்இவ்வுலகமில்லை?	0-1-0
சாமிகளின் அடிமை	0-12-0
லோகல்போர்டுஆக்ட்(சென்னை)	2-0-0
பகுத்தறிவு கீதம்	0-1-0
நச்சுப்பொய்கை அல்லது நாரியர் வேட்கை	0-8-0
பெண்ணுரிமைக் கீதங்கள்	0-1-0
சமதர்மக் கீதங்கள்	0-0-6

விலாசம்:— குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

பெண்களுக்கோர் வார்த்தை.

சூதக வயிற்றுவலி, சூதக வாய்வு, சூதக கட்டி முதலிய சூதக சம்பந்தமான சகலநோய்களுக்கும்

கல்லுப்பு செந்தூரம்.

இம் மருந்தில் அமைந்திருக்கும் ஆச்சரியமான குணத்தை இதைச் சாப்பிட்ட பெண்மணிகளுக்கே நன்கு விளங்கும்.

புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட இம்மருந்தை ஆயிரக்கணக்கான பெண்மணிகளுக்குக் கொடுத்து குணமடைந்ததைநேரில் பார்த்து இந்தப் பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்டது. மாதவிடாய் காலங்களிலுண்டாகும் சூதக வாய்வு, வயிற்றுவலி, சூதகக் கட்டி, சரியாய் விலக்கமாகாதிருத்தல், மாதவிடாய் சரியில்லாமல் கரித்தண்ணீர் போலும், கழனித் தண்ணீர்போலும், கதங்கலாயும், ஒரு நாளிரண்டு நாள் மட்டும் சொற்பமாய் காணுதல், மறுபடியில்லாதிருத்தல் 10 நாள் 8 நாள் முன் பின்னுகக் காணுதல் முதலிய சகல வியாதிகளையும் குணப்படுத்தி புத்திர சந்தானத்தைக்கொடுப்பதில் இதற்கு மிஞ்சிய மருந்தே கிடையாது. அனுபவத்தில் கைகண்ட மருந்து. சூதகக்கட்டிகளுக்காக ஆப்ரேஷன் செய்ய வேண்டியதில்லை. மருந்து சாப்பிடும் விபரம் மருந்துடன் அனுப்பப்படும்.

விலை புட்டி 1-க்கு ரூ 3—0—0

குறிப்பு:— நமதிடம் சகல வியாதிகளுக்கும் உயர்ந்த மருந்துகளிருக்கின்றன. மலாய் நாட்டு வாசிகள் மருந்துக்கு ரூபாய் 3ம் வி. பி. செலவு ரூ 2-ம் ஆக ரூபாய் 5-ம் முன் பணமாய் அனுப்பவேண்டும்.

அரண்மனை வைத்தியர்

S. T. மாணிக்கம் பிள்ளை,

சித்த வைத்தியசாலை,

ஊத்துக்குளி ரோடு, திருப்பூர். கோயம்புத்தூர் ஜில்லா.

அறிவியக்கப் பத்திரிக்கைகள்.

"வெற்றி முரசு"

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை.

கௌரவ ஆசிரியர்:—

S. லக்ஷ்மிகாந்தம் B. A. B. L.

ஆசிரியர்:—

சி. நடராஜன், மாயவரம்.

பழய மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்து நவீன இந்திய பிரஜைகளாகவும், அடிமைப்பட்ட இந்தியாவின் விடுதலையைக்கோரி ஆண்மையோடு போராடும் சுதந்திர வீரர்களாகவும் சமதர்ம உணர்ச்சியுடையவர்களாகவும், நாட்டின் நலங்கருதும் நல்லோராகவும், வாழவிரும்பும் தோழர்களுக்கு நமது "வெற்றிமுரசு" தக்கதொரு வழிகாட்டியாகும். உயர்ந்தபதிப்பு.

வருட சந்தா ரூ. 3—0—0

தனிப்பிரதி விலை அணு ஒன்று.

விலாசம்:—

மானேஜர்,

"வெற்றி முரசு" மாயவரம்.

"சமதர்மம்,"

ஆசிரியர்:—

வி. பார்த்தசாரதி.

அரிய கருத்துக்கள் தெளிந்த உண்மைகள், சிறந்தகட்டுரைகள், சமதர்மப்பாட்டுகள். பழைய மூடப்பழக்க வழக்கங்களையும், சடங்காசாரங்களையும் அழித்து இந்திய மக்களின் உயர்வைநாடி, அடிமை நாட்டின் விடுதலையைக் கோரி மக்களைச் சுதந்திர வீரர்களாகவும், சமதர்மசீலர்களாகவும், நாட்டின் நலனே முதலெனக் கருதும் நல்லோராகவும் ஆக்கும் கருத்துக்கள் கொண்டது.

வருட சந்தா ரூ 2—8—0.

தனிப்பிரதி விலை 6 பை.

விலாசம்:- மானேஜர்,

"சமதர்மம்" ஜோலார்பேட்டை.

"நகர தூதன்,"

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை.

ஆசிரியர்:—

மணவை ரே. திருமலைசாமி.

பார்ப்பனரல்லாதாரின் விடுதலைக்கும், தொழிலாளர்களின் விடுதலைக்கும் பாடு படுவதுடன் மக்களை சமதர்மவாளர்களாகத் திகழச் செய்யும் கருத்துக்களையும் அறிஞர்களின் அரிய கட்டுரைகளையும் தாங்கி வெளிவரும் ஓர் சிறந்த வாரப் பத்திரிகை.

வருடச் சந்தா ரூ 3—0—0

விலாசம்:—

மானேஜர்,

"நகர தூதன்"

உறையூர், திருச்சி.

மூட நம்பிக்கையில் ஆழ்ந்திருக்கும் இந்தியா

இந்தியமக்களை கொன்று குவித்து தேசத்தை முற்றுகை போடும்போது தூங்கிக்கொண்டிருந்த இந்தியக் கடவுள்கள்.

காந்தியாரும், மேனாட்டுக் கல்விகற்ற இந்தியர்களும் மூடநம்பிக்கையில் மூழ்கிக்கிடக்கின்றவர்களே.

இந்திய விடுதலை சமதர்மவாதிகளால்தான் முடியும்.

"சுயதேசமித்திரயா"வில் ஆரியபால குணசேண எழுதியது.
(மொழிபெயர்த்தோன் கொளும்பு தோழர் I. M. இப்ருஹீம்)

குறிப்பு:— கொழும்பிலிருந்து வெளியாகும் பிரபல்யமான வாரப் பத்திரிகையாகிய "சுயதேச மித்திரா" என்னும் சிங்களப் பத்திரிகையில் தோழர் ஆரிய பாலகுணசேனா என்னும் ஒரு சமதர்ம வாதி தொடர்ச்சியாய் எழுதி வரும் ஒரு கட்டுரையில் இந்தியாவைப் பற்றி குறிப்பிட்டிருந்த பகுதியை மாத்திரம் இந்தியத் தோழர்களுக்காக வேண்டி நமது சமதர்மப் பத்திரிகையாகிய "பகுத்தறிவில்" பிரசுரிப்பதற்கு மொழிபெயர்த்து அனுப்பியுள்ளேன். வாசக நேயர்களுக்கு இச் சிங்களப் பத்திரிகையாகிய "சுயதேசமித்திரா"வையும், அதில் கட்டுரை யெழுதும் தோழர்களையும் பற்றி சிறிது அறிமுகப்படுத்தி விட்டு அக் கட்டுரையிலுள்ளதை அப்படியே மொழி பெயர்த்தெழுதுகிறேன், இலங்கையில் எத்தனையோ சிங்களப் பத்திரிகைகள் இருக்கின்றன. அப் பத்திரிகைளெல்லாம் இலங்கையரின் அறியாமையைப் போக்காமல் மதத்தைக் காப்பாற்றவும், மூடநம்பிக்கையை வளர்க்கவும், ஜாதி வெறியை உண்டு பண்ணவும், இந்தியத் தொழிலாளர்களை இலங்கையை விட்டும் துரத்தவும் பிரயத்தனப் படுகின்றன. மேலும் இலங்கையிலுள்ள சிங்களப் பத்திரிகைகள் பாமர மக்களின் மூடத்தனத்திற்குத் தகுந்தாற்போல் நடந்து நல்ல பிள்ளையென்று பெயர் எடுத்துக்கொள்கிறதே யன்றி மக்களின் மூட நம்பிக்கைக்கு விரோதமான புதிய கொள்கைகளை பிரசுரிப்பதில்லை. ஆனால் "சுயதேசமித்திரா"வோ பாமர ஜனங்களின் மதக் கிறுக்கையும், அறியாமையையும் எதிர்ப்பையும், பொருட்படுத்தாமல் மக்களின் முன்னேற்றத்தையே பிரதானமாகக் கருதி சமதர்ம வாதிகளுடையவும், விஞ்ஞானிகளுடையவும், நாஸ்திகர்களுடையவும், அரிய கட்டுரைகளை விசேஷமாக வாரம் தோறும் பிரசுரித்து வருகின்றது. மதஸ்தர்களுடையவும், பெரிய மனிதர்களுடையவும் கண்டனத்தையும், எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் தீவிரமான நோக்கங்கொண்ட கட்டுரைகளை சிங்களயுவர்களும், யுவதிகளும் "சுயதேசமித்திரா"வில் துணிந்து எழுதி வருவதைப்பார்க்கும் போது இலங்கையின் முன்னேற்றம் இவர்களின் கையிலேயே தானிருக்கிறது என்று சொல்ல வேண்டியவனாயிருக்கிறேன். "சுயதேசமித்திரா" முன்னேற்ற நோக்கம் கொண்ட பெண்களுக்கு விசேஷமான பக்கங்களை ஒதுக்கி வைத்திருக்கிறது, அதில் எழுதும் பெண்கள் யுக்திவாத முறையில் பெண்களின் உண்மையான விடுதலையை கருதி யெழுதி வருகிறார்கள். "சுயதேசமித்திரா" இந்தியாவின் பேரில் கவலைகொண்ட ஒரு பத்திரிகையாகும். "பிரிட்டிஷ் ஆட்சியும், சுதேச மன்னர்களும், இந்திய முதலாளிகளும், மதங்களும் இருக்கும் வரையிலும் இந்தியர்கள் விடுதலையடைய முன்னேற்றமடைய மார்க்கமில்லை. ஆகையால் இவைகளை விட்டும் விடுதலை அடைவதற்கு இந்தியர்கள் துணிந்து போராட வேண்டும்" என்று "சுயதேசமித்திரயா"வும், அதில் எழுதும் தோழர்களும் எழுதி வருகிறார்கள். ஆகையால் தான் "சுயதேசமித்திரயா"வை யான் இவ்வளவு அறிமுகப்படுத்தினேன். இதை அறிமுகப்படுத்தாவிட்டால் இந்திய தேசீய வாதிகள் இக் கட்டுரையாளரையும் மேயோ, சர்ச்சில், ஹெதர்மியர், பேஜ்கிராப்ட் முதலியவர்களுடன் சேர்த்து விடுவார்கள். இத்துடன் இக் குறிப்பை நிறுத்திக் கொண்டு தோழர் ஆரிய பாலகுணசேண அவர்களின் கட்டுரையை எழுதுகிறேன். அது வருமாறு:—

கடவுள்

மனிதன் அறியாமையும், பயமும் அதிகப்பட்ட அளவிற்கு கடவுள்களும் அதிகப்பட்டன. மனிதனின் அறிவு, வளர்ச்சி அடைய அடையக் கடவுள்களும் குறைந்தன. அநேகதேசங்களில் ஞானம் பரவுவதற்குமுன் வணங்கிக்கொண்டிருந்த கடவுள்களில் அநேகவற்றை ஞானம் பரவ ஆரம்பித்தவுடன் கைவிடப்பட்டாகி விட்டன. கடவுள்களைப்பற்றிய நம்பிக்கை இலங்கையிலும், இந்தியாவிலும் மட்டும் வேரூன்றியதல்ல. பண்டைய காலத்தில் மிஸ்ர் தேசத்தில் ஒவ்வொரு பகுதிக்கும் வெவ்வேறு கடவுள்கள் இருந்தன. மனிதனின் சுகவாழ்க்கைக்கு உபயோகிக்க வேண்டிய தேசத்திலுள்ள பூமியின் பெரும்பாகத்தைகடவுள்கள் தங்குவதற்கு ஆலயங்களைக் கட்டி நிரப்பிவிட்டார்கள். "ஒஸயிரஸ்" "அய்ஷிஸ்" "ஹோரர்ய்" என்னும் கடவுள் குடும்பங்களை மிஸ்ர்தேசத்தவர்கள் வழிபட்டு பூஜித்து வந்தார்கள். ஆதிகாலத்தில் அஸீரியன்ஜாதியார்களும் "அசூர்" என்னும் ஒரு கடவுளை பூஜித்து வந்தார்கள். பண்டைய பாபிலோனியாவிற்கும் அநேககடவுள் களிருந்தன. பாபிலோனியாவில் ஒவ்வொரு பகுதியையும் ஒவ்வொரு கடவுள் காப்பாற்றி வருகிறதுஎன்றுஅவர்கள் (பாபிலோனியர்கள்நம்பினார்கள். அங்குபிரதான நகரமாகியநீதிவேபட்டணம்முதல்முழுதேசத்தையும் "அசூர்" என்னும்ஒருகடவுள்காப்பாற்றிவருகிறது என்று. அந்தக்கடவுளுக்கு பாபிலோனியர்கள் பக்தி பரவசத்துடன் வழிபட்டு வந்தார்கள். பாபிலோனியர்களால் எழுதப்பட்ட நூற்களில் பெரும்பகுதியில் அவர்களுடைய கடவுள்களின் வல்லமையையும், குணத்தையும், திருவிளையாடல்களையும் பற்றியே வர்ணிக்கப் பட்டிருக்கின்றன. ஒரு காலத்தில் ஆசியாவைச் சேர்ந்த செமிடிக் ஜாதியினரும் "பால்" என்னும் ஒரு கடவுளை தொழுது வந்தார்கள்.

கடவுள்கள் ஏராளமாயுள்ள இந்தியா.

உலகில் எவ்வளவு கடவுள்கள் இருந்தாலும் இந்தியாவில் நிறைந்திருப்பது போல் கடவுள்கள் வேறு எந்த தேசத்திலுமில்லை! அங்குள்ள கடவுள்களை பங்கு போட்டால் ஒரு இந்தியனுக்கு குறைந்த பட்சம் 2 கடவுள் வீதமாவது கிடைக்கும். அவ்வளவிற்கு ஏராளமான கடவுள்கள் இந்தியாவிலிருக்கின்றன. மொத்தமாகக் கணக்கிடப்பட்ட இந்தியர்களின் கடவுள்கள் முப்பத்துமூன்று கோடியாகும். அங்கு மரம், தடி, நீர்வீழ்ச்சி, குப்பைத்தொட்டி, குளம், குட்டை, ஆறு' எலி, பாம்பு, பன்றி, மாடு இன்னும் பலவிதக் கொடிய மிருகங்கள் எல்லாம் தெய்வமாகக் கொண்டாடப் படுகின்றன! மனிதனின் சரீரத்திலுள்ள புழுக்களை 80 வகையாய் பிரித்துக் காட்டலாம். ஆனால் இந்திய மனிதர்கள் வணங்கும் கடவுள்களில் இத்தனை வகைப்பட்ட கடவுள்களிருக்கின்றன என்று பிரித்துக்காட்டமுடியாது. ஏனெனில் வித விதமான தினுசு தினுசான கடவுள்கள் ஏராளமாயிருக்கிறதினாலேயே தாமர்லேன் என்னும் குரூரமான சேனாதிபதி லட்சக்கணக்கான இந்திய மக்களை கொன்று குவித்து—இந்தியர்களை நடுங்க வைத்து டில்லியை பிடித்துக்கொண்டபோதும், பிரான்ஸ், ஒலந், போர்த்துகீஸ் முதலிய ஐரோப்பியப் படைகள் போட்டி போட்டுக்கொண்டு இந்தியாவை சின்னா பின்னப்படுத்தி பங்கு போட்டுக் கொள்ளும்போதும், ராபர்ட்க்ளைவ், ஹேஸ்டின்க்ஸ் முதலிய ஆங்கிலேயர்கள் இந்தியாவில் ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டும்போதும் தேசத்தையும், தேச ஜனங்களையும் காப்பாற்றி வந்த இந்தியர்களின் முப்பத்திமுக்கோடி கடவுள்களும் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தனபோலும், அந்நியர் படை இந்தியாவை முற்றுகை போடும்போது இந்தியாவை காப்பாற்றி வந்த கோடானு கோடி தெய்வங்களும் ஓடி ஒழிந்து கொண்டதுதான் ஆச்சரியம். "அந்நியர்" ஆட்சியாலும், சுயநலம் பிடித்த கொடிய முதலாளிகளின் அக்கிரமத்தாலும் துன்புறும் பலகோடி ஏழை இந்தியர்கள் உணவில்லாமலும், ஆடையில்லாமலும் இருந்துகொண்டு செய்யும் பூஜைகளையும், கும்பிடுகளையும் வெட்கமில்லாமல் நிசப்தமாக ஏற்றுக்கொள்ளும் இந்தக் கடவுள்கள் ஒரு அதிசயமான கடவுள்கள்தான்! இக்கடவுள்கள் பெயரால் எரிக்கப்படும் எண்ணெயும், பூஜிக்கப்படும் பதார்த்தங்களும், பலியிடப்படும் ஆடு, மாடு, கோழி முதலியவைகளும் எண்ணிக்கையில்லை, ஒவ்வொரு கடவுள் பெயராலும் கட்டப்பட்டிருக்கும் கோவில்களின் எண்ணிக்கை ஏராளமாகும். அக்கோவில்களில் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான நகைகளிருக்கின்றன. அக் கோவில்களிலிருந்து உண்டாகும் தொத்து நோய்கள் (முனிசிபாலிடிகள் இல்லாவிட்டால்) இந்தியாவை அழிக்கப் போதுமானது. கோவிலிலுள்ள சோம்பேறி பூஜாரிகள் அவர்களுடைய கடவுள்கள் பெயரால் செய்யும் அயோக்கியத்தனத்தை அளவிடமுடியாது. (அந்தோ! இந்தியாவே உனது நிலைமைதான் என்னே? சுயமரியாதை இயக்கம் சொல்லுவது இந்தியர்களின் செவியில் ஏறுமா? மொ—ர்)பொது ஜனங்களிடத்தில் குருட்டு நம்பிக்கைகள் பெருகிய அளவிற்கு—அந்த நம்பிக்கையின் பெயரால் செய்யும் பூஜை, பிரார்த்

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.

உலக தேச சரித்திரச் சுருக்கம்.

A Short History of the World.

by
H. G. Wells.

(மொழிபெயர்ப்பாளர் சி. வீ. கே.)

அத்தியாயம் 2, 3.

(சென்ற வாரத் தொடர்ச்சி)

அகண்டமான (Infinitude) சமயத்திற்குப்போய் நாம் நமது பூமியை அதன் ஆரம்ப நிலையில், நோக்குவோமாகில் நமக்கு அதுவும் தணல்விட்டு எரியும் அடுப்புபோன்றும்அல்லது எரிமலையிலிருந்து எழும் கிட்டம் (lava)போன்றும், தோற்றமளிக்கும். ஆங்கு தண்ணீரைக் காணமுடியாது. ஏனெனில் தண்ணீரெல்லாம் நீராவியாக மாறி உலோக சம்பந்த மாகவும் உக்கிரங்கொண்டு மிளிரும். நெருப்புத் தணல் பொருந்திய மேகமண்டலத்தில் சூரியனும், சந்திரனும் நெருப்பின் தீக்ஷண்யத்தால் ஜ்வாலை விட்டு வீசும்.

சிறிது சிறிதாக ஒரு லட்சம் வருடம் சென்ற பிறகு இந்த நெருப்புத் தணல்தோற்றம் தனது கொடூர கொடுங்கனல்(Incandescene) வீசுவதைத்தணிக்கும். ஆகாயத்திலுள் ளநீராவிகுளிர்ந்து மழையாக வர்ஷிக்கவே, அது நம்தலைக்கு மேல் (அதாவது கீழே) அடர்த்ததாக விருக்கும். உருகிய கடலில் களிம்பு போன்று உறைந்த கடினமான கற்பாறைகள் மேல் தளத்தில் தோன்றும். அது கொஞ்ச காலத்தில் மூழ்கிவிடும். ஆகவே மற்ற மிதந்துவரும் குவியல்கள் அதன் மீதுவந்து சார்ந்து விடும் அப்போது சூரியனும் சந்திரனும் அகன்றும், அதிக தூரங்களில் சிறிய உருவத்தோடுமிருக்கு மாகையால் ஆகாயத்தில் வெகு துரிதமாகக்குறைந்த அளவில் குறுக்கே பாயும். சந்திரன் சிறிய உருக்கொண்டிருப்பதால், கொடுங்கனல் மாறிக்குளிர்ந்த நிலையை எய்திவிடும். இது சூரிய வெளிச்சத்தை முழுச்சந்திரன் மூலமாகவும், கிரகணங்கள் மூலமாகவும் அடிக்கடி மறைந்தும், பிரதிபிம்பித்தும் வரும்.

பூமி சாந்தமாயும், அதிகப்படியான காலத்துடனும் நாம் தற்பொழுது காணும் நிலையை எய்தியிருக்கலாம். நீராவி மேகங்களாக மாற ஒரு கால அளவு வரைக்கும் சாவதானமாயிருக்க வேண்டும். அப்பொழுது உலகில் முதல் முதல் மழை பெய்ய ஆரம்பிக்கும். பல ஆயிரம் வருடம் வரை பூமியின் பெரும்பாகத்திலுள்ள தண்ணீர் ஆகாயத்தில் ஆவியாக மாறியே வரும். ஆனல் இப்பொழுது சூடான ஊற்றுகளும், பளிங்கு போன்ற கற்பாறைகளினின்று எழும். இதோடு குளங்களும், ஏரிகளும், இருக்கிறபடியால் அதில் இச்சூடான ஊற்றுகள் பாயும்போது, பல பாகங்களுடன் கூடிய கற்பாறைகளும், அதில் உண்டான சத்து நிறைந்த மண்ணும் இதில் தள்ளப்படுகின்றன.

கடைசியில் மனிதன் உலகில் உண்டானதும், தான்பார்க்கக்கூடிய இயற்கைத் தோற்றங்கள் உலகில் காட்சியளித்திருக்கலாம். நாம் அச்சமயம் உலகில் இருப்போமானல் கிட்டமான கற்பாறைகளின் மீது தான் வீற்றிருக்க வேண்டும். ஏனெனில் மண் சூழ்ந்த நிலத்தையாவது அல்லது தாவர வர்க்கத்தையாவது புயல் நிறைந்த உலகில் காணமுடியாது. சூடானதும், வேகமானதுமாகிய காற்றுகள் கடும் சூறைக்காற்றை தோற்கடிக்குமாறு வீசுவதாலும், கடும் மழை வர்ஷித்தலாலும், ஈம்மை அது தாக்கியிருக்கக்கூடும். இந்த வர்ஷித்தலினின்று பெரும் பெரும் பாறைகள் உருட்டப்பட்டு பள்ளத் தாக்குகளையும், அகன்ற வீழ்ச்சிகளையும் ஏற்படுத்தினதாலும், சேற்றுடன் தண்ணீர் மோதினதாலும் நமக்கு பலத்த தீங்குகள் நேர்ந்திருக்கலாம். அப்போது நாம் மேகத்தில் ஆகாய மூலமாக சூரியன் பிரகாசிப்பதை பார்க்கக்கூடும். இந்த எழுச்சியில் பூமி ஆட்டமும், சரிவும் உண்டானதால் அப்பொழுது சந்திரன் தனது முழு உருவத்தையும் மறைக்காதவாறு தோற்றமளித்திருக்கலாம்.

உலகின் வயது நீடிக்க சூரியன் வர வர அதிக தூரத்தில் தெரிந்தது. மழை குமுறல்கள் தணிந்தது. சமுத்திரத்திலுள்ள நீரெல்லாம் சரி சமமாக கடலில் சேகரிக்கப்பட்டன.

அப்போது உலகில் உயிர்களில்லை; கடலிலும் உயிர்களில்லை. கற்பாறைகளெல்லாம்வெறுமனகவேஇருந்தன.

அத்தியாயம்-3

ஜீவ வர்க்கங்களின் ஆரம்பம்.

கல்லாக சமைப்பட்ட புறணியுடைய கற்பாறைகளினின்று நாம் உயிர்களின் தத்துவங்களை மனிதர் உற்பத்திக்கு முன்னர் அறிகிறோம். நாம், களிக்கல் (Shale) லிலிருந்தும், கற்பலகையிலிருந்தும், சுண்ணும்புக் கற்களினின்றும், மணற் கற்களினின்றும், எலும்புகள் கடற்சிப்பிகள், இலைகள், கிளைகள், பழங்கள், சிலாரூபங்கள், கீறல்கள், ஆகிய இன்னும் பலவகைகளினின்றும், ஆரம்ப மழையின் தூறல்கள் முதலியனவற்றிலிருந்தும் சிலாரூபங்களைக் கண்டறிகிறோம். இந்த ஊக்கமுள்ள பரீக்ஷைகளினின்று கடந்த உலக சரித்திரத்தின் ருசுக்கள்சாஸ்வதமாக இருந்து வருகின்றன. இதுதான் தற்காலத்தில் சாதாரண அறிவாகப் பரிணமிக்கின்றது. இந்த வண்டல்சள் பொருந்திய கற்பாறைகள் அடுக்கடுக்காக சுத்தமாக இருக்கவில்லை. அவைகள் நெருக்கப்பட்டும், வளையப்பட்டும் கோணல் மாணலாய் ஒரு புத்தகசாலையின் புத்தகங்கள் தாறுமாறாய்க்கிடப்பன போன்று இருக்கும். ஆனல் பலரின் விஞ்ஞான தியாகங்களினல் இது ஒழுங்காகப்பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இதன் குறிப்புகள் ஆராய்ச்சி செய்யப்பட்டும் வருகின்றன. இந்த ஆராய்ச்சியின் காலம் நூற்றறுபதுகோடி வருடத்திற்கு முன்னதாக ஆரம்பமென்று யூகிக்கப்படுகின்றது.

பூகர்ப்ப சாஸ்திரிகள் (Geologists) ஆரம்ப கற்களை எஸோயிக் (Azoic) கற்பாறைகள் என்று அழைக்கின்றனர். ஏனெனில் அவைகளில் ஜீவவகைகளின் சாசனங்கள் இருக்கப்பெறவில்லை. வடஅமெரிக்காவில் பல இடங்களில் இந்தப்பாறைகள் இன்னும் மூடப்படவில்லை. அதன் கனங்களினின்று சாஸ்திரிகள் எண்பதுகோடி வருடங்களுக்கு முன்னர் இது உற்பத்தியாகியிருக்க வேண்டுமென நிர்ணயிக்கின்றனர். உலகம் உற்பத்தியாகிய கணிப்பில் பாதிவரை, உலகம்யாதாமொரு உயிர்களின் தோற்றங்களையும் காணவில்லை. மழையின் தூறல்களின் குறிகள் இந்த முதலாவதுபாறைகளில் காணப்படுகிறதே யொழிய உயிர்களின் அமைப்புகள் காணக்கிடைக்கவில்லை.

பிறகு நாம்நமது சாசனங்களினின்றும் கடந்த ஜீவர்களின் தோற்றங்களைக் காண்கின்றோம் இந்த இரண்டாவது காலத்தை கீழ்பேலியோஸோயிக் காலம் (Lower Palaeozoic Age) என்று கருதப்படுகின்றது. * முதல் குறிப்புகள்சிறு வகைகளின் உற்பத்தியை எண்பிக்கின்றன. அதாவது கடற்சிப்பிகள், கடலில் வளரும் புல்பூண்டுகளின் கிளைகளிலுள்ள பூக்களின் தலைப்பாகங்கள், கடற்புளுக்களுடன் இறந்த உடல்கள், ஓடுள்ள கடல் பிராணிகள் (Crustacea) முதலியவைகள் காணப்படுகின்றன. இதற்கு முன்னதாகத் தாவர புழுக்களும், தாவர புழுக்கள் போன்று சுருட்டிக்கொள்ளும, இதர அரிப்பூச்சிகளும், இங்கு காணபபடுகின்றன. பிறகு சில லட்சம் வருடங்கள்சென்றவுடன், கடல் தேள் முதலிய கொடிய ஜீவ வர்க்கங்கள் உற்பத்தியாயின.

இந்தப்பிராணிகளில் எதுவும் பெரிய அளவுபெற்றதல்ல. கடல் தேள்கள் தான் பெரிதாயிருந்தன. இது 9-அடி நீளமிருந்தது. அப்போது தரை வாழும் பிராணிகளில் எதுவுமில்லை. தாவரங்களோ நிலத்தில் வாழும் ஜீவஜந்துக்களோ இருக்கப்பெறவில்லை- மீன்களோ அல்லது எலும்பு பொருந்திய வர்க்கங்களோ உற்பத்தியாகவில்லை. ஆகவே, நமக்குத் தோன்றும் ஜலசரங்கள் ஆழமில்லாத தண்ணீரிலும், உள் அலை பொருந்தியவைகளிலுமிருந்தன. கீழ்பேலியோஸோயிக் பாறைகளுடைய உள் வெளித் தோற்றங்கள் இன்றும் எதேஷ்டமாகக் கண்டு பிடிக்கலாம். கற்பாறைகளுள்ள குளங்களிலோ அல்லது அழுக்கு நிறைந்த பள்ளத் தாக்கின்அகழியிலோ ஒருதுளி தண்ணீரை எடுத்து அணுதரிசினியால் பரீக்ஷை செய்யலாம். சிறு ஓடுள்ள கடல் பிராணிகள், சிறிய கிளிஞ்சில், கடற்பாசி முதலிய கடற்பிராணிகள் நமக்கு அடுத்தடுத்துத் தெரியும் பெரிய வகுப்பின் தோற்றங்களை நிர்ணயிக்கும்.

இந்தக்கீழ்பேலியோஸோயிக் கற்பாறைகள்நம்சரித்திர ஆரம்பத்திற்குப் போதிய ருசுக்களைக் கொடுக்காது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். சிலர் ரூபங்களை அமைப்பதற்கு ஒரு ஜீவ ஐந்துபலம் பொருந்தியதாகவோ, கடினபதார்த்தம் பொருந்தினதாகவோ, எலும்புகள் நிறையப்பெற்றதாகவோ, சிப்பி ஓடு முதலியன அமையப் பெற்றதாகவோ இராவிட்டால் அது அப்படியே சமையும் மார்க்கத்தைப் பெற்றிராது. பூகர்ப்ப சாஸ்திரிக்கு இன்று உலகிலுள்ள பல ஆயிரக்கணக்கான எலும்பில்லா ஜந்துக்கள் ஏதாமொரு சிலாசாசனங்களை (வருங்கால சாஸ்திரிகளுக்கு) வைத்துச் செல்லமாட்டது. வருங்கால உலகத்தில் இத்தகைய ஜீவராசிகள் வாழ்ந்து, பெருகியாதாமொரு சாதனங்களையும் வைக்காது சென்று விடும். எஸோயிக் காலாவதியில் இத்தகைய எலும்பற்ற பிராணிகள் இருந்திருக்கலாம். அழுக்கடைந்த தாவரங்களும் இருந்து, கடற்கரையோரங்களிலும், பாறைகளிலும் தங்கி இருக்லாம். எப்படி ஒரு கரைகளின் தோற்றங்களைக் கண்டு நாம் பூமியை உணருகிறோமோ அப்படியே நாம் சகலமானவற்றையும் அறிந்து கொள்ளலாம். ஒரு காலத்திலுள்ள கற்பாறைகளில் ஒரு வித ஈயமும், கரியும் அமைந்திருந்தது என்ற இஃது இறந்த பிராணிகளினின்று சேர்க்கப்பட்டதென்றும் ஒருசில அறிஞர்களால் கருதப்படுகின்றது.

[இந்த அத்தியாயத்திலிருந்து உலகில் ஜீவராசிகளின் தோற்றங்கள் கற்பாறைகளில் பதிந்த உருவங்களைக் கொண்டும், ஜீவராசிகள் இறந்தொழியுங்கால் தங்கள் சடலத்தை விட்டுப்போக அதில் மண்குவியல்கள் சேர்ந்து அந்த ரூபத்தின் அழிவை ஏற்படுத்தாததால்அப்படியே அது சமைவதற்கு உறுதுணையாயிருந்ததைக் கொண்டும், நிர்ணயிக்கப் படுகின்றது. ஆகவேசிலாசாசனங்கள் தான் நமது ஆராய்ச்சிக்கு உறுதுணையாக இருக்கிறது. சிலாசாசனங்களைப்பற்றிய ஆராய்ச்சிகளில் மேலும் தொடர்ந்து செல்வாம். மொ—ர்]

தீபாவளிப் பண்டிகையால் நாம் அடைந்த தீமைகள்

(சென்னை தோழர் கே. கல்யாணசுந்திரம்)

தீபாவளி என்னும் பண்டிகையானது சமீபத்தில் அதாவது நவம்பர்மாதம் 6ம் தேதி வரப்போகின்றது. அது முக்கியமாக இந்துக்களால் சிறந்த முறையில் கொண்டாடப் படுவதாகும். தீபாவளி சமயங்களில் காங்கிரஸ் பக்தர்கள், தங்கள் சுயநலங்கருதி, கதர் விற்பனைக்காக தீபாவளி பண்டிகையைப்பற்றி தீவிரமாகப் பிரசாரம் செய்வது வழக்கம். ஆனால் இந்த வருஷத்தில் பிரசாரத்துக்குத்தடை ஏற்பட்டிருக்கின்றது. இதற்கு முக்கிய காரணம் காங்கிரஸ்வாதிகள் தீவிரமாகத்தேர்தல் பிரசாரத்தில் இறங்கியிருப்பதே. ஒரு விதத்தில் தேர்தல், தீபாவளி சந்தர்ப்பத்தில் வந்ததேன நானும், என்னைப்போன்ற சுயமரியாதை இயக்கத்தினரும் ஆனந்தமடைய வேண்டியதே.

வரப்போகும் தீபாவளியை அனேகபுது மாப்பிள்ளைகள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். மாப்பிள்ளைக்கு பெண் கொடுத்தவர்களும் தீபாவளியைக் குறித்துதிகில் அடைந்துள்ளனர். ஏன்? மாப்பிள்ளையைத்தகுந்த மரியாதைசெய்து திருப்திபடுத்தவேண்டுமே. அப்படி திருப்தி செய்யாவிடில் எங்கு தனது பெண்ணை இம்சிப்பானோ என்ற ஒரு அச்சமும் அவர்களுக்குள் உண்டு. சாதாரணமாய் எந்த மாப்பிள்ளையும் தீபாவளியில் தனது மாமனார், மாமியார் வீட்டின் மேல் திருப்தி அடைவதில்லை. இதற்குக் காரணம் மாப்பிள்ளை அதிகமாய் எதிர்பார்ப்பதைப் போல் பெண்வீட்டார் செய்யாதது.

செல்வம் உள்ளவர்கள் மாப்பிள்ளைக்கோ, அல்லது தீபாவளி பண்டிகையின் பட்டாசுக்கோ, வாணங்களுக்கோ செலவிடுவதை நான் ஆக்ஷேபிக்கவில்லை. உள்ளவர்கள் எவ்வளவு வேண்டுமானாலும் செலவழிக்கட்டும், செலவழித்துச்செலவழித்து அவர்களது குடும்பமே தீபாவளியாய் போனாலும் போகட்டும் அதைப்பற்றி நமக்குக்கவலை இல்லை. ஆனால் தீபாவளியைக்கொண்டாடும் மக்கள் அனைவரும் தீபாவளியின் கதையைஉணர்ந்தவர்கள் என்று சொல்வதற்கில்லை. கொண்டாடுபவர்களில் சிலருக்குக் கதை தெரிந் திருக்கும், சிலர் தனது முன்னோர் கொண்டாடினார்கள் என்ற ஒரு மூடத்தனமான கொள்கையால் கொண்டாடுகிறார்கள். சிலர் எல்லோரும் அனுசரிக்கின்றார்கள் நாமும் அனுசரிப்போம் என்ற குருட்டுத்தனத்தோடு அனுசரிக்கின்றனர்.

நாம் சற்று தீபாவளி சம்பந்தமாக புராணத்தில் எழுதிய கதையை ஆராய்வோம்.

"இரண்யாக்கன் என்பவன் ஒரு காலத்தில் பூமியைப்பாயாக சுருட்டி கடலில் ஒளித்துவைத்துவிட்டானாம். அதை மகா விஷ்ணு (ஆரியன்) பார்ப்பனரல்லாத இரண்யாக்கனைக் கொன்று பூமியை நிலைக்கச் செய்தானாம். பிறகு பூமிதேவி விஷ்ணுவின் மேல் காதல் கொண்டாளாம்! பிறகு இருவருக்கும் விவாகம் நடந்தேறியதாம் இருவருக்குமாக ஒரு ஆண்குழந்தை ஜனித்ததாம். அவன் பெயர் நரகாசூரனாம். அவன் பிராக்ஜோதிஷம் என்னும் நகரத்தை ஆண்டுவந்தானாம். ஆண்டு வரும்போது அவன் தேவர்களையும், ரிஷி பத்தினிகளையும், இதர பெண்களையும் துன்புறுத்தினானாம். துன்புறுத்தவே அவர்கள் எல்லோரும் சென்று விஷ்ணுவிடம் முறையிட்டனராம். முறையிடவே விஷ்ணு, கிருஷ்ணாவதாரத்தில் நரகாசூரனைக்கொன்று விடுவதாக வாக்களித்தாராம், வாக்களித்தபோது பூமிதேவி தன்னையும் உடன் வைத்துக்கொண்டு நரகாசூரனைக் கொல்ல வேண்டுமென்று கேட்டாளாம், அதற்கும் சம்மதித்தாராம் விஷ்ணு. பிறகு விஷ்ணு கிருஷ்ணனாகவும், பூமிதேவி சத்தியபாமையாகவும் ஜனித்து, ஒரு தீவில் வசித்து வந்த நரகாசூரனைக்கொன்றனாம். நரகாசூரன் இறக்கும்போது தன்னை உலக மக்கள் கொண்டாட வேண்டும் என்ற வரத்தைக் கேட்டானாம். அதன்படியே ஈந்தாராம்." இது நான் தீபாவளியைக் குறித்து புராணங்களில் குறிப்பிட்ட கதையாகும்.

இந்துக்கள் கொண்டாடும் ஒவ்வொரு பண்டிகைக்கும் ஒவ்வொரு கதை உண்டு. அவைகள் அனைத்தும் பகுத்தறிவுக்கு புறம்பானதே இப்பொழுது தீபாவளியின் கதையை பகுத்தறிவினால் ஆராய்வோம். ஏதாகிலும், கடுகளவேனும் பகுத்தறிவுக்கு சம்பந்தப்பட்டிருக்கின்றதா எனப் பரிசோதிப்போம்.

பூமி என்பது பூகோள சாஸ்திரப்படிக்கு உருண்டையானது. உருண்டை என்று கண்டுபிடித்த பூகோள ஆராய்ச்சியாளர்கள் பல உதாரணங்களோடு அதைவிளக்கியுள்ளனர். இதைச்சர்க்காரே ஒப்புக்கொண்டு, பள்ளிக்கூடங்களிலும் பூமிஉருண்டைஎன்று

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.

திருவிழாக்களும், பண்டிகைகளும்.

(திருச்சி தோழர் T. S. சாம்பசிவம்.)

நமது நாட்டில் மக்கள் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கிற பணமெல்லாம் பெரும்பாலும் மதத்தின் பெயரால் கோவில்களுக்கும், அவைகளில் நடக்கும் திருவிழாக்களுக்கும், இன்னும் பண்டிகைத் தினங்களுக்கும் பழைய மூடப் பழக்க வழக்கங்களுக்கும், ஆபாசமான சாஸ்திரங்களுக்குமே ஏராளமாக செலவழிக்கின்றனர். அந்தச் செலவினால் நாட்டிற்கோ, மக்களுக்கோ கடுகளவாவது பயனுண்டு என்று கூற முடியாது.

திருவிழா

திருவிழா என்பது கோவில்களில் சாமிகளுக்கு நடக்கும்உற்சவத் தினங்களாகும். அத் தினங்களில் சாமிகளை நன்றாய் அலங்கரித்து வைத்திருப்பார்கள். அப்பொழுது சாமியைப் பார்க்கவேண்டுமென்று பாமர மக்கள் ஆணும் பெண்ணுமாக கும்பல் கும்பலாய் கூட்டத்தில் கஷ்டப்பட்டு இடிபட்டு சாமியைப் பார்க்கப் போகிறார்கள். நமது பாழும் நாட்டில் ஒரு பெண் 4, 5, ஆடவர்கள் கூடி இருக்கிற இடத்திற்கு வரக்கூடாதென்றும், அவ்விதம் போனால் அவர்கள் கற்பு அழிந்து விடுமென்றும் பெருங் கூச்சல் போடும் வைதீகர்களின் மத்தியில் அதே பெண் படும்பாடு அந்தோ! சொல்லத்தரமன்று. அநேக கும்பலுள் பெண்கள் சிறிது மேல் உராய்ந்தால் இச்சை தீராதா என ஏங்கி நிற்கும் சோதாக்கள் நிறைந்த விடத்திற்குச் சென்று இடிபட்டு சாமி தெரிசனம் செய்யலாமாம். அப்பொழுது மாத்திரம் அவர்களுடைய கற்பு அழியாதாம். கோவில் சன்னதிக்குள் உற்சவ தினங்களில் ஆடவர்கள் மாதரின் மேல் விழுந்து நெருங்கித் தள்ளும் செய்கையும், அர்ச்சகர்கள் மாதர்களின் கையோடு கைபோட்டு கொடுக்கும் பிரசாதமும், இன்னும் மற்ற அநீத செய்கைகளும் நடக்கிற இடத்திற்கு மாத்திரம் போய் வரலாமாம்.

இக் காலத்து கல்வி கற்ற பகுத்தறிவுள்ள பெண்கள் கோவிலில் சாமிகளின் பேரால் நடக்கும் அட்டூழியங்களைப் பார்த்து கோவிலுக்கு போவதை மறுத்தால் உடனே வந்து விடுகிறது கோபம் தாய் தகப்பன்மார்களுக்கு. "இது கலி காலப் போக்கு, இந்தக்காலத்து நாகரீகம், டிராமா, சினிமா, கடற்கரை, பாட்டுக் கச்சேரி முதலிய இடங்களுக்குச் சென்று ஆடவருக்குச் சரியாய் சோபாவில் அமர்ந்து பல்லிளித்துக் கொண்டிருக்கலாம், கோவிலுக்குப் போய் சாமி தரிசனம் செய்துவிட்டு வரச் சொன்னால் சாகிற கிழங்களுக்குச் சட்டம் கூற வந்து விட்டீர்கள்" என்று ஏளனம் செய்கிறார்கள்.

மேலும், இத்திருவிழாக்காலங்களில் எவ்வளவு திருட்டுகளும், உயிர்ச்சேதமும் உண்டாகிறதென்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. உதாரணமாக நான் என்னுடைய அனுபவத்தில் நடந்த சம்பவத்தை இங்கே சொன்னால் அது பொருத்தமாயிருக்கும். மூன்று நான்கு வருடங்களுக்கு முன்பு எங்கள் குடும்பத்தோடு இராமேஸ்வரம் போயிருந்தோம். ஆடி அமாவாசை காலமானபடியால் ஜனங்கள் ஏராளமாக வந்திருந்தனர். அன்று பகல் பத்து மணிக்கு சாமிக்கு அபிஷேகம் நடந்தது. அப்பொழுது ஜனங்கள் தள்ளிக்கொண்டும் இடித்துக் கொண்டும் போய்க் கொண்டிருந்தார்கள். அத்தருணத்தில் ஜனங்கள் பட்ட கஷ்டம் மிக அதிகம். அக்கும்பலின் நடுவில் ஒரு பெண் சிறு குழந்தை ஒன்றை இடுப்பில் வைத்துக்கொண்டு சாமி தரிசனத்திற்காக இடித்துக்கொண்டு போய்க்கொண்டிருந்தாள். வழியில் அக் குழந்தைக்குப் போட்டிருந்த காப்பு களவு போயிற்று. உடனே அப் பெண்மணி கூட்ட நடுவில் ஓரே கூக்குரலிட்டுக்கொண்டு இடியின் அவஸ்தை பொறுக்கமாட்டாமல் தன் குழந்தையை இடுப்பிலிருந்து கீழே இறக்கினாள். அவ்வளவுதான் குழந்தை சரியான மிதிபட்டது. குழந்தையைத் தூக்கிப்பார்த்ததில் அது திக்குமுக்காடிக் கொண்டிருந்தது. அரை மணிநேரத்தில் குழந்தை உயிர் நீத்தது. இதுதான் நான் அத்திருவிழாவில் கண்ட காட்சியாகும்.

ஆக, நாம் வாழ்ந்து வரும் சமூக அமைப்பும், மூடப்பழக்க வழக்கங்களும் நம்மைக் கோழைகளாக்கி விட்டன. அறிவற்றவர்களாகச் செய்து விட்டன. நாம் எந்தக் காரியத்தையும் ஆராய்ந்து பார்த்து ஒரு காரியத்தில் இறங்கப்பழகவில்லை. அனேக வருஷமாகத்தான், பல, தேர் திருவிழாக்கள், பூசைநைவேத்தியங்கள், தீர்த்தயாத்திரைகள் அமாவாசைப் புண்ணிய தினங்கள் கொண்டாடினோம். பலன் என்ன? யாருக்கேனும் ஒரு வேளை உணவு கிடைத்ததா? இருக்க இடமளித்ததா? உடுக்க உடையளித்ததா? ஒண்ட நிழலீந்ததா? ஒன்றையும் காணோமே! ஆனால் இந்தப்பலனெல்லாம் பூணூல் தரித்த பெருச்சாளிகளே சாப்பிடுகிற

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.

அண்ணாமலை சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவில், திவான்பகதூர் கிருஷ்ணய்யர் பிரசங்கம்.

அண்ணாமலை சர்வகலா சாலை பட்டமளிப்பு விழா 30-10-34ந்தேதி நடைபெற்றது. அத்யட்சகரான சென்னை கவர்னர் சர். பிரடரிக் ஸ்டான்லி தலைமை வகித்தார். சென்னை சட்டசபை காரியதரிசியான திவான் பகதூர் ஆர். வி. கிருஷ்ணய்யர் புதிய பட்டதாரிகளுக்கு செய்த பிரசங்கத்திலே குறிப்பிட்டதாவது

அண்ணாமலை சர்வகலாசாலை மசோதா சட்டசபையிலே விவாதத்திற்கு வந்தபோது, உயர்தரப்படிப்பால் பயனென்றுமில்லை என்றும், ஒருவேளை சாப்பாட்டிற்குக்கூட உபயோகமில்லாத படிப்பு தேவையில்லை என்றும் சிலர் கூறினர். கல்வியை விலைக்கு விற்கக்கூடாதென்பது தர்மமாகும். லாபகரமான தொழில்களிலேயே, பணம் திரட்டுவதிலேயே கவனம் செலுத்தக்கூடாதென்பதும் பிராமணர்களுக்கிட்டுள்ள கட்டளை. அவர்கள் கல்வியை ஏகபோக மாக்கிக் கொண்டார்கள். இதர ஜாதியினர், மற்ற லாபகரமான தொழில்களை ஏகபோக மாக்கிக்கொண்டார்கள்.

கல்வியில் மாறுதல்.

இங்கிலீஷ் கல்வி இந்தியாவில் ஏற்பட்டதும் கல்வியிலே பெரும் மாறுதலேற்பட்டது. ஐரோப்பிய இலக்கியம், சரித்திரம் முதலியவைகளைப்படித்தும் ஐரோப்பாவிலுள்ள ஆட்சிமுறை ஸ்தாபனம் இவைகளே வேண்டுமென இந்தியர்கள் ஆர்வம் கொள்ளலாயினர். சர்க்கார் நிர்வாக பதவிகளை வகிக்க மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காகவே இங்கிலீஷ் கல்விமுறையை இந்தியாவிலே ஏற்படுத்தினர். இது ஏற்பட்டது 1827ம் வருஷத்தில். ஆயிரக்கணக்கானவர்கள் சர்வகலாசாலை பட்டங்கள் பெற்றார்கள். சர்க்கார் உத்தியோகமே இவர்களது கல்வியின் லட்சியம். சர்க்கார் இலாக்காகளும் விரிவாகி வந்ததால் பலருக்கும் வேலை கிடைத்தது. ஆனால் சர்க்காரின் தேவைகளுக்கு மேல், பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது. 1835ம் வருஷம் கோர்ட்டு பாஷை பாரசீகத்திலிருந்து இங்கிலீஷாக மாறியது. படித்தவர்கள், சட்ட கல்லூரிகளில் பயின்று வக்கீல்களானார்கள். வக்கீல்கள் எண்ணிக்கை அதிகரித்து விட்டது. 1865ம் வருஷத்திலேயேவக்கீல்கள் எண்ணிக்கை அதிகரித்து விட்டதாக சர். ஹென்ரி மெயின் கூறியது குறிப்பிடத்தக்கதாகும். படித்த வேலையற்றோர் எண்ணிக்கை அக்காலத்திலேயே அதிகமாக இருந்திருந்தும் சர்வகலாசாலைகளிலிருந்து வருஷா வருஷம் ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் வெளிவருகிறார்கள். உத்தியோகங்களுக்கு மனுப்போடுகிறவர்கள், வக்கீல் படிப்புக்குச் செல்பவர்கள் இவர்களின் எண்ணிக்கையோ அதிகமாக இருக்கிறதே யன்றி, தனிப்பட்ட தொழில்நடத்துமுன்வரும்பட்டதாரிகளின் வீதாசாரம் மிக மிகக் குறைவாகவே இருந்து வருகிறது.

பெற்றோர் கடமை

இவ்வித நிலைமைக்கு மாணவர்கள் பொறுப்பானவர்களல்ல. பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர்களின் பெற்றோர்கள், நிலைமையின் உண்மையை அறிந்து அதற்குத் தக்கபடி, மாணவர்களின் எதிர் கால வாழ்வை நிர்ணயித்து, தக்க வழியில் திருப்ப வேண்டுமென்றும், பெற்றோர்கள் இவ் விஷயத்தில் பாராமுகமாக இருப்பதே, வேலையில்லாக் கஷ்டத்தின் முக்கிய காரணங்களிலொன்றாகு மென்றும், 1926௵ சென்னை சர்க்கார் வேலையற்றோர் விசாரணை கமிட்டி கூறி யிருக்கிறது.

புதிய முறை வேண்டும்

தற்போதைய கல்வி முறையானது, நூறு வருஷங்களுக்கு முன்பாக, அக் காலத்திலிருந்த தேவைக்கான முறையில், தயாரிக்கப்பட்டது. இப்போது நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. தற்கால தேவைக்கு அச் கல்வி முறை உகந்ததல்ல. சாதாரண வாழ்க்கைக்கும், பொது ஜனங்களின் அனுஷ்டிக்கும் தொழிலுக்கும் உகந்ததல்லாத, உதவியளிக்காத எவ்வித கல்வி முறையும் நீடித்திருக்க முடியாது. இந்தியாவிலே உயர்தர படிப்பானது, சென்ற நூற்றாண்டில் சீமையிலிருந்த கல்வி முறையைப் பின் பற்றி அமைக்கப்பட்டது. தொழில் கல்விக்கு அதில் இடமில்லை. தற்கால சமுதாயம் தொழிலையும், ரசாயன ஆராய்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டிருப்பதால், பள்ளிப் படிப்பிலே அனுபவத்திற்குகந்த தொழில் ரசாயன கல்விகளை எவ்விதமாவது புகுத்தவேண்டும். தேசத்திற்கு லாபகரமான முறையில் சர்வகலாசாலைக்கல்வி யிருக்குமாறும், சமுதாயத்திற்கு உபயோகமளிக்குமாறும், வேண்டியது அவசியமாகும். இதனால் சர்வ கலாசாலை வாழ்வும் மேம்பாடடையும். இங்கிலாந்திலே சமீபத்திலேற்பட்டுள்ள பல கல்லூரிகளிலும் தொழில் கல்வியை அளிக்கிறார்கள். லிவர்பூல், மருந்து வகைகளும் லீட்ஸ் கல்லூரி, நெசவு தொழிலும் ஷெப்பீல்ட் கல்லூரி உலோக வகைத் தொழில்களிலும் கல்வியளிக்கிறது. ஐரோப்பாவிலுள்ள இதர கல்லூரிகளிலும் இதே முறையைப் பின் பற்றுகிறார்கள்.

தொழில் கல்வி

வெறும் இலக்கிய கல்வி புகட்டுவதை நிறுத்தி, தொழில் கல்வியை அதிகமாக கல்லூரிகளில் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்பதை இப்பொழுது யாவரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். பல கமிஷன்கள், கமிட்டிகள், பிரபலஸ்தர்கள் முதலியவர்களும் சர்க்காரும் இதன் அவசியத்தை எடுத்துக் கூறி யிருக்கிறார்கள், அண்ணாமலை சர்வகலாசாலை மசோதாவில் தொழிற்கல்விப்பயிற்சி விதி இருக்கிறது. ஆனால் தொழில் கல்வி பயிற்சி அளிக்க ஏராளமான பணம் வேண்டுமானதாலும், இச் சர்வ கலாசாலை ஏற்பட்டு சொற்ப வருஷங்களே ஆகிறதாலும், அச் கல்வியைப் புகட்ட ஏற்பாடு செய்ய முடியாதிருக்கிறது,

என் இஷ்டப்படி நான் செய்ய முடியுமானால், அண்ணாமலை சர்வகலாசாலையில் தமிழ்நாடு அனைத்திலுமுள்ள கல்லூரிகளைச் சேர்த்துக்கொண்டு ஆராய்ச்சி செய்ய வசதிகளையும் ஏற்படுத்தி, ஆந்திரா சர்வ கலாசாலையைப்போல் ஆக்குவேன். சென்னை நகர எல்லையிலுள்ள எல்லா கல்லூரிகள் மட்டு மடங்கிய, சென்னை சர்வகலாசாலையையும், கேரளத்திற்கு தனியாக ஓர்சர்வகலாசாலையும் ஏற்படுத்தி, 4. சர்வகலாசாலைகளும், உபயோககரமாக ஒத்துழைக்க ஏற்பாடு செய்வேன்.

தொழிற் கல்வி அளிப்பதால் மட்டும் எல்லாருக்கும் வேலை கிடைத்து விடாது. தொழிற்சாலைகளும், வியாபார ஸ்தலங்களும் அதிகமாகப் பரவவேண்டும். அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசங்களில் தொழிற்கல்வி அளித்தும் கூட அங்கு வேலையில்லாதவர்கள் பலர் இல்லாமலில்லை.

எனவே வேலையில்லாக் கஷ்டமென்பது கல்வியையே பொருத்ததாக இருக்கிறதென்று கூறிவிட முடியாது. அரசியல், சமுதாய, பொருளாதார பிரச்சினைகள் அதற்குக் காரணமாகவும் இருக்கின்றன. வேலைசெய்யப் போதியதுறைகளும் இடங்களுமில்லாததே இதன் உண்மைக் காரணம். தொழிற் கல்வி அளிப்பதால் மட்டும் வேலையில்லாக்கஷ்டத்தை நிவர்த்தித்து விடவிமுடியாது. இச்சர்வ கலாசாலையைப் பொறுத்த மட்டில் வேலையில்லாக் கஷ்ட பிரச்னை அவ்வளவு முக்கியமாக இல்லை. உத்தியோகங்களுக்காகவே உயர் தரப்படிப்புப் படிப்பதென்னும் எண்ணம் இது வரை இருந்து வந்தது' இதை மாற்ற வேண்டும். பொறுப்புள்ள பிரஜையாக இருக்கவே உயர்தரக் கல்வி அத்தியாவசியமென்று கொள்ளவேண்டும்.

திறமை வாய்ந்த பல மாணவர்களுக்கு வைத்தியக் கல்லூரி, இஞ்சினீரிங் கல்லூரி முதலியவைகளில் அனுமதி மறுக்கப்படுகிறது. இவ்வித தடையை நீக்க வேண்டுவது அவசியமாகும்.

இங்கிலீஷ் படித்தவர்கள் தனி ஜாதியாகிவிட்டார்கள். மற்ற பாமர பொது ஜனங்களின் வாழ்க்கை விவரங்கள் அவர்களுக்குத் தெரியாது. பாமரர்களிடம் அவர்களுக்கு அனுதாபமு மிருப்பதில்லை.

தேச பாஷைக்கல்வியை காற்றில் விட்டு விட்டதால், பொது ஜனகல்வியையும் கைவிட்டு விட்டதாகி விட்டது. எனவே இந்தியர்கள் ஏழ்மையும், கல்வி அறியாமையும் உலகப் பிரசித்தம். இம் மாகாண ஆண்களில் 100க்கு 84பேர்களுக்கும், பெண்களில் 100க்கு 97 பேர்களுக்கும் எழுதப் படிக்கக் கூடத் தெரியாமலிருக்கிறது. கிரகணமென்பது ராகு, கேது எனும் இரு பாம்புகள் சூரியனையும் சந்திரனையும் விழுங்குவதாலேயே ஏற்படுகிறதென்றும் நம்மில் பெரும்பாலோர் இன்னும் நம்பி இருக்கிறார்கள். சில ஜாதியினரை தீண்டினாலும் நெருங்கினாலும் தீட்டுப்பட்டுவிடுமென்றும், தொத்து வியாதிகள் தேவதைகளின் கோபத்தாலேயே ஏற்படுகிறதென்றும் மதிக்கிறார்கள். தாய் பாஷைக் கல்வி பெரிதும் நிராகரிக்கப்பட்டு வந்திருக்கிறது. பொதுஜன கல்வியாலே ஏற்படக்கூடிய நன்மைகள் பல வாகும். குற்றங்கள் குறையும். சுகாதாரம் அதிகரிக்கும். விவசாயிகளின் கடன் தொல்லை மட்டுப்படும் ஓட்டர்கள் தக்கபடி புத்திசாலித்தனமாக ஓட் செய்வர். இதனால், நிர்வாகமும் சுலபமாகும் படிப்பில்லா தேசத்திற்கு அரசியலென்பதுகிடையாது. தேசிய உணர்ச்சியும் ஏற்படாது. எனவே குழந்தைகளுக்கு மட்டுமன்றி, படிப்பில்லா ஆட்களுக்குகல்வி புகட்ட வேண்டும்.

ரஷியாவில்

குழந்தைகளுக்கு கட்டாய ஆரம்பக்கல்வி அளிக்க வேண்டுமென்பதை யாவரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். 1931௵த்தில், 5 முதல் 20 வயதுள்ள 7817768 சிறுவர்களும், 7793138 பெண்களுமிருக்கின்றார்களென்றும், அதில் 1003084 சிறுவர்களும், 266262 சிறுமிகளுமே எழுதப்படிக்கத் தெரிந்தவர்களென்றும் கணக்கெடுத்திருக்கிறார்கள். இவ்விஷயத்தில் முக்கிய பொறுப்பு ஸ்தல ஸ்தாபனங்களைச் சேர்ந்ததாகும். சோவியத் ரஷியாவில் 15 வருஷ காலத்திற்குள்ளாக கல்வி அறிவைப் பரப்பி அறியாமையை போக்கி விட்டனரென்பது குறிப்பிடத்தக்கது. விவசாயிகள் விடுதிகள், சங்கங்கள், புத்தகசாலைகள், ரேடி

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.

"தென்னாட்டில் பெண்கள் நிலை"

சுயமரியாதைப்பெண்கள் இனியும் செய்யவேண்டியதென்ன?

சங்கங்களின் அவசியம்.

(சாக்கோட்டை தோழர் எஸ். ஆர். சாமி)

முன்பு ஒருதடவை "தாய்நாடுமுன்னேற்றமும், சுதந்திரமும், வீரமும் அடைய வேண்டுமானால் தாய்மார்களுக்குக் கல்வி சுதந்திரம் வேண்டும்" என்ற தலைப்பில் ஒருகட்டுரை "குடிஅரசு" மூலமாக நான்வெளியிட்டிருந்ததுவாசகர்களுக்கு ஞாபகமிருக்கும். தற்காலம் நம்நாட்டின் பெண்கள் நிலை முன்னேயதின் அவசியத்தில் தானிருக்கிறதென்றாலும், தனியே பெண்களுக்கென நமதியக்கத்தின் சார்பாக சில சங்கங்களிருத்தல் வேண்டுமெனவும் குறிப்பிடவேண்டியிருக்கிறது. நமது நாட்டைப் பொறுத்தவரையில் நமது இயக்கத்தின் சார்பாக சுயமரியாதைச்சங்கங்களும், சமதர்மச்சங்கங்களும், உண்மை நாடுவோர், சீர்திருத்தச் சங்கங்களெனவும், பல வாசகசாலைகளும் இருந்து வருகின்றன. அவைகளில் சுமார் 180 சங்கங்களிருப்பதாகவும், கணக்கிடப்பட்டிருக்கிறது. அவைகளில் பெரும்பாலும் ஆண்கள்தான் கலந்து கொண்டு சேவை செய்கிறார்கள்.

இவைகளில் ஒன்றாவது பெண்கள் சங்கமிருப்பதாகத்தெரியவில்லை. ஷை சங்கங்களில் பெண்களும் கலந்து கொள்ளலாமென்ற தாராள நோக்கங்கள் ஷை சங்கங்களில் இருந்து வந்தபோதிலும், அந்தப்படி குறிப்பாக சில பெண்மணிகள் கலந்து கொண்டாலும், பெண்கள் சங்கம் என்றதலைப்பில் அவர்களின் சங்கங்கள் இருக்கவேண்டியதானது நாடு இன்றுள்ள நிலைமையில் மிக்க அவசியமெனத்தோன்றுகிறது என்பதுடன் அது மிகவும் சாலச்சிறந்தது எனவும் தோன்றுகிறது. ஏனெனில் பெண்கள் சமூகத்திலுள்ள சிக்கல்களையும், சீர்திருத்தப்படவேண்டிய விஷயங்களையும் தாராளமாக எடுத்துப்பேசவும், அந்தப்படி சீர்திருத்திக் கொள்ளவும், அவர்களுக்குச சுதந்திரமிருக்கவேண்டுமென்பதுடன் படித்தவர்கள், அல்லாதவர்கள் சங்கநோக்கங்களை பேசவும், கேட்கவும் பழகக்கூடும். பெண்கள் என்ற தலைப்பில் ஜாதி, மதம் பாவித்து பல பத்துக்கணக்கான சங்கங்களையாவது நிறுவ இயலாதா என்பது எனது விருப்பம்.

சுயமரியாதை இயக்கத்தில், அதன் சங்க அலுவல்களில் ஆண்களும, பெண்களும், கலந்து கொள்கின்றார்களென்றாலும், அதற்கு இஷ்டமும், பெருநோக்கமும் கொண்டவர்கள் தான்கலந்துகொள்கின்றார்களேதவிர மற்ற எவ்வளவோ பெண்மணிகள் யோசனைதான் செய்கிறார்கள். அந்தப்படி யோசனை செய்வதும் மூர்க்கர்கள் இருக்கிற இந் நாட்டில் அவசியந்தானென்பதும், ஆண் சமூகத்தினுடன் வெளியில் வந்து பழகாததும் ஒரு காரணந்தானென்பதும் சொல்லத்தேவையில்லை, இந்தப்படிபலர் ஒதுங்கியேகாலங்கழித்து விடுவதால் அச்சமூகத்திலுள்ள பழய மூடவழக்கங்களிலுள்ள முரட்டுப்பிடிவாதங்களும், மதம், கடவுள் மறுஜென்மம், விடுதலை, சாஸ்திரம், பக்தி, விரதம் ஆகிய இவைகள் அப்படியேயிருந்து வருகின்றன. தவிர பெண்களுக்கெனவேறு சங்கங்களைப் பார்க்கவேண்டுமானால் சென்னை இந்திய மாதர் சங்கமும், விதவைப் பெண்களுக்கு விவாகம் கூடாதெனதீர்மானிக்கும் ராஜூப்பெண்களின் சங்கத்தையும்தான் காணமுடிகிறது. என்பதுடன் இந்திய மாதர் சங்கத்தின் கிளைகளும் நம் நாட்டில் ஏதோ இரண்டு, மூன்று இடங்களிலிருப்பதாகவே தெரிகிறது.

ஆனால் சுயமரியாதை இயக்கத்தின் முழு கொள்கையோ அல்லது ஒரு பாகத்தையோ நோக்கமாகக் கொண்ட சங்கங்களை நிறுவி அதன் மூலமாக அச்சமூகத்தினரை பிடித்திருக்கும், குருட்டு நம்பிக்கைகளையும், வழக்கம், தலைவிதி இவைகளிலுள்ள ஆபாசங்களையும்ஆண்சமூகத்தினரால் பெண் சமூகத்திற்கிருக்கும் இன்னல் வஞ்சம், முதலியவைகளை எடுத்துக் கூறி சம சுதந்திரத்துக்கும், சுயேச்சைக்கும் பாடுபட சுயமரியாதை இயக்கத்தால்தான்—அதில் கலந்துள்ள பெண்மணிகளால் தான் முடியுமே ஒழியவேறு எந்த இயக்கத்தாராலும், பெண் சமூகம் முன்னேறமார்க்கமில்லை என்பது எனது துணிபு. இன்று நம்நாட்டில், எவ்வளவோ பெண்மணிகள், மறுமணம், கலப்புமணம், சுயமரியாதைமணம், சீர்திருத்தமணம், பார்ப்பனீய மொழிந்தமணம் செய்து கொண்டவர்களும், செய்து வைக்கிறவர்களும், அதற்காக பிரசாரம் செய்பவர்களும்; இல்லாமலில்லை. உதாரணமாக நமதியக்கத்தின் தோழர்களான;—எஸ். குஞ்சிதம், எஸ். நீலாவதி, பி. இந்திராணி, எஸ். ஆர். கண்ணம்மாள், ஆர். அன்னபூரணி, ராமாமிர்தத்தம்மாள், எம். மரகதவல்லி, எல். ஆர். ரெங்காயகி, சி. ரெங்கம்மாள், முதலியவர்களும், பிரசாரகர்களல்லாத தோழர்களான ஆர். விசாலாட்சி, பொன்னம்மாள், ஏ. சுந்தரி, ஆர். அஞ்சுகம், சி. சிவகாமி, எஸ். மேரி, பி. மகாலெட்சிமி, மஞ்சுளாபாய் போன்ற தோழர்களும் இருக்கிறார்கள். எல்லோருக்கும்பிரசாரம் புரிய வன்மையும், வசதியும், சௌகரியங்களுமில்லா விட்டாலும், பல சங்கங்களை நிர்வகிக்கவும், அங்கத்தினர்களை ஒவ்வொருவராகச் சேர்க்கவும், அவர்களுடன் கலந்து பேசவும், சௌகரியம் ஏற்படலாம்.

சமீபத்தில் நடந்த காரைக்குடி முனிசிபல் சபைத்தேர்தலில் பெண்கள் தொகுதிக்கு அபேட்சகராக நின்று பலத்த போட்டிக்கு இடையே தேர்ந்தெடுக்கப்பெற்ற தோழர் மு. மரகதவல்லியம்மாள் அவர்கள். இராமநாதபுரம் ஜில்லா கல்வி சபையிலும் இவர்கள் அங்கம் வகித்து வருகிறார்கள்.

நம் நாட்டில் பெண்கள் ஓய்வு நேரங்களில் வெளியில் வருவதென்றாலே அஞ்சுகிறார்கள். ஐரோப்பிய, ஆங்கிலோ—இந்திய மாதர்கள் இந்தப்படி அஞ்சுவதில்லை. உத்தியோகங்களிலும், பெரும்பதவிகளையும், வகித்து திறமையுடன் நடந்து கொள்கிறார்கள். எங்காவது விஷமிகள் ஏதாவது கெட்ட எண்ணத்துடன் நடக்க முயன்றால் அவர்களுடைய பூட்ஸ் கால்தான் அவ்விஷமிகளின் கன்னத்திற்குப் போகும். அதேமாதிரி சீக்கியப் பெண்களும் வெளியில் வர அஞ்சுவதில்லை. அவர்கள் ஒவ்வொருவரிடமும், ஒரு ஆயுதமிருக்கும். நம் நாட்டுப் பெண்கள் ஏதாவது எதிர்பாராத சம்பவங்களில் சிக்கிக்கொண்டால் ஒன்று ஆண்களுடைய உதவியை நாடவேண்டும். அல்லது ஓடி ஒளிய வேண்டும். இந்நிலையில்தான் பெரும்பாலரான பெண்களின் வீரமும், சுதந்திரமும் இருந்து வருகிறது.

நான் கூறுவது யாதெனில், பொதுவாக ஒவ்வொரு பெண்களிடமும், சிறப்பாக நமதியக்கப் பெண்மணிகள் ஒவ்வொருவரிடமும், தற்காப்புக்காக, ஒரு ஆயுதம் இருத்தல் அவசியம். ஒழுங்கு மீறி, நடக்கப் பிரயத்தனப்படும்—நடக்கத் துணியும்ஒரு விஷமியை, மூர்க்கனை, காலியை அடக்கி விட்டுச் சிறைதண்டனை அனுபவித்து விட்டு வருவதில் முன்னையதை விடஇதில் சுயமரியாதை போய்விடும், சுயமதிப்பு, போய்விடும் என்று சொல்லுவதற்கில்லை என்பதுடன் அது ஒன்றும் கேவலமாய் விடாது என்றும் சொல்ல ஆசைப்படுகின்றேன்.

பெண்களின் முன்னேற்றத்தைப் பொறுத்துத்தான் ஒரு நாட்டின், முன்னேற்றம் என்பது கண்கூடு. அதற்காகத்தான் நாமும், நமது மகாநாடுகள் கூடும்பொழுது பெண்கள் மகாநாடு என்றும், பெண்கள் கூட்டம், பேச்சு, என்றும் கூட்டியும், பேசியும் வருகின்றோம் என்பதை ஞாபகமூட்டுகின்றேன். தவிரவும் ஆண்கள் மட்டும், சுதந்திரம், சமத்துவம், சமதர்மம் என்று கூச்சல் போடு

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

வெற்றி! வெற்றி!! வெற்றி!!!

சர். ஷண்முகம் வெற்றி பெறுவது நிச்சயம். சுமார் 150 ஓட்டுகள் மெஜாரிட்டியுடன் வெற்றி பெறுவார்.

சென்னை பெண்கள் சங்கத்தின் அறியாமை.

சென்னையில் இந்திய பெண்கள் சங்கம் என்பதாக ஒரு சங்கம் இருக்கின்றது. அது சென்னை செல்வவான்கள் பெண்களும் அதிகாரிகள் மனைவிகளும் வக்கீல் மனைவிகளும் பெரும்பான்மையாகக்கொண்டதாக—ஒரு சில ஸ்திரீகளைக் கொண்டதாக இருந்து வருகின்றது.

இந்த நாட்டுப் பணக்காரர்கள் ஜமீன்தார்கள் ஆகியவர்களுக்கு எப்படி உண்மையான விடுதலை தேவை இல்லையோ அதேபோல் இந்த பெண்களுக்கும் உண்மையான விடுதலை தேவை இல்லை என்பதோடு தெரிவதற்குக் கூட முடியாத நிலைமையில் இருந்து வருகிறார்கள்.

இந்த லக்ஷணத்தில் இவர்கள் அரசியல் துறையில் பிரவேசித்து தோழர் சத்தியமூர்த்தியை ஆதரிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள் என்றால் பெண்கள் சமூகத்துக்கு அதைவிட வெட்கக்கேடு வேறு இல்லை என்றுதான் சொல்லவேண்டும்:—

தோழர் சத்தியமூர்த்தி, அவர்கள் ஆண்களும் பெண்களும் சரி சமானமான சுதந்திரத்துக்கு அருகதையுடையவர்கள் என்பதையே ஒப்புக்கொள்ளுவதில்லை என்பதோடு சாஸ்திரங்களிலும், புராணங்களிலும் பெண்களுக்குள்ள இழிவையும், தாழ்வையும் அப்படியே நிலை நிறுத்தப் பாடுபடுகின்றவர் என்பது யாவரும் அறிந்ததேயாகும்.

உதாரணமாக தேவதாசித் தொழிலை ஒழிக்கக் கொண்டுவந்த சட்டத்தை எதிர்த்து தேவதாசித்தொழிலை ஆதரித்தார். தேவதாசிகள் இல்லாவிட்டால் தெய்வங்களுக்கு சக்தி குறைந்துவிடும் என்றும், ஆகமங்கள் கெட்டுவிடும் என்றும் பேசினார்

இரண்டாவதாக:—

குழந்தைகளுக்குக் கல்யாணம் செய்யக்கூடாது என்றும், குழந்தைப்பருவத்திலேயே பிள்ளை பெற விடக்கூடாது என்றும் கொள்கையுள்ள சாரதா சட்டத்தை A. ராமசாமி முதலியார் ஆதரித்து இந்தியா முழுவதும் சுற்றி அபிப்பிராயம் தெரிந்து வரும் காலத்தில் தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் "குழந்தைக் கலியாணம் கூடாது" என்று சட்டம் செய்தால் நான் அந்த சட்டத்தை மீறி என் மகனுக்கு கல்யாணம் செய்து சிறை செல்லுவேன் என்று தைரியம் சொல்லி மற்றவர்களையும் குழந்தைக் கலியாணம் செய்ய தூண்டினார்.

இப்படிப்பட்டவருக்கு பெண்கள் சங்கம் ஆதரவு கொடுப்பதென்றால் அச்சங்கம் பெண்கள் சமூகத்தின் உண்மையான பிரதிநிதித்துவம் பொருந்தியதா என்பதை கவனிக்கும்படி வாசகர்களை வேண்டிக் கொள்ளுகிறோம்,

கடவுள்களின் சக்தி,

சாமி கோவிலில் தீ.

திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோவிலின் உள் பக்கம் தீப்பிடித்து 5மணி நேரம் எரிந்து அநேகவஸ்துக்கள் சாம்பலாயின. சில விக்கிரகங்கள் பழுதுபட்டுவிட்டன, மூல விக்கிரகம் போலீசாரால் காப்பாற்றப்பட்டது

சாமி தாலி களவு.

திருவாங்கூரில் சமஸ்தான கிளங்காடு கோவிலில் உள்ள அம்மன் சாமி கழுத்தில்உள்ள தாலியை யாரோ திருடிக்கொண்டு போய் விட்டார்கள் தேவஸ்தான கமிஷனர் நேரில் வந்து விசாரித்துக் கொண்டிருக்கிறார்.

மற்றும் வேறு பல இடங்களில் இடியினால் பலகோயில்கள் நாசமாக்கப் படுவதும் வெள்ளத்தால் அடித்துக்கொண்டு போகப்படுவதும் புரட்சியினால் பல கோயில்கள் இடிக்கப்படுவதும் பூகம்பத்தால் பல கோயில்கள் புதைக்கப்படுவதுமான திருவிளையாடல்கள் நடைபெற்று வருகின்றன. கடவுளின் சர்வவல்லமை சர்வவியாபகத்வம் ஆகிய குணங்களுக்கு இதைவிட வேறு என்ன சாக்ஷிவேண்டும்?

போலீசை அழைக்கும் கருவி.

பாரிஸ் போல்டாபிலில் தானாக இயங்குகின்ற ஒரு கருவி டெலிபோனோடு இணைக்கப் பட்டிருக்கிறது. இக்கருவி, எங்கேயாவது தீப்பிடித்துக்கொண்டால் உடனேயே போலீஸார்களுக்கும், நெருப்பணைக்கும் படைக்கும் அறிவிக்கின்றது. களவு, கொள்ளை நடந்திருக்குமாயின் இக்கருவி இதர சப்த கருவிகளோடு சேர்க்கப்பட்டிருப்பதால் போலீஸ் நிலையத்திற்கு உடன் எச்சரிக்கை செய்கின்றது.

60,000 பவுன் சம்பாதிக்கும் பெண்.

கிரேடா கார்ப்போ என்ற சினிமா நாடக ராணி 60,000 பவுன் சம்பளத்தில் புதிய படமொன்றில் நடிக்கச்சம்மதித்திருக்கிறார். இதற்கு முன் 50,000 பவுன் சம்பளத்தில் ஓர் படத்தில் இவர் நடித்தார். அமெரிக்காவில் சினிமா நாடக ராணிகளுக்கு ஏராளமான பணம் கொடுக்கப்படுவதாகத் தெரிகிறது. பொருளாதாரநெருக்கடி ஏற்பட்ட காலத்திலுங்கூட அவர்கள் ஆயிரக்கணக்கில் சம்பாதித்து வந்திருப்பதாகத் தெரிகிறது.

வருஷம் 3 கோடி ரூ தெண்டம்.

சென்னை மாகாணத்தில் மட்டும் சுமார் 18000 கோவில்களும் மததர்மஸ்தாபனங்களுமிருக்கின்றன. இவற்றின் வருஷ வருமானம் 3கோடி ரூபாயாகும்.

[ஆச்சாரிகள்]

[கைவல்யம்]

கூனம் ராஜகோபாலச்சாரியார் வக்கீல் வேலையை விட்டு தேசத்திற்காக காங்கிரஸில் உழைத்தவராயிற்றே; அவரையும் குற்றம் சொல்லலாமா என்று தோன்றலாம். ஆச்சாரிகளென்கிறபிராமண ஆச்சாரிகளெல்லாம் பூர்வகாலம் தொட்டு மற்ற சமூகங்களை கல்வியிலோ, அறிவிலோ முன்னேற்றமடைய விட்டதில்லை. தப்பித்தவறி முன்னுக்கு வருகிறவர்களுக்கு வஞ்சனையும், கொடுமையும் செய்து வந்திருப்பதாகவே சரித்திரம் சொல்லுகிறது. அவர்கள் படித்த வேதத்திலுமப்படியே இருக்கிறது. அனுபவங்களும் அப்படியே தெரியப்படுத்துகின்றன.

கௌரவர்களுக்கும், பாண்டவர்களுக்கும் வில்வித்தை கற்றுக் கொடுத்த துரோணாச்சாரி ராஜகோபாலாச்சாரியை விட எத்தனையோ மடங்கு ஞானத்திலும் தவத்திலும், வரப்பிரசாரத்திலும் மேலானவர் கடவுள் அருள் உடையவர் தருமர் வாயிலிருந்து ஒரு பொய் வந்தால் தான் தன்னுயிரை விடுவேன் என்கிற நிச்சயமுடைய ஞானி இந்த ஆச்சாரியுடைய குணத்தை உங்களுக்கு விளக்கினால் மற்ற ஆச்சாரிகளுடைய எண்ணத்தை விளக்க வேண்டியதில்லை.

அந்த துரோணாச்சாரியிடம் ஏகலைவன் என்கிற வேடன் வந்து வில்வித்தை கற்றுக்கொடுக்கக் கேட்டான். நான் ராஜாக்கள் பிள்ளைகளுக்கு வில்வித்தை கற்றுக்கொடுப்பதேயொழிய வேடனுக்குக் கற்றுக்கொடுக்க முடியாது என்று சொல்லி விட்டார். அந்த வேடன் துரோணாச்சாரியைப் போல ஒரு சிலை செய்து என்னுடைய சிலம்பக்கூடத்தில் வைத்து அந்தச்சிலையை குருவாக நினைத்து குருபக்தியால் வில்வித்தையைப் பழகிக்கொண்டான். ஒரு நாள் அந்த வேடனுடைய காட்டிற்கு அர்ச்சுனன் வேட்டையாடப் போனான். அர்ச்சுனன் கூடப் போன நாய் வேடனுடைய சிலம்பக்கூடத்திற்குப் போய் துரோணாச்சாரியின் சிலையை அசுத்தப்படுத்திற்று. அதைத்தெரிந்த வேடன் ஒரு பாணத்தை விட்டு நாயைக்கொல்லாமல் தேகமெல்லாம் காயப்படுத்தினான். நாய் அர்ச்சுனனிடம் வந்தது. அதைப்பார்த்த அர்ச்சுனன் ஆச்சரியப்பட்டு இந்த மாதிரி வில்வித்தை தெரிந்தவன் யார்? நமது ஆச்சாரிக்கு மட்டுமே தெரியும். எனக்கும் அவர் மகன் அஸ்வத்தாமாவுக்கும் தவிர வேறுயாருக்கும் சொல்லிக்கொடுத்ததில்லை என்று சொல்லியிருக்கிறாரே? அப்படியிருக்க இந்த அஸ்திரவித்தையால் இந்த நாயை எய்தவன் யாவன்? ஆச்சாரியாரிடமே கேட்போமென்று ஆச்சாரியிடம் போய் நாயைக் காட்டி விஷயத்தைச்சொன்னான், ஆலோசனாசக்தியால் விஷயத்தை உணர்ந்த ஆச்சாரி வேடனான ஏகலைவனைக்கூப்பிட்டு இந்த வில்வித்தையை உனக்கு யார் சொல்லிக்கொடுத்தது, நீ எப்படிக்கற்றுக்கொண்டாய் என்று கேட்டார். தாங்கள் என்னை மறுத்து விட்டவுடனே தங்களைப்போல் ஒரு சிலை செய்து அதைக்குருவாக வைத்து அதன் மூலமாக வில்வித்தையைக் கற்றுக்கொண்டேன்; இந்த நாய் என் சிலம்பக்கூடத்திற்கு வந்து என் குருவான தங்கள் சிலையை அசுத்தப்படுத்திற்று அதனால் பாணத்தால் எய்தேன் என்றான். இதைக்கேட்ட அர்ச்சுனன் பயத்தாலும், விசனத்தாலும் சோர்ந்து போனான்.

ராஜகுமாரனான அர்ச்சுனனைத் திருப்திப்படுத்தவும், பாஞ்சால தேசத்து ராஜாவை ஜெயித்துக் கட்டிக்கொண்டு தன்னிடம்வரும்படியான வேலை அர்ச்சுனனால் தனக்கு ஆகவேண்டியிருந்ததாலும், "வேடனோ பாஞ்சாலதேசத்துக்காட்டில் வசிப்பவன், ராஜாக்கள் சண்டைக்கு வருகையில் வில் எய்யும் தங்கள் தங்கள் வேடர்களையும் சேர்த்துக்கொண்டு வரும் வழக்கப்படி ஏகலைவன் என்கிற வேடன் பாஞ்சால தேசத்து ராஜாவிற்குப் படைத்துணையாக வந்து விட்டால் அப்பொழுது அர்ச்சுனன் பாஞ்சாலதேசத்து ராஜாவை ஜெயிப்பது எப்படியோ? அர்ச்சுனன் தோற்றால் நம்முடைய காரியம் எப்படி கைகூடும்? ஆனதால் இப்பொழுது வேடனுடைய வில்வித்தையின் சக்தியைக்கெடுத்து விடவேண்டு"மென ஆலோசித்து ஆச்சாரிகள் வேடனைப்பார்த்து என்னைக்குருவாகக்கொண்டு நீ வில்வித்தை கற்றுக்கொண்டாயே குருதக்ஷணை எங்கே என்று கேட்டார். வேடன் தங்களுக்கு என்னவேண்டுமென்று கேட்டான். ஆச்சாரிகள் உன்கைப்பெருவிரல் வேண்டுமென்றார். உடனே தன் பெருவிரலை வெட்டி குரு தக்ஷணையாகக் கொடுத்தான். பெற்றுக் கொண்டு அவனை அனுப்பிவிட்டு அர்ச்சுனனைத் திருப்தி செய்து தன்னுடைய காரிய சித்திக்குச் சந்தோஷப் பட்டார் என்பது பாரதகதை.

ஆச்சாரிகள் சொல்லிக்கொடுக்காமல் குருபக்தியாலும், தன்முயற்சியாலும் வில்வித்தை படித்துக்கொண்டதற்கு அவன் பேரில் சந்தோஷப்பட்டு இனியும் ஆச்சாரிகளுக்குத் தெரிந்த வித்தைகளையெல்லாம் அவனுக்குச் சொல்லிக்கொடுத்து குருபக்திக்கும், விசுவாசத்திற்கும் முயற்சிக்கும் மெச்சாமல் அவன் பெருவிரலை வெட்டி வில் பிடிப்பதற்கே உபயோகப்படாமல் அவனையும் கெடுத்த ஆச்சாரிகளின் மனோபாவத்தை நீங்களே ஆலோசித்துப்பாருங்கள். சங்கராச்சாரி, ராமானுஜாச்சாரி, மத்வாச்சாரி முதலிய எல்லா ஆச்சாரிகளும் பிராமணன்தவிர மற்றெல்லாரும் அடிமைகள். அடிமைகளுக்கு அறிவில் அதிகாரமில்லையென்றே வேதத்திற்கு அர்த்தம் செய்திருக்கிறார்கள். இதையெல்லாம் ஆலோசித்துப்பார்த்தால் நமது ராஜகோபாலாச்சாரியாரின் மனோபாவம், மற்ற சமூகங்கள் முன்னணியிலிருக்கப்பொறுக்குமா?

இதற்கு முன் காங்கிரஸ் பேராலேயே இந்திய சட்டசபைக்குப் போன எம் கே. ஆச்சாரியும் தியாகிதான். காங்கிரசிற்கு உழைத்தவர்தான். தேசாபிமானிதான். என்றாலும் பார்ப்பாரப்பையனுடன் பார்ப்பாரல்லாத பையன் ஒன்றாக ஒரு நாள் இருந்து சாப்பிட்டால் ஒரு மாதம் பட்டினியாகக் கிடப்பேன் என்று சொன்ன ஆச்சாரிகளும் அவர் தான். பத்து பனிரண்டு வயது குழந்தையாக விருக்கும் பெண்கள் தான் எங்கள் பள்ளியறைக்குப் பக்குவம், பதினாறு,பதினெட்டு வயது பெண்கள் பக்குவ மில்லையென்று மேனாடெல்லாம் சொல்லி வந்த வரும்ஆச்சாரிதான். ஆறு கோடி ஜனங்களையும் அன்னிய மதத்திற்கு ஓட்டிக்கொண்டிருப்பவரும் அந்த கிஷ்ணமாச்சாரிதான். பார்ப்பார தாசிமக்களென்றும், அடிமைகளென்றும், ஆசாரம் ஒழுக்கமில்லாதவர்களென்றும்கடவுளால் உண்டு பண்ணப்பட்ட ஒரு சூத்திரஜாதி நிறைந்திருக்கும் தேசத்தில் ஆச்சாரிகளின் வைபவமில்லாமல் வேறு என்னதானிருக்க முடியும்.

முட்டாள் தனத்திற்கு அறிகுறி.

இந்துக்களின் முட்டாள் தனத்திற்கும், மூடபக்திக்கும் அறிகுறி தீபாவளிப் பண்டிகையே யாகும். தீபாவளி கொண்டாடுவது நம்மை ப்பார்ப்பனர்களின் அடிமைகள் என்று ஒப்புக் கொள்வதாகும். அதன் கதைகள் வெகு ஆபாசமானதும், சூழ்ச்சியானதுமாகும். படித்துப்பாருங்கள்.

உலகில் பெரிய கோபுரம்.

பாரிஸ் நகரில் ஒரு பிரமாண்டமான கோபுரம் கட்ட திட்டம் போட்டிருக்கிறார்கள். இது 6540 அடி. ஒன்றரை மைலுக்கும் அதிகமான உயரமுடையதாக இருக்கும். கோபுரத்தின் மூன்று இடங்களில் 96 அடி உயரத்திலும், 162 அடி அகலத்திலும் ஜன்னல்கள் அமைக்கப்படும். இவற்றின் வழியாக ஆகாயவிமானங்களைக் கோபுரத்திலிருந்து வெளியே விடலாம். விமான மூலமாகப் பாரிஸ் தாக்கப்படுவதினின்றும்காத்துக்கொள்வதே இக்கோபுரம் கட்டுவதின்நோக்கும். பல விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கும், ஆரோக்கிய வாசங்களுக்கும் இது உபயோகிக்கப்படும். கோபுரத்தின் அடிப்பாகத்தில் குறுக்களவு 650 அடியும், உச்சியில் குறுக்களவு 130 அடியுமிருக்குமாம்.

பகுத்தறிவு.

ஈரோடு, 1934-ஹு நவம்பர்-மீ 4-உ

விளம்பரப் பிரசாரம்.

:0:

காங்கிரஸ் திருவிழா கூடிக்கலைந்து விட்டது. அதன் கொள்கையினால் எவ்வித மாற்றமும் ஏற்பட்டு விடவில்லை. ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டில் அதன் நிர்வாக விதிகளில் பார்ப்பனர்களைச் சேர்க்கலாம் என்ற ஒரு மாற்றம் செய்யலாமா? வேண்டாமா? என்பதே ஒருமுக்கிய பிரச்சினையாய் இருந்து அதன்பேரிலேயே எல்லா விவாதமும் நடந்து எப்படி அம்மகாநாடு முடிந்ததோ அதுபோலவே காங்கிரசிலும் அதன் நிர்வாக வேலைத்திட்டத்தில் அஹிம்சை, சத்தியம், ராட்டினம், கதர், என்பனபோன்ற பயனற்ற வார்த்தைகளைப் பேசுவதிலும், இயற்கைக்கு விரோதமான—அனுபவ சாத்தியமில்லாத தத்துவங்களைவலியுறுத்துவதிலுமே 5, 6 நாள்கள்செலவழிக்கப்பட்டுகடைசியாக பெரும்பான்மையான ஜனங்களுக்குப்புரியாதஏதோ சிலதீர்மானங்களுடன் முடிவு பெற்றது என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.

இதற்குப் பொது மக்களின் பணம் சுமார்2, 3லட்சரூபாய்க்குமேலாகவே செலவாகி இருக்கலாம். பதினாயிரக்கணக்கான மக்களுக்கு 4, 5 நாளாவது வேலை கெட்டுஇந்தத் திருவிழாவில் காலங்கடத்தப்பட்டு இருக்கலாம்.

இதன்பயனாய் ஒரு சிலருக்கு விளம்பரமும், சிலருக்கு தேர்தலில்ஓட்டுப்பெறுவதற்குச்சில தந்திரங்களும் தான் பெற ஏற்பட்டது என்பதல்லாமல் மற்றபடி தேசத்துக்கோ, மக்களுக்கோ ஒருகாதொடிந்த ஊசியளவு பயனும் ஏற்பட்டதில்லை என்பதே நமது அபிப்பிராயமாகும்.

சில பத்திரிக்கைகள் “50000 ஜனங்கள் 80000 ஜனங்கள் வேடிக்கைபார்த்தவர்கள் உள்பட காங்கிரசுக்கு வந்தார்கள்” என்பதைக்காட்டி காங்கிரஸ் ஒரு பெரிய ஸ்தாபனம் மதிப்புக்குரிய ஸ்தாபனம் என்று எழுதி மகிழ்கிறார்கள். ஜனக்கூட்டத்தை மதித்து மக்கள் ஏமாந்த காலம் மலையேறிப் போய் விட்டது.

வெறும் அழுக்கையும், சேற்றையும் அள்ளிப்பூசிக்கொள்ளும் திருவிழாவாகிய மாமாங்கத்துக்கு 3 லட்சம் 4 லட்சம் ஜனங்கள் வந்திருந்தார்கள் என்றால்—ஆண்களும், பெண்களும் தங்கள் தங்கள் “மர்மஸ்தானம்” அரைவாசி, முக்கால்வாசி தெரியும் படியாகவேப்பிலையைக்கட்டிக்கொண்டு காட்டுமிராண்டிகள்போல்திரியும்பெரியபாளையத்து அம்மன் திருவிழாவுக்கு 50000பேர் லட்சம்பேர் பெண்டுபிள்ளைகளுடன் ஆண்களும், பெண்களுமாய் கூடிநசுக்கப்படுகிறார்கள், உரசப்படுகிறார்கள் என்றால் அதுவும் நல்ல “கல்வி அறிவு” உள்ளவர்களும், பி. ஏ., எம். ஏ., படித்தவர்களும்’ ராஜாக்கள், ஜமீன்தார்கள், பிரபுக்கள், வியாபாரிகள் என்பவர்களும இந்த ஆபாசங்களில்பெண்டுபிள்ளைகளுடன் பங்கு எடுத்துக்கொள்ளுகிறார்கள் என்றால் இந்த பம்பாய் பட்டணத்துக்கு இந்தியாவெங்கும் ஆயிரக்கணக்கான பத்திரிக்கைகளும், பதினாயிரக்கணக்கான கூலிப்பிரசாரகர்களும் சேர்ந்து 100க்கு 92பேர்கள் தற்குறிகளாக உள்ள ஜனங்களிடத்தில் புராணப்புளுகுகள் போல் பொய்ப்பிரசாரம் செய்து ஒருகூட்டம் கூடியதில் பதினாயிரக்கணக்கில்ஆட்கள் சேர்ந்ததாலேயே இதை ஒரு அதிசயமென்றோ, அத்திருவிழாவுக்கு ஒரு தனிப்பட்ட மதிப்போ, உயர்வோ இருப்பதாகவோஅறிவாளிகள் மதித்துவிடுவார்களா என்பதைநாம்எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

அங்கு நடந்த விசேஷம் என்ன? அதனால் ஏற்பட்ட பலனென்ன? என்பதுதான் இங்கு முக்கிய கேள்வியாகும்.

அங்கு நடந்ததெல்லாம் காந்தியாரின் “பெருமை”யையும் “மகிமை”யையும் பற்றிய விளம்பரம் அல்லாமல் வேறு என்ன நடந்தது என்பதே நமது கேள்வி.

“காந்தியார் பொக்கவாய்ச் சிரிப்புஒருமோகனாஸ்திரம்போல்எல்லோரையும் மயக்கி விட்டது.”

“காந்தியார் தமாஷ் பேசி எல்லோரும் சிரித்தார்கள்.”

“மொட்டைத்தலைக் குல்லாயைஎடுத்துவழுக்கைத்தலையில் வைத்தார்”

“பெண்களை ஆண்களுக்கு இணங்க வேண்டாம் என்று சொன்னார். யாவரும் சிரித்தார்கள்.” “காந்தியாரின் ஆத்ம சக்தி எல்லோரையும் மயக்கி விட்டது” என்பது போன்ற அர்த்தமற்றதும், அநாகரீகமானதுமான வார்த்தைகளாலும், கருத்துக்களாலுமே காந்திஜீ விளம்பரம் நடந்ததே தவிர கடுகளவாவது அறிவுக்கு ஏற்றதோ, அனுபவத்துக்கு ஒத்ததோ, மக்களுக்கு ஏற்றதோ மனித சமூகத்துக்கு பயன்தரத்தக்கதோ ஆகிய வழியில்ஒரு காரியமும் நடக்கவில்லை என்பதோடு அதற்காக எவ்வித முயற்சியும் செய்யப்படவுமில்லை என்றே சொல்ல வேண்டியிருக்கிறது.

மூடப் பக்தியும், குருட்டு நம்பிக்கையும் மக்களுக்குப் பிரபலமாக்க என்னென்ன காரியங்கள் செய்யவேண்டுமோ அவ்வளவும் செய்து தலைவர்கள் என்னப்படுவோர்களும், காந்தியாரும்“வெற்றி” பெற்றார்கள் என்பதை வெட்கமில்லாமல் பாராட்டிக்கொள்ளுவதைப் பார்க்கும்போது மனித சமூகத்தில் பொது வாழ்வில் இன்னமும் எவ்வளவு அறிவீனம் இருந்து வருகிறது என்று துக்கப்படாமல் இருக்க முடியவில்லை.

இந்தக் காங்கிரசின் வெற்றியின் யோக்கியதையை விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால் மக்களை ஏமாற்றி, காந்தியாரும், அவர்களது இரண்டொரு முக்கிய சிஷ்யர்களும் தங்களை விளம்பரம் செய்துகொள்ளப் பாடுபட்டு வெற்றியடைந்தார்கள் என்பதல்லாமல்வேறு ஒன்றும் சொல்ல நமக்குத் தோன்றவில்லை.

காந்தி விலகிய இரகசியம்

காங்கிரஸ் பெருமை இவ்வாறாக இனி காந்தியார் விலகிய இரகசியத்தைப் பற்றி சிறிது ஆராய்வோம்.

காந்தியார் தான் முக்கியமாய்க் கருதிய இரண்டு விஷயங்களில் அதாவது சத்தியாக்கிரகம், சட்டமறுப்பு என்பவைகளில் காங்கிரசின் மூலம் தோல்வி அடைந்து விட்டதையும் அவற்றில் பொதுஜனங்களுக்கும், தனது அத்தியந்த சிஷ்யர்களுக்கும் நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது என்பதையும் உணர்ந்து கொண்டார்.

ஆனால் சத்தியாக்கிரகம், சட்ட மறுப்பு ஆகிய இரண்டும் தன் மட்டில் தோல்வியடையவில்லைஎன்றுஇன்னமும் கருதிக்கொண்டிருப்பதாய் காட்டிக் கொள்ளுகிறார்.

இந்த நிலைமையில் காந்தியார் ஒன்று சட்ட மறுப்பு, சத்தியாக்கிரகம் ஆகியவைகளை தான் கைவிட்டு விட்டதாகச் சொல்லி காங்கிரஸில் இருக்க வேண்டும். அல்லது சட்ட மறுப்பிலும், சத்தியாக்கிரகத்திலும் நம்பிக்கையில்லாத காங்கிரசிலிருந்து தான் விலகி விடவேண்டும். இந்த இரண்டிலொரு நிர்ப்பந்தத்தில் காங்கிரஸ்காரர்கள் காந்தியாரைக் கொண்டுவந்து வைத்து விட்டதால் அவர் விலகி விட்டேன் என்று சொல்லித் தீரவேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது.

அன்றியும் லார்ட் வில்லிங்டன் அவர்களும் “சட்ட மறுப்பை அடியோடு கைவிட்டு விட்டோம்.இனி சட்டத்திற்கு அடங்கி நடக்கின்றோம் என்று சொல்லாதவரை காங்கிரஸ்காரர்களுடன் எவ்வித சம்மந்தமும் வைத்துக்கொள்ள முடியாது என்றும்,அடக்கு முறைச்சட்டங்களைநீக்க(கேன்சில் செய்ய)முடியாதுஎன்றும்,கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டதால் காங்கிரஸ்காரர்கள் உத்தியோகம், பதவி, பட்டம் முதலியவைகள் பெறுவதற்கு முடியாமல் இருந்து வருகிறதாதலால் “சட்ட மறுப்பில் நம்பிக்கையுள்ள காந்தியார் காங்கிரசிலிருந்து விலகி விட்டார் இனி காங்கிரசு சட்டத்துக்கு உட்பட்ட சபை ஆகிவிட்டது. நாங்களும் சட்டத்துக்கு கட்டுப்பட்டு நடக்கும் நல்லபிள்ளைகள் ஆகிவிட்டோ

ம். ஆதலால் நாங்கள் அதிகாரம், பதவி, பட்டம், உத்தியோகம் ஆகியவைகள்பெறுவதற்கும், அடைவதற்கும் தகுதிஉடையவர்கள் ஆகி விட்டோம்'' என்று சொல்வதற்கு சவுகரியம்அளிப்பதற்கும் காந்தியார் விலகித் தீரவேண்டியதாய் இருந்தது.

இந்தக் காரணங்கள் அல்லாமல் காந்தியாரின் உள் துறைச் சிஷ்யர்களின் சிஷ்யர்கள் இரண்டொருவர் சொல்லும் காரணம் மற்றொன்று என்னவென்றால் தோழர் காந்தியார் காங்கிரசில் சர்வாதிகாரியாய் இருந்து வந்ததின் பயனாய் இந்தியாவுக்குள் சமதர்மக்கொள்கையும், பொதுவுடைமைக் கொள்கையும் பரவாமல் காத்து வந்ததாகவும், அதன் நன்றி விசுவாசத்தை இந்த அரசாங்கம் அறியாமல் காந்தியாரை சர்க்கார் அவமானப்படுத்தி விட்டதால் அவர் கோபித்துக்கொண்டு விலகி விட்டதாகவும், இதனால் இனி இந்தியாவில்சமதர்மமும், பொதுவுடைமையும் பரவி விடும் என்றும், அப்போது அரசாங்கத்தார் தமது தவறை உணர்ந்து மறுபடியும் காந்தியாரை த்தாம்பூலம் வைத்து அழைப்பார்கள் என்றும் சொல்லி திருப்தி அடைகிறார்கள்.

இவை எப்படி இருந்தாலும் சரி. காந்தியாரின் வாய்மொழியாகவே ''காங்கிரசைப்பலப் படுத்தவேண்டும், பரிசுத்தப்படுத்த வேண்டுமென்று சொல்லிஅதற்காகத்தான் அவர்விலகினார்'' என்று காந்தியார் பண உதவியும், ஆதரவும் பெற்றுநடக்கும் பத்திரிகைகளே கூப்பாடு போடுகின்றன.

ஆகவே இதிலிருந்து காங்கிரஸ் பலமுள்ளதாக இல்லை என்பதும், பரிசுத்தமுள்ளதாக இல்லை என்பதும் விவகாரத்துக்கு இடமில்லாத விஷயங்களாகும்.

கோடிக்கணக்கான ரூபாய்களை வசூலித்து செலவு செய்தும் ''லக்ஷக்''கணக்கான மக்களை ஜெயிலுக்கு அனுப்பியும், ஆயிரக்கணக்கானவர்கள் ராஜபோகங்களைத்துறந்துசந்நியாசிகளாகியும், நூற்றுக்கணக்கானவர்கள் ஆவி விட்டும் ''உலகம் போற்றும்மகாத்மா''வினால்சர்வாதிகாரப்பதவி ஏற்கப்பட்டும் நடத்தப்பட்ட காங்கிரஸ்தோல்வியுற்றும், அதன் கொள்கைகளில் வீழ்ச்சிஏற்பட்டுமிருப்பதைகௌரவமாய், கண்ணியமாய்ஒப்புக்கொண்டு அதன் முட்டாள்தனமான கொள்கைகளை மாற்றிக்கொள்ளாமல்''காங்கிரசில் உள்ளவர்களிடம் நாணயமில்லை. அவர்கள் வேஷக்காரர்கள், சுயநலக்காரர்கள்'' என்றெல்லாம் பாடுபட்ட ஆட்கள் மீது பழி போட்டு விட்டு ''காங்கிரசை பலப்படுத்தவும், பரிசுத்தப்படுத்தவும் நான் காங்கிரசை விட்டுப் போகிறேன்'' என்றால் இனி வேறுஎந்த வழியில் தோழர் காந்தி பலப்படுத்தி பரிசுத்தப் படுத்தப்போகிறார் என்பது நமக்கு விளங்கவில்லை.

காங்கிரசைவிட்டுப் போகும் காந்தியாரது சிஷ்யர்கள் ''மச்சான்செத்தால்நல்லதாச்சு அவருடைய கம்பளி நமக்காச்சு'' என்று சொல்வது போல் காந்தியார் போனால் போகட்டும், ஆசீர்வாதம் செய்து அனுப்பலாம், அவருடைய பெயரால் ஓட்டுப்பெற்றுப் பதவி பெறலாம் — அதிகாரத்துக்குப் போகலாம் என்கின்ற கருத்திலேயே ஒவ்வொருவரும் அறிக்கை வெளியிட்டு வருகிறார்களே தவிர வேறு ஒரு வேலைத்திட்டமோ, வேலைமாற்றமோ ஏற்படுத்தும் விஷயத்தில் கவலைப்படவே யில்லை.

இன்றைய தினம் பம்பாய் காங்கிரசுக்குச் சென்று வந்த ஒருவரை அணுகி காங்கிரசில் என்ன விசேஷம் நடந்தது? என்று கேட்டால் அவர்என்ன பதில் சொல்லக்கூடும்? ''பெரியகூட்டம்'' ''காந்தியார் விலகிப்பயணம் சொல்லிக்கொண்ட காட்சி மிகப்பரிதாபமாய் இருந்தது'' ''காங்கிரஸ் பிரசிடெண்ட் ராஜேந்திர பிரசாதே காந்தியார் கால்தொட்டுக் கும்பிட்டார்'' ''இந்தச்சமயத்தில் எல்லோரும் கண்ணீர்விட்டார்கள்'' என்பன போன்ற பாட்டிமார்கள் வர்ணிக்கும் அணி இலக்கணப்படிதான் வர்ணிப்பார்களே தவிர வேறு என்ன சொல்லக்கூடும் என்று கேட்கின்றோம்.

ஒரு பெரிய தேசத்தின்—இரண்டு நாளைக்கு ஒரு தடவை கூடச்சமையல் செய்து சாப்பிட வகையில்லாத கோடிக்கணக்கான மக்களையுடைய தேசத்தின்—முக்காலேயரைக்கால் வாசி ஜன சமூகம் ஆகிய சுமார் 30 கோடிமக்களை எழுத்துவாசனைஇல்லாமல் பல்லாண்டுகளாக வைக்கப்பட்டிருக்கும் தேசத்தில்—தேசத்தின் செல்வமெல்லாம் கல்லுக்கும், கூத்திக்கும், கள்ளுக்கும், சாராயத்துக்கும், விவகாரங்களுக்கும், வில்லங்கங்களுக்கும் பாழாக்கிக்கொண்டு பாடுபடும் மக்கள் பட்டினியாயும், தற்குறிகளாயும் நோயாளிகளாயும் வீடுவாசல் அற்ற லம்பாடிக்கூட்டம் போல் மரத்து நிழலில் கிடப்பவர்களாயும் இருக்கும் தேசத்தில் இப்படிப்பட்டஇந்த தேசத்துக்கும், இந்த ஜனசமூகத்துக்கும் தாங்கள் தான் பிரதிநிதிகள், தாங்கள் தான் தர்மகர்த்தாக்கள், தாங்கள் தான் தேசாபிமானிகள், தாங்கள் தான் தேசபக்தர்கள், தங்கள் ஸ்தாபனம் தான் பிரதிநிதி ஸ்தாபனம் என்று சொல்லிக் கொள்ளும் ஒரு கூட்டத்தார்களின் நடவடிக்கையும், முயற்சியும் இந்தயோக்கியத்தில் இருக்குமானால் இனி இந்த நாட்டுக்கும், மக்களுக்கும் என்று தான் விமோசனம் ஏற்படப் போகிறது என்று கேட்கின்றோம்.

கிராம வேலையின் மூலம் சுயராஜ்யம்.

நிற்க, 1921ல் ஒத்துழையாமைஆரம்பித்தகாலத்தில்நிர்மாணத்திட்டத்தின் மூலமேதான் சுயராஜ்யம் அடைய முடியுமென்று தோழர் காந்தியார் சொன்னதை நம்பி எவ்வளவு காரியம் செய்யப்பட்டது என்பதுவாசகர்களுக்குத்தெரியாததல்ல. அதாவது கதர், மதுவிலக்கு, தீண்டாமை விலக்கு, இந்து முஸ்லீம் ஒற்றுமை ஆகியநான்கு காரியங்களுக்கும் ஒரு கோடிரூபாய் வசூல் செய்யப்பட்டது, லக்ஷம் மெம்பர்கள் சேர்க்கப்பட்டது, 50, 60 ஆயிரம் பேர்கள் ஜெயிலுக்குச்சென்று மூத்திரம் பெய்யும் கலயத்தில் தண்ணீர் சாப்பிடும் படியான கஷ்டங்கள் அனுபவிக்கப்பட்டன.

இந்த சம்பவங்களில் ''ஒரு வருஷத்தில் சுயராஜ்யம், 6 மாதத்தில் சுயராஜ்யம், இதோ கண்ணுக்குத் தெரிகிறது சுயராஜ்யம், அதோ கண்ணுக்குத் தெரிகிறது சுயராஜ்யம்'' என்றெல்லாம் சொல்லப்பட்டு ஒரு பயனும் ஏற்படாமல் போய் கடைசியாக நிர்மாணதிட்டத்துக்கு ஜெயிலுக்குப்போகும் வேலை நிறுத்தப்பட்டு பிரசாரம் ஒத்தி வைக்கப்பட்டது.

அதற்குப்பின் கதர் ஒன்றினாலேயேசுயராஜ்யம்வரும்என்று சொல்லப்பட்டுஅதற்காகபல லக்ஷம்ரூபாய்கள் வசூல் செய்யப்பட்டுஅப்போதும் இதோசுயராஜ்யம், அதோ சுயராஜ்யம், லங்காஷயரில் பஞ்சம் வந்து விட்டது மான்செஸ்டரில் பட்டினி ஏற்பட்டு விட்டது, வெள்ளைக்காரர்கள் மண்டிபோட்டு சுயராஜ்யங்கொண்டு வந்து கொடுக்கப் போகிறார்கள் என்று சொல்லப்பட்டது.

பிறகு அதுவும் நடக்காமல் போகவே உப்புச்சத்தியாக்கிரகம் ஆரம்பித்து சுயராஜ்யம் பெறாமல் வீடுதிரும்புவதில்லை என்று சபதம் செய்து அதற்காக ஒரு பெரிய சட்ட மறுப்பும் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கும் 40 ஆயிரம் 50 ஆயிரம் பேர்கள் சிறைசெல்லவும், அடிபடவும், கைகால் முறியவும், உயிர் துறக்கவுமான கஷ்டங்கள் ஏற்பட்டு கடைசியாக சிறையில் இருப்பவர்களை விடுதலை செய்தால் சட்ட மறுப்பை நிறுத்திவிடுவதாக வாக்குக் கொடுத்து விடுதலை பெற்றும் பின்னும் எவ்வளவோ பட்டினி கிடந்தும் ராஜிக்குப் போயும் ஒன்றும் முடியாமல் இந்த காங்கிரஸ் கூட்டி இதிலிருந்து காந்தியார் விலகும் திருவிழா நடத்தப்பட்டது என்பதோடு அத்தியாயம்முடிந்ததென்றும் தோழர்காந்தியார்இப்போது ''கிராம சீர்திருத்த வேலை மூலம் சுயராஜ்யம் வாங்கப் போகிறேன்'' என்று புதியதொரு வாக்குத்தத்தம் அல்லது வழி சொல்லுகிறார்.

இனி இதற்கு ஒரு ஸ்தாபனம் ஏற்படலாம். இதன் பேராலும் பலலட்சம் ரூபாய்கள் வசூல் செய்யலாம். பல வேலையில்லாத ஆட்களுக்கும், சோம்பேரிகளுக்கும், பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநிறுத்த இருக்கிறவர்களுக்கும் வேலையும், நல்ல ஊதியமும் கிடைக்கலாம். இதன் அனுபவம் ஜனங்களுக்குத் தெரிந்து இதுவும் பயன் படவில்லை என்பதை உணர்ந்து இந்த வேலைத்திட்டத்தைவெறுக்கவும், இந்த ஸ்தாபனத்தை அலக்ஷியமாய் கருதவும் சில வருஷங்கள் பிடிக்கலாம். அதன் பிறகு காந்தியார் யார்மீதாவது குற்றம் கூறி விட்டுஅதைவிடுத்து வேறுஸ்தாபனம்ஆரம்பிக்கலாம். அதிலு

ம்இதே கதி அடையலாம். அப்புறம் யாராவது கேட்டால் அதாவது இந்தப்படி ஜனங்களை ஏமாற்றி மோசவார்த்தை கூறி பல லக்ஷசம் வசூலித்து இப்போதும் இப்படி ஆகிவிட்டதே இதுயோக்கியமா என்று கேட்கக்கூடிய நிலைமை ஏற்பட்டால் அதற்கும் ஒரே பதிலாக "பணக்காரர்களிடம் உள்ள பணங்களைவசூல்செய்து ஏழைகளுக்குகொடுத்து உதவி செய்தேனே ஒழிய வேறில்லை" என்று ஒரே வார்த்தையில் பதில் சொல்லி விடலாம். இது தான் முடியப்போகும் காரியமாகும். என்பதை இப்போதே சொல்லி விடுகின்றோம்.

ஆனால் இந்த 14-வருஷகாலமாய் காந்தியாரின் இந்த திருவிளையாடல்களால்இந்தியா ஒருகடுகளவாவது பொருளாதார இயல், சமுதாய இயல், அறிவியல், தொழிலியல் ஆகிய துறைகளில் முற்போக்கில்லாமல் தேங்கி இருந்து மற்ற நாடுகளைவிட எவ்வளவோ பின்னால் தள்ளப்பட்டுப் போய்விட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது.

மேல் நாட்டார்கள் இந்தியாவை பரிகசிப்பதற்கு ஒரு வார்த்தை உபயோகித்து வருகிறார்கள். அது என்ன வென்றால் "உலகில்மற்றதேசம் பொருளாதாரத்தை பிரதானமாகக் கருதி உலகாயுதத் துறையில் முன்னேறிக்கொண்டு போகின்றதே யொழிய இந்தியாவைப் போல ஆத்மீகத் துறையில் சிறிதும்முன்னேறவில்லை" என்று சொல்லுகிறார்கள் இது இந்தியா இன்னமும் காட்டுமிராண்டித்தன்மையில் மிருகப்ப்பிராயத்தில் இருந்து வருகின்றது என்று சொல்லுவதற்கு வேறு பாஷைப் பிரயோகமேயாகும்.

ஆதலால் தோழர் காந்தியார் இந்தத் தடவையாவது இந்தக் காரியத்திலாவது அதாவது தான் "காங்கிரசை விட்டு விலகிவிட்டேன்" என்று சொல்லும் காரியத்திலாவது உண்மையாயிருந்து நாணயத்தைக் காப்பாற்றினரே யானல் இந்தியாவுக்கு சிறப்பாக ஏழை மக்களை சோம்பேரிக் கூட்டத்தார்ஏமாற்றி வஞ்சித்து வாழும் கொடுமையிலிருந்து விடுவிக்கும்பேற்றை அடையச் செய்யலாம். உலக பந்தயத்தில் மற்ற நாடுகளோடு இந்தியாவையும் சேர்த்து ஓட வைக்கலாம். அப்படிக்கில்லாமல் காங்கிரசுக்குத் தோல்வி என்றவுடன் ஓடி விட்டுஅதற்குசெல்வாக்கு ஏற்படும் போது (கண்டிப்பாககாங்கிரசு கொஞ்ச காலத்துக்குள் செல்வாக்குப் பெறத்தான் போகின்றது என்பதும் அப்போது இன்றைய தினம் காங்கிரசைப் புகழ்ந்து புராணம் பாடி இருக்கும் பார்ப்பனர்களே காங்கிரசை வசை புராணம் பாடப் போகிறார்கள் என்பதோடு "தேசத்தைக் காப்பதற்காக காங்கிரசுக்கு மறுபடியும் வந்து காப்பாற்ற வேண்டு"மென்று காந்தியாரை அழைக்கப் போகிறார்கள் என்பதும் உறுதியான காரியமேயாகும்—)

மறுபடியும் உள்ளே வந்து புகுந்து கொள்ளுவதுமான காரியங்கள் பொது நலத்துக்கு யாதொரு காரியத்தையும் செய்து விடாது என்பதோடு கடைசியாக ஒரு நாளைக்கு இந்தத் தந்திரங்களும், சூதுகளும், காந்தியாருக்குதற்கொலை செய்து 'கொள்ளுவதற்குத்தான் காரணமாக இருக்குமேழிய வேறொன்றுக்கும் சிறிதும் பயன்படாது என்று உறுதியாய்ச் சொல்லுவோம்.

சர். சஷண்முகம் வெற்றி.

தோழர் சர். ஆர். கே. ஷண்முகம் தேர்தல் விஷயத்தில் காங்கிரஸ்காரர்கள் என்பவர்களும், காங்கிரஸ் பத்திரிகைகள் என்பவைகளும் மனதறிந்த பொய்யை தைரியமாய் பேசியும், எழுதியும் வருவதானது காங்கிரசின் யோக்கியதையையும் அதிலுள்ளவர்களின் நாணயத்தையும் தெரிந்து கொள்ள ஒரு சாதனமாகும்.

பாக்கிஇருக்கும்தேர்தல்களில் தங்களுக்கு தோல்வி ஏற்படாமல் இருப்பதற்காக சில பொய்கள் சொல்லலாம் என்பது ஒரு அளவுக்கு அனுமதிக்கப்பட்டதானலும் சத்தியமும், நீதியும் அடிப்படையாகக் கொண்ட காங்கிரஸ் என்பதைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் ஜனங்கள் அந்த ஒரு அளவையும் தாண்டி மனதறிந்த பொய்யைப் பரப்ப முயற்சிப்பது என்பது மிகவும் வெறுக்கத்தகுந்த காரியமேயாகும். நிருபர்கள் என்கின்ற'பெயரால் எதையும் எழுதிக்கொள்வதற்கு பத்திரிகை உலகில் பழக்கம் இருந்து வருகின்றது என்றாலும் ஒரு வாரத்தில் பொய்யாகப் போகும் விஷயங்களைக் கூட எழுதுவது என்பது சீக்கிரத்தில் பொது ஜனங்களிடம் மதிப்பை இழப்பதற்குத்தான் பயன் படுமே தவிர காரிய சித்திக்கு அனுகூலமாகாதென்றே சொல்லுவோம்.

கடசித்தடவை நடந்தசென்னை சட்டசபைத் தேர்தலில் பனக்கால் அரசர் தொகுதியில் இதே மாதிரியாகவே அரசருக்கு போட்டியாய் நின்ற தோழர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யருக்கு ஜெயம் கிடைத்து விட்டது என்று பொய் ஆரவாரம் செய்து மக்களை ஏமாற்றினர்கள். "ஜஸ்டிஸ் கட்சி மாண்டு விட்டது" என்று பார்ப்பனர்கள் புகையிலை வழங்கினர்கள். டிங்-டாங்-டிங் என்று தலையங்கமிட்டு சாவோலை பாடினர்கள்.

இதற்கு எல்லாப் பார்ப்பனர்களும், பார்ப்பனப் பத்திரிகைகளும் அஸ்திவாரமாகவும், ஆதரவாகவும் இருந்தார்கள். பொய்ப்பிரசாரத்தின் பயனய் மற்ற தொகுதி தேர்தல்கள் கூட பாதிக்கப்பட்டு விட்டது.

என்றாலும் இவற்றலெல்லாம் பார்ப்பனர்கள் அடைந்த பலன் என்ன என்று பார்ப்போமானல் முன்னைய நிலைமையை விட மோசநிலைமையையே அடைந்தார்கள் என்பதோடு தாங்களாகவே தங்கள் தலையை மறைத்துக்கொள்ள வேண்டியநிலைமைக்குவந்தார்கள். பிறகு காந்தியார் உப்பு சத்தியாக்கிரக நாடகம் ஆரம்பித்த பின்னரே சிலருக்காவது வெளியில் தலை நீட்டக்கூடிய யோக்கியதை ஏற்பட்டது.

இப்போதும் இந்த சூட்சிகளிலெல்லாம் அந்த நிலைதான் இன்னும் அதைவிட வலுவான அஸ்திவாரத்தின் மீது ஏற்படுமே அல்லாமல் பார்ப்பனரல்லாதாருக்கு ஏதும் மோசம் ஏற்பட்டு விடும் என்றே சிறிதும் கருத வேண்டியதில்லை.

தோழர் ஷண்முகம் முன்னுக்கு வருகிறார் இன்னும்வரப்போகிறார் என்கின்ற பொறாமையே இன்று பார்ப்பனர்களை இவ்வளவு தூரம் அவருக்கு விரோதம் செய்யத் தூண்டுகின்றதே ஒழிய மற்றபடி ஷண்முகம் செய்த குற்றம் இன்னது என்று சொல்ல எவரும் முன்வரவே இல்லை.

தோழர் ஷண்முகம் உறுதியாய் நம்பி இருந்த ஓட்டுகள் சிலது மாறிவிட்டது உண்மையாய் இருக்கலாம். அதற்குக்காரணம் சென்னை மூதலிய இடங்களில் உள்ளவக்கில் பார்ப்பனர்களுடைய ஆதிக்கத்துக்கு உட்பட்ட சிலர் வேறு மார்க்கமில்லாமல்— தங்களுடைய ஜீவாதாரங்கள் சிலது வக்கீல்கள் கையில் சிக்கி இருக்கிற காரணத்தால் பயந்து அவர்களுக்கு அடிமைப்பட வேண்டியதாயிற்று.

என்றாலும்அதனல் தோழர் ஷண்முகத்துக்கு எதிர் பார்த்ததிலிருந்து சில ஓட்டுகள் குறைந்து விட்டது என்று சொல்லுவது தான் யோக்கியமாகுமே ஒழிய ஷண்முகம் தோற்று விட்டார். தோழர் சாமி வெங்கிடாசலம் செட்டியார் 200 ஓட்டுகள் அதிகத்தில் வெற்றி பெற்று விட்டார் என்று சொல்வது மனதார துணிந்து கற்பனை செய்து சொல்லும் பொய்யே தவிர வேறு ஒன்றும் இல்லை.

செட்டிநாட்டில் சில ஓட்டுகள் தவறி விட்டது என்றாலும் ஆந்திர நாட்டில் எதிர்பார்த்ததற்கு மேலாவே கிடைத்து அந்தக் குறைவை பூர்த்திசெய்து தக்கதொரு வெற்றி ஏற்பட்டிருக்கிறது என்பதை தைரியமாய் சொல்லுவோம்.

இந்தப் பொய்ப்பிரசாரப் பத்திரிக்கைகளுக்கும், விஷமப்பிரசார கூலிகளுக்கும் வெட்கம் வரத்தக்கநிலையில்—புத்தி கற்பிக்கத்தக்க நிலையில் ஷண்முகத்தின் வெற்றிச்சேதி வெளியாகப்போகின்றது என்கின்ற விஷயத்தில் நமக்கு சிறிதும் சந்தேகமில்லை.

சுயமரியாதை இயக்கமும், ஜஸ்டிஸ் கக்ஷியும்.

சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்த காலம் முதல் கொண்டுபார்ப்பனரல்லாதாரின்சுயமரியாதைக்காக உழைத்து வருவதும் ஜஸ்டிஸ் கக்ஷிக்கு உதவி புரிந்து வருவதும், ஜஸ்டிஸ் கக்ஷிப் பிரமுகர்களுடைய ஆதரவு பெற்று வந்ததுமான காரியம் எதுவும் சுயமரியாதை இயக்கத்திலுள்ள எவரும் அறியாததல்ல. ஜஸ்டிஸ் கக்ஷியானது சென்ற தேர்தலில் நின்ற காலத்தில்சுயமரியாதை இயக்கம் அதற்குஉதவி புரிந்துவந்திருக்கிறது.

செங்கல்பட்டில் கூடின முதல் சுயமரியாதை மாகாணகான்பரன்

ஸ்என்பது முழுதும்ஜஸ்டிஸ் கக்ஷி பிரமுகர் ஆதரவிலும், பிரசன்னத்திலும் நடந்ததும் மற்றும் ஜஸ்டிஸ் கக்ஷியைச் சேர்ந்த இளைஞர், முதியோர் ஆகியவர்கள் பெரிதும் சுயமரியாதை இயக்கத்தில் இருந்து வந்ததும் சுயமரியாதை இயக்கத்திலுள்ள முதியோர், இளைஞர் ஆகியவர்கள் பெரிதும் இன்னும் ஜஸ்டிஸ் கக்ஷியில் இருந்து வருவதும் ஒருவரும் அறியாததல்ல.

மற்றும் சுயமரியாதை இயக்கம் அதனுடைய சமதர்மக் கொள்கையைக் கூட பார்ப்பனரல்லாத சமூகம் சமூகத்துறையில் சமதர்மம் அடையவேண்டும் என்பதை முதன்மையாகக் கொண்டது என்பதை அநேக சுயமரியாதைக்காரர் ஒத்துக்கொண்டும், அதை அமுலில் நடத்த முயற்சித்துக்கொண்டும் வந்திருக்கிறார்கள். இன்னும் வருகிறார்கள் என்பது சிறிதுகூட புதிதானது என்றோ, ரகசியமானது என்றோ யாரும் சொல்லிவிட முடியாது. எனவே பார்ப்பனரல்லாதார் சமூக முன்னேற்றம் என்பதைக் கருதி ஜஸ்டிஸ் கக்ஷியாருக்கு எதாவது உதவி செய்யவேண்டிய சமயம் ஏற்பட்டால் அதைச் செய்ய ஆசைப்படுகின்றவர்கள் எந்தக் காரணத்தை முன்னிட்டும் வெட்கப்படவோ, வருத்தப்படவோ அவசியமில்லை என்பதை சுயமரியாதை இயக்கஇளைஞர்களுக்கும், வாலிபர்களுக்கும், தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஈரோடு ஆதிதிராவிடர் கூட்டம்.

ஈரோடு ஆதிதிராவிடர் நலஉரிமைச் சங்கத்தின் ஆதரவில் 21-10-34ந் தேதி மாலை 6-30 மணிக்கு ஈரோடு ஆதிதிராவிடர் தெரு மைதானத்தில் மாஜி சென்னை சட்டசபை அங்கத்தினர் தோழர் ஆர் வீரய்யன் அவர்கள் தலைமையில் ஒரு பெருங்கூட்டம் நடந்தது. கூட்டத்துக்கு உள்ளூரிலிருந்தும், வெளியூரிலிருந்தும் ஏராளமான ஆதிதிராவிடப்பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். மற்றும் சங்கத்தார் வேண்டுகோளுக்கிணங்கி சேலத்திலிருந்து பிரபல காங்கிரஸ்வாதி தோழர் பவானிசிங்கும், தோழர் ஏ. சித்தையாவும், உள்ளூர் நகர பிரபலஸ்தர் பலரும், குறிப்பாக தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களும் விஜயம் செய்திருந்தனர். மொத்தத்தில் சுமார் 1500 பேர்கள் கூடியிருந்தனர்.

கூட்டம் ஆரம்பத்தில் சேலம் தோழர் ஏ. சித்தையாவும் 2 ஆதிதிராவிட தோழர்களும் சமதர்ம கீதம் பாடினார்கள்.

தோழர் ஆர் வீரய்யன் பெருத்த கரகோஷத்தினிடையே கூட்டத்திற்கு தலைமை வகித்து, முகவுரையாகப் பேசுகையில், ஆதிதிராவிடர்களுக்கு காங்கிரஸ் செய்த துரோகத்தையும், 'ஹரிஜனம்' என்ற பெயரால் தோழர் ராஜகோபாலாச்சாரியாரும், மற்ற காங்கிரஸ் பிராமணர்களும் ஆதிதிராவிடர்களுக்கு இழைத்து வரும் தீங்குகளைப்பற்றியும் மிகத்தெளிவாகவும் விளக்கமாகவும்பேசினார்.

பின் தோழர்கள் தீனதயாளு, சேலம்பிரபலகாங்கிரஸ்வாதியான தோழர் பவானி சிங், ஜனாப் பாப்ஜான் என்ற ஒரு முஸ்லிம் இளைஞர், ஈ. வெ. ராமசாமி முதலியவர்கள் காங்கிரஸ் ஆதிதிராவிடர்களுக்குச் செய்த தீங்கைப்பற்றி பேசினார்கள். தலைவர் தோழர் ஆர். வீரய்யன் முடிவுரை கூறினார்.

பின்பு சில தீர்மானங்கள் நிறைவேறியபின் கூட்டம் கலைந்தது.

ராஜகோபாலாச்சாரியாரும் விலகட்டும்.

K. R. G. பால் தந்தி.

மன்னார்குடி முதலாவது சமதர்மிகள் மகாநாட்டுக் காரியதரிசி தோழர் கே. ஆர். ஜி. பால் 26-ந்தேதி பம்பாய் காங்கிரஸ் தலைவருக்குக் கீழ்க்கண்ட தந்தியைக் கொடுத்திருக்கிறார்:—

"காங்கிரஸ் ஏழைகளுக்காகப் பாடுபடும் ஸ்தானமா யிருந்தால் தோழர் ராஜகோபாலாச்சாரியாரும் தோழர் காந்தியுடன் காங்கிரசை விட்டு விலகட்டும்"

திருச்செங்கோடு

திருச்செங்கோடு செங்குந்த வாலிபர்சங்கத்தின் இரண்டாவது ஆண்டு விழா ஈரோடு தோழர் ஈ. லக்ஷ்மணமுதலியார் அவர்கள் தலைமையில் 27-10-34ல் நடந்தன. அது சமயம் ஈரோடு முனிசிபல் கௌன்சிலர் தோழர் எஸ். வி. எஸ். ராமலிங்கம் அவர்கள் கொடியேற்றினார். தலைவருக்கும், கொடியேற்றினவருக்கும் சங்கத்தார் வரவேற்றுப் பத்திரம் வாசித்துக்கொடுத்தார்கள்.

(ஒரு நிருபர்)

அசோஸியேடட் பிரஸ் மன்னிப்பு

"அசோஸியேடட் பிரஸ்" பம்பாயிலிருந்து பத்திரிகைகளுக்குக் கீழ்க்கண்ட செய்தியை அனுப்பியிருக்கிறது.

"பம்பாய் ஆபிஸிலிருந்து சென்ற 25-ந் தேதி அனுப்பிய தந்திச் செய்தியில் இந்தியசட்டசபைக்கு நடந்து வரும் சென்னை வர்த்தகத் தொகுதியில் தோழர் சாமி வெங்கிடாசலம் செட்டியாருக்கு செட்டி நாட்டு ஓட்டுகள் ஏராளமாக வந்து விட்டதாகக் கூறிவிட்டதற்கு நமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அச்செய்தி ஒரு கட்சியினரின் துவாராவாகவந்தசெய்தி. இச்செய்திஉண்மை என்று நிரூபிப்பதற்கான ஆதாரமுள்ள தகவலொன்றும் எங்களிடமில்லை, மேலும் மற்ற விடங்களில் விசாரித்ததில் அந்தச் செய்தி சுத்தப் பொய்யென்றும் "அசோஸியேடட் பிரஸ்" அறிகிறது."

படேல் மரணசாஸனம்.

இந்தியா சட்டசபையின் மாஜி தலைவர் தோழர் வித்தல்பாய் படேலின் ஐவேஜி 13 லக்ஷத்து 38 ஆயிரத்து 665-ரூ. தமது தம்பி, மருமகன் முதலானோருக்கு ஒதுக்கி வைத்தது போக 1 லக்ஷத்து 15 ஆயிரம் ரூ. தேசநலத்திற்காக உபயோகிக்கும்படி தோழர் சுபாஷ்சந்திர போஸிடம் அதை ஒப்படைத்து இந்தியாவின் சார்பாக வெளிநாடுகளில் பிரசாரம் செய்தல் முதலிய அபிவிருத்தி வேலைக்குச் செலவழிக்கச் சொல்லும்படி அவர் மரணசாஸனம் எழுதி வைத்துப்போயிருக்கிறார்.

சுயமரியாதை இளைஞர் மன்றம்.

ஷை மன்றத்தின் நிர்வாக சபைக்கூட்டம் 28-10-34 யில் கூடிற்று. அது சமயம் கீழ்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. தோழர்கள் பிரபசர் பி. லக்ஷ்மிநரசு அவர்கள் மரணமுற்றதை குறித்தும் மஹா லக்ஷ்மியம்மாள் (தோழர் சி. டி. நாயகம் அவர்கள் மருமகள்) மரணமுற்றதைக் குறித்தும் அனுதாப தீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டன.
2. மன்றத்தின் இரண்டாவது ஆண்டு விழாவை நவம்பர் மாதத்தில் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது

எனக்காரியதரிசி எழுதுகிறார்.

தந்திமூலம் போட்டோ படங்கள்

இங்கிலாந்து ஆஸ்திரேலியா இணைப்பு.

இங்கிலாந்திலிருந்து ஆஸ்திரேலியாவுக்குத் தந்தி மூலம் அரைமணி நேரத்தில் போட்டோ படங்களை அனுப்பி வைக்கக்கூடும். இயந்திர அமைப்பு தயாராகி அக்டோபர் 17ம் தேதி முதல் படங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. லண்டனில் ஆகாயவசனி நிலையத்தில் படங்களை அனுப்புவதற்கும், ஆஸ்திரேலியாவிலிருந்து படங்களைப் பெறுவதற்குமான இயந்திரங்கள் இணைக்கப்பட்டு பொதுஜனங்கள் உபயோகித்துக் கொள்ள இடமளிக்கப்பட்டிருக்கிறது. 9 சதுர இஞ்சு அளவில் எந்த போட்டோவையும் இங்கிலாந்திலிருந்து ஆஸ்திரேலியாவுக்குஅரைமணி நேரத்தில் அனுப்பி வைக்கலாம். படத்தில் மின்சார அணுக்கள் தயாராகி ரேடியோ மூலம் அனுப்பப்படுகின்றன. இந்த அணுக்கள் ஆஸ்திரேலியா நிலையத்தில் பதிவு செய்யப்பட்டு அதிலிருந்து ரஸாயனக் கடிதாசியில் பதிப்பிக்கப்படுகின்றன. படங்கள் மிகத் தெளிவாகவும் அழகாகவுமிருந்து வருகின்றன.

மதம் வேண்டாம்.

சமீபத்தில் கொல்லத்தில் நடைபெற்ற ஈழவ வாலிபர் மகாநாட்டில் ஈழவர்கள் இந்து மதத்தைப் புறக்கணித்து விடவேண்டுமென்று தோழர் சி. ஐ. ருக்மணி அம்மாள் கொண்டுவந்த தீர்மானம் நிறைவேறியது. சமஸ்தானக் கோவில்களில் பிராமணர்களுக்கு விசேஷ உரிமைகள் அளிப்பதை நிறுத்தவேண்டுமென திருவிதாங்கூர் கவர்ன்மென்டைக் கேட்டுக்கொள்வதாக மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருவாங்கூரில் தீண்டாமை ஒழிக்கப்படும்

உத்தியோகஸ்தர்கள் மகாநாடு.

திருவாங்கூர் சமஸ்தானத்தைச்சேர்ந்த சகல பொதுஸ்தாபனங்களிலும் அதாவது பள்ளிக்கூடம், கச்சேரி, ரோடு, குளம், சத்திரம் ஆகியவைகளில் சகல சாதி மதஸ்தர்களுக்கும் பிரவேசமளிக்கப்படுவதன் மூலம் தீண்டாமை ஒழிக்கப்படுமென்று அரசாங்க அறிக்கை சமீபத்தில் வெளிப்படும் என்று தெரிகிறது. இவ்விஷயமாய் திவான், சீப்செக்ரட்டரி, சீப் என்ஜினீயர், ரெவனியு கமிஷனர், தேவஸ்தானம் கமிஷனர் முதலியவர்களுடைய மகாநாடொன்று இன்றையதினம் நடைபெற்றது.

நாய் வரி.

பிரிட்டனில் நாய் வரி மூலம் வருஷத்துக்கு $7\frac{1}{2}$ லட்சம் பவுன் வசூலிக்கப்படுகின்றதாம்.

(7ம் பக்கத்தொடர்ச்சி)

வதால் ஒரு கையுடன் சண்டைக்குப் போகும் மகாவீரனைத்தான் ஒக்கும். ஆகவே ஆண்களும், தங்கள் மனைவிமார்களின் ஓய்வு நேரங்களில், அறிவு வளர்ச்சிக்கும், பொது சேவைக்கும், குறிப்பாக பெண்கள் சமூகத்திற்கும் பாடுபட அவகாசமளித்து ஆதரவு காட்டுதல் வேண்டும்.

ஆகவே மேல் குறிப்பிடப்பட்டிருக்கிற சகோதரிமார்களும், அல்லாதவர்களும், பெண் சமூகத்தின் முன்னேற்றத்தைக் கருதும் பிறரும், ஒன்றுகூடி, ஒரு மாகாண சுயமரியாதை மாதர் சங்கமென்றாவது அல்லது வேறு பெயரிலாவது ஒன்று கண்டு, அதன் பின்னர் ஒரு ஜில்லாவிற்கு ஒன்றிரண்டேனும், கிளைச்சங்கங்களை நிறுவி, அச்சங்கங்களில் சங்க நிர்வாகம், குடும்ப நிர்வாகம், சிக்கனம், இவைகளுக்குப் பாடுபடவும், அறியாமை, மூடப்பழக்க வழக்கங்கள், பிரயோசனமில்லாத பக்தி, விரதம், முதலிய பழக்கங்களிலிருந்து விடுபடவும், ஆன காரியங்களைச் செய்து முடிக்க மேற்கண்டவாறு சங்கங்களையும், வாசகசாலைகளையும் தோற்றுவிக்க முயற்சிகள் செய்யுமாறும் வேண்டிக்கொள்கின்றேன்.

மதுரை ஜில்லா போர்டு தேர்தல்.

29-10-34ந் தேதி திருப்பரங்குன்றம் சர்க்கிளுக்கு நடந்த ஜில்லா போர்டு தேர்தலில் நாகமலை புதுக்கோட்டை தோழர் சின்னக்கண்ணு பெரிய கருப்பன் சேர்வை அவர்கள் 392 அதிகப்படியான வோட்டுகளால் புஸ்தக வியாபாரி சாமிநாத அய்யரை தோற்கடித்து வெற்றி பெற்றார் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

ஐக்கிய அமெரிக்காவில் விவாகரத்துகள்.

ஐக்கிய அமெரிக்காவில் விவாகம் செய்துகொள்ளும் ஜனங்களில் 100க்கு 50 பேர் விவாகமான இரண்டு வருஷ காலத்திற்குள் விவாகரத்து செய்து கொள்ளுகிறார்கள். அந்நாட்டில் ஒரு ஆடவன் பல பெண்களை மணந்து கொள்வது சர்வசாதாரணம். ஒரு பெண் பல ஆடவரை மணந்து கொள்வது அங்கு ஒரு நாகரீகப் போக்காகக் கருதப்பட்டிருக்கிறது. அங்கு கன்னிகளுக்குக் கற்பில்லை. மனைவிகளுக்கு மண விசுவாசமில்லை. அங்கு ஜனனத்திற்கு மதிப்பில்லை.

குமரன்

ஈரோட்டில் சிறுவர் நடனம்.

சென்ற மாதம் 19-ம் தேதி மாலை 6-30 மணிக்கு, ஈரோடு லண்டன் மிஷன் கமியூனிற்றிப் பாடசாலை உபாத்திமை மாணவர்களாலும், ஹையர் எலிமெண்டரி பாடசாலை மாணவர்களாலும் ஈரோடு பார்க் பிஷர் பாலசில் பல சிறப்பட்ட ஆடல் பாடல்களும் குடி வெறிக்கோலம் என்ற நாடகமும் தோழர் டி. ராஜு பிள்ளை போலீஸ் டிப்டி சூப்பிரண்டெண்டு அவர்கள் தலைமையின் கீழ் கிராம சீர்திருத்த வேலைக்கென்று, கண்டோர் மனம் பரவசமடையத்தக்கதாய் நடத்தப்பெற்றது.

இவ்வைபவத்திற்கு தோழர்கள் கமிஷனர் டி. புருஷோத்தம், ஷேக். எ. ஷேக்தாவுத் சாயபு, எம். சிக்கய நாய்க்கர், ஈ. வெ. கிருஷ்ணசாமி, எஸ். மீனாட்சி சுந்தரம், கேசவலால், வி. வி. சி. ஆர். முருகேச முதலியார் முதலிய பலர் வந்திருந்தார்கள்.

குடிவெறிக் கோலத்தில் நடித்த சிறுவர்களின் திறமையும், ஒயில் கும்மியில் ஆடிய சிறுவர்களின் நடனமும், சின்னஞ் சிறுவர்களின் ஒயில் கும்மி என்ற தென்னாட்டுக் கள்ளர் நடனமும் மெச்சத்தக்கதாயிருந்தது. முடிவில் Rev. H. A. பாப்லி துரையவர்கள் இதன் வசூல் தொகை கிராம சேவைக்கும், ஆதிதிராவிடரின் முன்னேற்றத்திற்கும் உபயோகப்படுமென்று விளக்கிக் கூறினர்.

பெண்ணாக நடித்த மாணவன் டி. ஆபிரகாமுக்கு முனிசிபல் கமிஷனர் தோழர் டி. புருஷோத்தம் அவர்கள் தம் மகிழ்ச்சிக்கு அறிகுறியாக ஒரு மெடல் அளிப்பதாக வாக்களித்து அதன்படி 26-ம் தேதி ஷை பாடசாலை சென்று மாணவனுக்கு அப்பதக்கத்தை அளித்ததுமன்றி "முனிசிபாலிடியும் மாணவரும்" என்ற பொருள்பற்றி இங்கிலீஷில் ஓர் சொற்பொழிவும் நிகழ்த்தினர். நாடகத்தில் வசூலான தொகை சுமார் 200 ரூபாயாகும் என தோழர் கெ. ஜெ. வேதமுத்து எழுதுகிறார்.

மரணம்.

அக்டோபர் 26 காலை எட்டு மணிக்கு மதுரை சுயமரியாதை தோழர் சி. முத்திருளாண்டி அவர்களுடைய ½ வயது உள்ள குமாரன் இறந்து விட்டான் அது பற்றி மேற்படியார் குடும்பத்தினருக்கு நம்முடைய அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறோம். என அருணாசலம் எழுதுகிறார்.

ஈ. வெ. இராமசாமி

தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் 1—11—34ந் தேதி இரவு ஈரோட்டிலிருந்து சென்னை சென்றார். சென்னையில் பல கூட்டங்களில் பேசிவிட்டு திங்கட்கிழமை வாக்கில் ஈரோடு வந்து சேருவார்.

சித்தோடு மாணவர் சங்க ஆண்டுவிழா.

14-10-34 இவ்வூர் போர்டு உயர்தர ஆரம்பப் பாடசாலை மாணவர் சங்க 4-வது ஆண்டு விழாக் கொண்டாட்டம், ஈரோடு ரேஞ்சு பாடசாலைகளின் டிப்டி இன்ஸ்பெக்டர், A. கோபால ஐயர் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. காலை 8-30ல் இருந்து 10-30 வரை மாணவர்களின் விளையாட்டுப் போட்டிப் பந்தயம் நடைபெற்றது. மாலை 2-30 மணிக்கு விழா ஆரம்பமானது. உள்ளூரிலும், வெளியூரிலுமிருந்து ஆண்களும், பெண்களும் திரளாகக் கூடியிருந்தனர். ஈரோட்டில் இருந்து தோழர்கள், டாக்டர் M. கிருஷ்ணசாமி, S. இராமநாதன், A. ஈஸ்வரன், இராமசாமி முதலியவர்கள் வந்திருந்தனர். மாணவிகளால் தலைவருக்கு வரவேற்புக் கோலாட்டம் அடிக்கப்பட்டது. தலைவர் முன்னுரைக்குப் பிறகு மாணவிகளால் 'ஞானசவுந்தரி' நாடகமும், மாணவர்களால் 'மனோன்மணி' என்னும் நாடகமும் நடிக்கப்பட்டன. பிறகு, டாக்டர் M. கிருஷ்ணசாமி அவர்கள், 'கல்வி முறையும் சுகாதாரமும்' என்பது பற்றியும், S. இராமநாதன் அவர்கள் 'ஆரம்பக்கல்வி' என்பதுபற்றியும் விளக்கமாக எடுத்துக் கூறினர். தலைவர்களால், டிராமா நடித்தவர்களுக்கும், விளையாட்டில் வெற்றி பெற்றவர்கட்கும் பரிசு வழங்கப்பட்ட பின் தலைவர் முடிவுரை கூற வந்தனோபசாரத்துடன் 5-30 மணிக்கு விழா இனிது முடிந்தது என ஷை சங்கக் காரிய தரிசி எழுதுகிறார்.

18 அடி முதலை.

நிவர்ஸைட் ரோட்டுப்பக்கம், வண்ணான் துறைக்கருகிலுள்ள வாய்க்காலோரம் 18 அடி நீளமுள்ள முதலையொன்று வியாழக்கிழமை பிடிபட்டது.

கள்ளர் வாலிப சங்கம் கண்ணந்தங்குடி பொதுக்கூட்டம்

10-10-34ந் தேதி மாலை 5மணிக்கு சங்கக் கட்டிடத்தில் உபதலைவர் தோழர் பொன்னுசாமி மூவரசர் தலைமையில் ஷை சங்கக் கூட்டம் கூடிற்று.

சில அசௌகரியங்களால் 25 அங்கத்தினர்கள் கொண்ட நிர்வாக சபையை 17 பேர்கள் கொண்டதாகத்திருத்தி அமைக்கப்பட்டது. காலியான உபகாரியதரிசி ஸ்தானத்திற்கு தோழர் எஸ். முத்துசாமி அவர்களை தேர்ந்தெடுக்கப்பட்டது.

சந்தா பாக்கியை வசூல் செய்ய தோழர்கள் பொன்னுசாமி மூவரசர், ந. சுந்தரராஜலு; டி. கோபாலன்; எஸ். முத்துச்சாமி; டி. ராமலிங்கம். ஆகிய 5 பேர்கள் கொண்ட கமிட்டி ஒன்றை நியமிக்கப்பெற்று தலைவர் முடிவுரை கூறியதும் சங்கம் இனிது நிறைவேறியதெனக் காரியதரிசி எழுதுகிறார்.

விதவைகளுக்கு உதவி

கொச்சி சட்ட சபையின் தீர்மானத்தின் பேரில் கொச்சி அரசாங்கம் அரசாங்க உத்தியோகத்திலிருக்கும் போது இறந்துபோன உத்தியோகஸ்தர்களுடைய மனைவிமார்களுக்கும் குழந்தைகளுக்கும் உபகாரப் பணஉதவி செய்யத் தீர்மானித்திருக்கின்றனர். மேலும் அரசாங்கத்தாரே அத்தகையவர்களின் ஜாபிதா ஒன்றை வெளியிட்டு அந்த ஜாபிதாவில் பெயர் இல்லாதவர்கள், ஒரு மாதத்திற்குள் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள வேண்டும் என்றும் குறித்துள்ளனர்.

பெண்கல்விக்கு 5 ஆண்டுத் திட்டம்.

மைசூர் சமஸ்தானம் பெண்களின் கல்வி வளர்ச்சியின் பொருட்டு 5 வருடத்திட்டமொன்று தயாரிக்க வேண்டுமென்று சமீபத்தில் கூடிய பெண்கள் மகாநாடு தீர்மானம் செய்து அதன் மேல் சர்க்காருக்கு விண்ணப்பம் அனுப்பி யுள்ளனர்.

கோடிய கர்ம வியாதிகளை நிவர்த்தித்துக்கொள்ள மன்னார்குடி

யானைக்கால் குஷ்டம்

ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்யுங்கள். ஏழைக்கு தர்ம வைத்தியம்,
யானைக்கால் குஷ்டத்திற்கு 40 வேளைக்கு தாம்பிர மெழுகு ரூ. 10
பல்வியாதிகளுக்கு ஸ்ரீ கிருஷ்ணா டெண்டல்பாம் பற்பொடி 2½ அணா

மதிப்புரைகள்.

1. பாரதகுமாரி அல்லது இந்திய ஸ்திரீகள்.

இதன் ஆசிரியர் குலாம் அவர்களாவர். இந்து மதத்தில் பெண்களைப் பற்றி ரிஷிகள் வாக்கியமாகிய சுருதி ஸ்மிருதி புராணங்களில் எவ்வளவு இழிவாக எழுதப்பட்டிருக்கிறதென்பதும், இன்னும் பைபிள் நூலோரும், அப்போஸ்தலர்களும் ஸ்திரீகளைப்பற்றி எவ்வளவு இழிவாக அதாவது சைதான் எனக்கூறி வைத்திருக்கிறார்களென்பதும், நம்நாட்டுப் புலவர்கள் எவ்வளவு இழிவாகப்பாடியுள்ளார்கள் என்பதும், மேனாட்டுப் பெண்கள் தங்கள் மதக்கட்டுக்கடங்காது தங்கள் கல்வியறிவு, பகுத்தறிவு வன்மையால் தங்களுரிமைகளைப் பெற்று வருவதுபோல இந்தியப் பெண்மணிகளும் தங்கள் மூடமத நம்பிக்கைகளை உதறித்தள்ளிவிட்டு தங்கள் உரிமைகளாகிற விதவை மணம், மறுமணம், கலப்புமணம் சொத்துரிமை, படிப்புரிமைகளை அடைய முன்வரவேண்டுமென்றும் இதில் விளக்கியுள்ளது. அன்றியும், இஸ்லாம் மார்க்கத்தில் பெண்களுக்கு எல்லாவுரிமைகளும் கொடுத்து ஆடவர்களோடு ஒப்பச் சுதந்தரமளிக்கப்பட்டுள்ளதென்பதைத்தெளிவாக்கியுள்ளது. விலை அணா 8.

2. சைநாட்டு அரபி.

இதன் ஆசிரியர் ஷை தோழர் குலாம் அவர்களாவர். சைநாட்டு, கைக்கீரல், தற்குறி என்பன ஒரு பொருள் சொற்கள். ஒரு படிக்காத அதுவும் கையெழுத்துப் போடவும் அறியாத ஓர் அரபி—மகமது நபி அவர்கள் தமது பகுத்தறிவின் வன்மையாலும், புத்தி தீக்ஷண்யத்தாலும் அக்காலத்தில் காட்டுமிராண்டிகளாயிருந்த தம் நாட்டு (அரபி) மக்களை எவ்வளவு சாதுரியமாக அதுவும் நெடுநாள் நிலைத்திருக்கக்கூடிய விதமாக பலத்த புரட்சி செய்து உயர்ந்த சீர்திருத்த முறையில் ஆண் பெண் வித்தியாசமில்லாத வகையில் ஒழுங்கு படுத்தியுள்ளாரென்பதும், இதற்குக் காரணம் அவரது பகுத்தறிவின் வன்மையே என்பதும் விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

விலை அணா 4.

3. மங்கள நாதன் அல்லது மாயமங்கை.

இதன் ஆசிரியர் தோழர் பெ. பரிமணப் பல்லவராயராவர். இந்நாவல் கனு நிகழ்ச்சி போன்ற திடீர் சம்பவங்களும், திடீர்மாற்றங்களும் கருவியாகக் கொண்டு கதைக் கட்டுரை நடை செலுத்தப்பட்டுள்ளன. அன்றியும் மக்கள் தம்வாழ்க்கைப் பிரயாணத்தில் மாறி மாறிவரும் நட்பு—மறப்பு, கூடல்—பிரிதல், இன்ப—துன்பங்கள் முதலிய வர்ணனைகளும் இதில் காணப்படுவதுடன் இறுதியில் மதுவிலக்குக்கட்டுரையொன்றும் அமையப்பெற்றுள்ளது.

விலை அணா 2.

இவை மூன்றும் கிடைக்குமிடம்
ராஜாசம்கம்பெனி,
பொன்மலை, திருச்சி.

4. சமூக சீர்திருத்த கீதம்.

இஃது, நாகைதோழர் பி. அம்மைநாதன் அவர்களால் பாடப்பட்டு நாகை நவீனபுத்தகசாலையாரால் வெளியிட்டதாகும். தோழர் அம்மைநாதனைப்பற்றித்தமிழ்நாடு அறிந்ததாகும். அவர் நம் இயக்கத்துக்கு பல நூறு பாடல்கள் பாடிக்கொடுத்திருப்பதுமல்லாமல் சமூக சீர்திருத்தகீதம் என்னும் பேரால் இப்புதிய பாடல்கள் பாடி இதில் மதம், கடவுள், வேதம், புராணம், சாஸ்திரம், சடங்கு, புரோகிதம், வருணாச்சிரமம், முதலியவற்றின் கொடுமைகளைக்கண்டித்தும், தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பெண்கள், அனாதைகள், அடிமைகள், ஏழைகள் முதலியவர்களின் விடுதலைக்கு வழி கோலியும், காதல் மணம் முதலியவற்றை ஆதரித்துக் கஷ்டப்படும் மக்களை ஊக்கப்படுத்தியுமிருக்கிறார். இதில்புதியவர்ணமெட்டுகள் உள்ள இனிய கீதங்கள் மிளிர்கின்றன.

கிடைக்குமிடம்:—
நவீன புத்தகசாலை, நாகபட்டணம்.

5. ஏன் விதவாவிவாகம் வேண்டும்? விஸ்வகுலசங்கத்தாருக்கு ஓர் அறிவிப்பு.

என்னும் தலைப்புகளுள்ள இருசிறு வெளியீடுகள் திருநெல்வேலி ஜில்லா கள்ளி குளம் பகுத்தறிவு விளக்க வாலிப சங்கத்தாரால் வெளியிடப்பட்டவை. இவற்றுள் முன்னையது, விதவைக் கொடுமைகளையும், இரக்க மற்ற ஆடவர்கள் அவர்களுக்குச் செய்யும் அட்டூழியங்களையும், விதவாவிவாகங்களின் அவசியத்தையும் தெளிவுபடுத்தியுள்ளது.

விலை 0—0—3

பின்னையது, விஸ்வகுலத் தோழர்களான ஆறுமுகம்—கிருஷ்ணம்மாள் தம்பதிகளுக்கு 13-12-33ல் நடைபெற்ற விதவா விவாகத்தைப் பற்றி சாத்தான் குளம் விஸ்வகுல சங்கத்தார் வெளியிட்ட மறுப்பு நோட்டீசுக்கு ஷை கள்ளி குளம் பகுத்தறிவு விளக்க வாலிப சங்கத்தார் ஷை விதவா விவாகத்தை ஆதரித்துக் கொடுத்துள்ள ஆணித்தரமான பதில்களாகும்.

(தி-அ-வே)

தீபாவளியை பஹிஷ்கரியுங்கள்.

(தோழர் தி. அ. வேங்கிட சாமி)

நரகாசூரன் என்னும் ஓர் பெரிய தென்னாட்டு வீராதி வீரனை, வடநாட்டு ஆரியர்கள் கிருஷ்ணனென்னும் கபட நடிகனைக்கொண்டு தூக்க மயக்கத்தில் நள்ளிரவில் மித்திர பேதம் செய்து அநியாயமாய்க் கொன்று தங்களாதிக்கத்தை இத்தென்னாட்டில் நிலைநாட்டிய அக்கருமாதி தினத்தைஅவ்வாரியர்கள் தங்கள் சந்தோஷத்திற்குரிய நாளாக வருடம் தோறும் கொண்டாடி வந்திருக்கிறார்கள்.

நாள் ஆக ஆக அவ்வீரன் பிறந்த நாடாகிய தென்னாட்டு மக்களும் அந்த நாளைத் தங்க(ஆரியர்க)ளுடன் சேர்ந்து கொண்டாடும்படியான சூழ்ச்சிகள் செய்து அதாவது நரகாசூரனைப்பற்றி தப்பும் தண்டாவுமாகத் தங்கள் பொய்மூட்டை (புராணங்)களில் எழுதி வைத்துப் பாமர மக்களுக்குப் போதித்து துவேஷத்தையுண்டாக்கித் தங்களோடு சேர்ந்து கொண்டாடும்படி செய்திருக்கிறார்கள்.

இத்தீபாவளி நிகழ்ச்சியின் வரலாற்றைப் பகுத்தறிவுக் கண்கொண்டு நோக்குவோர்க்கு அந்நாள் (தீபாவளி நாள்) தென்னாட்டு மக்களுக்குத் துக்கம் கொண்டாட வேண்டிய நாளாகுமென்பது தெற்றென விளங்காமற் போகாது.

பார்ப்பனரல்லாத மக்கள் தங்கள் எதிரிகளின் நயவஞ்சகத்தால் தங்கள் பண்டைச் சகோதரன் (நரகாசூரன்) கொலையுண்ட துக்ககரமாகிய அந்நாளை எதிரிகளுடன் சேர்ந்து கொண்டாடுவதென்பது எவ்வளவு அறியாமையும், பாமரத்தனமுமாகுமென்பதைப் பகுத்தறிவுள்ள மக்கள் சிந்திக்குமாறும், அத்தகைய பாமரத்தனமான (தீபாவளி கொண்டாட்டத்தைபஹிஷ்கரிக்கு (வெறுக்கு) மாறும் நம் தமிழ்நாட்டு மக்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

திருநெல்வேலி ஜில்லா. விஸ்வகர்ம முதல் மகாநாடு அறிக்கை

மகாநாட்டின் காரிய கமிட்டியாரால் கேட்டுக் கொள்ளப்பட்டதலைவர் வரச்சவுகரியப்படாமைக்கு வருந்துவதாக தெரிவித்திருப்பதால். வேறுதலைவர் தேர்ந்தெடுப்பதற்காகவும், பெண்கள் மகாநாட்டிற்கும் தலைவர் தேர்ந்தெடுக்க வேண்டியிருப்பதாலும், மகாநாடு சம்மந்தமாய் ஒவ்வொரு இடங்களிலும் பிரசாரம் செய்துசமூகப்பெரியார்களுடைய ஆதரவை பெற்றுக்கொள்ள வேண்டுமென்று முக்கியஸ்தர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்கியும் மகாநாட்டின் காரியதரிசி தோழர். கே. என். தங்கவேலு அவர்கள் திருநெல்வேலி ஜில்லா வாசிகள் மிகுந்துள்ள செட்டிமார் நாட்டிலும், மற்ற காரியகமிட்டியார்கள் திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த தாலுக்காகளிலும் சுற்றுப் பிரயாணம் செய்து வருவதால் மகாநாட்டை டிசம்பர்மாதம் நடத்துவதாய் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. காரியதரிசியின் சுற்றுப்பிரயாணம் முடிந்ததும் மகாநாடுகளின் நிகழ்ச்சி வெளிவரும்.

K. N. தங்கவேலு.
(காரியதரிசி)
(மூகாம்) காரைக்குடி.

மணமகள் தேவை.

26வயதுடையவரும் மாதம் 40 ரூக்கு மேல் வரும்படி உள்ளவருமான ஒருவருக்கு தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்த 20 வயதிற்குள்பட்ட அழகிய பெண்தேவை. விதவையாயினும் சரி. கடிதம் பத்திரப்படுத்தப்படும்.

ப வ. விநாயக மூர்த்தி.
காரியதரிசி சுயமரியாதை:சங்கம்
கிழக்கு வெளிவீதி மதுரை.

மணமகள் தேவை.

மாதம் ஒன்றுக்கு 200ரூபாய் சம்பளமுள்ள சர்க்கார் உத்தியோகத்தில் இருக்கும் 28 வயதுள்ள ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த கனவான் ஒருவருக்கு ஒரு அழகுள்ள பெண் தேவை.

பெண் வாலிப விதவையாய் இருந்தாலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

விலாசம்:—
K. V. V.
C/o Pahutharivu, Erode.

மணமகன் தேவை.

20-வயதுடையவரும், 4-வகுப்பு வரை பயின்றவரும், ரெட்டியார் வகுப்பைச்சேர்ந்தவரும், செகப்பு நிறமும், தக்க உடலமைப்புமுடைய அழகியபால்யவிதவைக்கு மணமகன் தேவை.

மணமகன்:—30- வயதிற்குட்பட்டவரும், படித்து உத்தியோகத்திலோ அல்லது வியாபாரத்திலோ மாதம் ரூ 30-0-0 சம்பாத்திய முடையவரும், பூஸ்திதி உடையவருமான நாயுடு, வேளாளர், செட்டியார், ரெட்டியார், முதலியார் ஆகிய வகுப்பைசேர்ந்தவரும், திடகாத்திர சரீரமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

விருப்பம் உள்ளவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு 0-1-3தபால் தலையுடன் விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும்.

ச. ம. சி. பரமசிவம்.
த.கா.பு.ம. சங்கம், காரியதரிசி
22, பாளையம் பஜார் உறையூர் p.o.
திருச்சி.

(6ம் பக்கத் தொடர்ச்சி)

யோ தியேட்டர்கள், சினிமாக்கள், கிராமபோன்கள் முதலியவைகள் மூலம் மிகவும் கட்டுப்பாடான முறையில் சிறப்பாக கல்வியைப் போதித்தனர். பத்திரிகைகளும், புத்தகங்களும் நூற்றுக்கணக்காக அதிகரித்தன. சென்ற 15 வருஷங்களுக்குள்ளாக 50 கோடி புத்தகங்கள் அங்கு பிரசுரமாகி இருக்கின்றன. அச்சு சாலைகள் ஆயிரக்கணக்கில் கிளம்பி இருக்கின்றன.

இந்தியாவிலோ

நூற்றுக்கணக்கான படித்தவர்கள் வேலைக்கு வழியின்றி ஒருபுறம் தவிக்கிறார்கள். மற்றோர் பக்கம் கோடிக்கணக்கானவர்கள் எழுதப் படிக்கத் தெரியாமலிருக்கின்றனர். முன்னவர்களை உபயோககரமாக உபயோகப் படுத்தி கல்வியின்மையை நீக்க பயன் படுத்திக்கொள்ளாதது ஆச்சரியமானதேயன்றோ? குதிர் நிறைய நெல்லை வைத்துக்கொண்டு பக்கத்து வீட்டில் பட்டினியால் சாவதைக் கண்டு நாம் பராமுகமாக இருக்கிறோம்!

அறியாமை எனும் ஜெயிலிலிருந்து கோடிக்கணக்கானவர்களை விடுதலை செய்யவேண்டியது மிகமிக அவசியமாகும். பணத்திற்காக அன்றி தேசிய சேவை செய்ய வேண்டுமென்ற உணர்ச்சியுடன் தொண்டர்கள் வேலை செய்வார்களாகில் இவ்வேலை பெரும் வெற்றி பெறும். "தமிழிலே அறியவும், தமிழிலே நினைக்கவும், தமிழிலே பேசவும்" கூடியவர்களை தயாரித்து தமிழருக்கு பயனளிக்குமாறு செய்யவேண்டும். உபயோககரமான புத்தகங்களை வெளியிடவேண்டும். நாட்டிலே கல்வி அதிகமாகப் பரவினால், தமிழ் பத்திரிகைத் தொழிலும் அபிவிருத்தியடையும்.

ஜாதி, மத நிற வேற்றுமைகளுக்கு தமிழ் இலக்கியத்தில் இடமில்லை.

இத்தேசத்திலே பார்லிமெண்ட் முறை சர்க்கார் ஏற்படப் போகிறது. இதற்கு பேச்சு வன்மை அவசியமாகும். பேசத்திறமை வாய்ந்தவர்களுக்கு அச்சர்க்காரிலே அதிக சந்தர்ப்பமிருக்கும். எனவே நன்றாகப்பேசப் படிக்க வேண்டும்.

இந்தியாவில் பழையன கழிந்து புதியன புகுந்து வருகிறது. சமுதாய அஸ்திவாரமே இடிந்து வருவது போல் தோன்றுகிறது. எதிர் காலத்தில் என்ன ஏற்படுமென்பதைச் சொல்லமுடியாது. இந்நிலையில், சேவையையும், ஒத்துழைப்பையுமே, வாழ்க்கையின் முக்கிய கொள்கையைக் கொள்ள வேண்டும்.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தென்பதில் கொஞ்சங்கூட சந்தேகம் இல்லை.

பண்டிகை.

பண்டிகை என்பது; ஏழை மக்கள் நெற்றி வியர்வை நிலத்தில் விழ சம்பாதித்து வயிறு நிறையக்கூடச் சாப்பிடாமல், மீத்து வைத்திருப்பதைக் கொள்ளைகொண்டு போகும் ஓர் பேயாம். பல, ஜாதி, மத, நிறபேத சமூக அமைப்புகளாகித் தவிக்கும் இவ்வுலகில், பல மதக்கடவுள், பழக்க வழக்கம், ஆசார அனுஷ்டானப் பெயரால் நடைபெறும் எண்ணற்ற பண்டிகைகள் கொண்டாடச் செய்வது, அதுவும், தினசரி உழைத்து உழைத்தும், உண்ண உணவில்லாது, உடுக்க உடையில்லாது, இருக்கஇடமில்லாது, நிற்க நிழலில்லாது, நடக்க தடம் (வழி) இல்லாது, படுக்கப் பாயில்லாது, பரிதவிக்கும், ஏழைத் தொழிலாளி மக்கள் கொண்டாட வேண்டுமென்பது, பொருந்துமாவென்றும், விஞ்ஞான அறிவிற்கு எட்டாத பண்டிகைகளை ஒழிக்கப்பாடுபடவேண்டுமென்று சுயமரியாதைக்காரர்கள், சொல்லுவது சரியா தப்பா என்று யோசித்துப்பாருங்கள்.

அப்படிப் பொருளையும், நேரத்தையும் கொள்ளைகொண்டு போகும் பண்டிகையில் தீபாவளிப் பண்டிகையும்ஒன்று. அப்பண்டிகையை மக்களெல்லோரும், மிகுந்தஆர்பாட்டத்துடன் கொண்டாடுவார்கள். ஆனால் பெரும்பாலான மக்கள், ஏன்? இப்பண்டிகையைக் கொண்டாடவேண்டும்? இதனால் மக்களுக்கு ஏதாயினும் நன்மையுண்டா என்பதை அறியாவிட்டாலும், அதைப்பற்றி ஆராய்ந்து பார்க்காமலும், எங்கள் தலைமுறைத்தத்துவமாய் நடந்து வரும் பழக்கம் என்று கூறுகிறார்கள். தவிர, இத் தீபாவளிப்பண்டிகையில், ஒரு சில கூட்டத்தாருக்கு மட்டும் லாபமும், மற்ற ஏழைமக்களுக்கு நஷ்டமும் உண்டாகிறது. இப்பண்டிகையில் ஜவுளி, வெடிக்கட்டு ஆகியஇரு வியாபாரங்களுந்தான் தலைசிறந்து நிற்கும்.

ஏதோ ஒரு காலத்தில் மகாவிஷ்ணுபன்றி அவதாரம் எடுத்து பூமிதேவியை இராக்ஷதனிடம் இருந்து காப்பாற்றியபோது, பூமிக்கும், மகாவிஷ்ணுவுக்கும் நரகாசுரன் என்று ஒரு பிள்ளை பிறந்ததென்றும், அக்குழந்தையே தனது வாலிபப்பருவத்தில் மிக அக்கிரமங்களை செய்து தேவர்களுக்கு மிகுந்த இன்னல்களை விளைத்து வந்தானென்றும், அதனை அறிந்த மகாவிஷ்ணு உலகில் கிருஷ்ணாவதாரம் எடுத்தபோது அவனோடு அகோர யுத்தம் செய்து அவனைக் கொன்றதாகவும், அப்பொழுது அவன், தன்னுடைய ஞாபகம் உலகத்தாருக்கு எப்பொழுதும் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதாகவும், அதன்படியே வருடாவருடம் அத் தினத்தில், எண்ணெய் ஸ்நானம்செய்து, கோடி வஸ்திரம் உடுத்தி சந்தோஷத்திற்காக சிறு வெடி போடுகிறார்களாம்.

ஆனால், இந்து மதப் பற்றுள்ள, பல சைவ தலைவர்கள், தமிழ் நாட்டில், நரகாசுரன் என்ற ஓர் அரசன் ஆண்டுவந்தானென்றும், அவன் வடநாட்டு ஆரியர்கள் தமிழ் நாட்டிற்கு வந்து கெடுதி விளைவித்து விடாபடி அவர்களை அடக்கி வந்தானென்றும், அதனையுணர்ந்த ஆரியர்களின் தலைவன், இவனை பல தந்திரங்களால் கொன்று விட்டானென்றும், அதிலிருந்து ஆரியர்கள் அத்தினத்தைத் தங்களின் எதிரி இறந்த சந்தோஷ நாளாக இப் பண்டிகையை கொண்டாடினார்களென்றும், இவ் வழக்கமே, பிறகு தமிழர்களிடத்தும், குடிகொண்டதென்றும், இக் கதையை புராண கர்த்தாக்கள், ஆரியர்களை தேவர்களென்றும், அவர்களின் தலைவனை மகா விஷ்ணு என்றும், தமிழர்களை அரக்கரென்றும், அவர்களின் தலைவனை நரகாசூரன் என்றும் கூறப்பட்டிருக்கிறதெனவும் சொல்லுகிறார்கள்.

தோழர்களே! இக் கதைகள் உண்மையாக இருந்தாலும் பொய்யாக இருந்தாலும் சரி, அதைப் பற்றி நமக்கு சிறிதும் அக்கரையில்லை. ஆனால், இப்பண்டிகையில், மக்களுக்கு அதுவும் நமதிந்திய மக்களுக்கு ஏதாவது நன்மையுண்டா எனப்பார்க்க வேண்டும். சாதாரணமாக ஒருவன் தினம், நான்கணா சம்பாதித்து, வயிறு நிறையச் சாப்பிடாமலும், சேமித்து வைத்து கடைசியில் இப்பண்டிகையைக் கொண்டாடுவதற்கு எல்லாப் பணத்தையும், துணி மணிகளிலும், பட்டாஸ் கட்டுகளிலும்செலவழிக்கின்றான். இன்னும் அனேகம் பேர் தினசரிசோற்றுக்கு வழி இல்லாமல், யாதொரு வேலையும் அகப்படாமலும், வீட்டில் உட்கார்ந்திருக்கிற பேர்வழிகள்கூட, இப்பேர்ப்பட்ட பண்டிகைத் தினங்களில், எங்கேயாவது அலைந்து திரிந்து கடனை வாங்கியாவது செலவழிக்கின்றார்கள். பிறகு, வெகுநாள்வரை அக்கடனை கொடுக்க முடியாமல், வாங்கின முதலை விட இரண்டு மூன்று மடங்கு வட்டி வளர்ந்து கடைசியில் கொடுக்க முடியாமல் துன்பப்படுகிறார்கள்.

மேலும், இப்பண்டிகையில் இன்னொரு அதிசயமான சம்பவம் ஒன்றிருக்கிறது. அதாவது இந்தியாவிற்குப்பண்டிகை வர, சீனா, ஜப்பான் முதலிய தேசங்களிலிருந்து வெடிக்கட்டுகளும், மத்தாப்புகளும் வரவேண்டுமாம்.

ஆகையினால் இத்தீபாவளியைப் போன்ற பண்டிகையினால், மக்களுக்குப்பணச் செலவும், கால விரையமும், சுகாதாரக் குறைச்சலும், மிகுந்த துன்பமும், பலவிதமான கஷ்டங்களும் தான் உண்டாகுமே தவிர நாட்டிற்கோ, மக்களுக்கோ, கடுகளவு நன்மையாவது கிடையாது என்பது நிச்சயம்.

முடிவுரை.

ஆக, நமது நாட்டுப் பொருளெல்லாம், அனேகமாக பிரயோஜனமில்லாததுறையிலேயே செலவழிகின்றன. பயனற்ற செலவுகள் இந்து மதத்தில் தான் மிகுதி. சாதாரணமாக, வாழ்க்கை நடத்துவதற்கு, ஆணும் பெண்ணும்ஒப்பந்தம்செய்து கொள்ளும், கலியாணம் என்பதற்கு ஏராளமான பணத்தைச் செலவழிக்கின்றனர். சாதாரண செல்வமுடைய ஒருவனுக்கு நாலுபெண்ணும், நாலு பிள்ளைகளும் இருந்து விட்டால் அவர்களுடையகலியாணச் செலவிற்கே, அக்குடும்பமெல்லாம் செலவாகி விடுமென்பது திண்டாட்டம், இதைப்போன்றே,இறப்பு, கருமாதி முதலிய காரியங்களுக்கும் ஏராளமாகச் செலவு செய்கின்றனர். யாதொரு பிரயோஜனமும் இல்லாத, திருவிழா, பண்டிகை நாட்களை கொண்டாடும் வரையிலும் ஏராளமாகச் செலவுசெய்கின்றனர். இன்னும், நோய் அடைந்தவர்கள் தக்க மருந்தைச்சாப்பிட்டு அந்நோயைத் தீர்க்க வழிதேடாமல், வீட்டுத்தெய்வங்களையும், ஊர் தெய்வங்களையும், நாட்டுத்தெய்வங்களையும், காட்டுத்தெய்வங்களையும், வேண்டிக்கொள்ளும் வகையிலும் ஏராளமாகச் செலவு செய்கின்றனர். இச்செலவுகள் யாவையும் ஒவ்வொரு தனிக் குடும்பத்தினரால் செலவழிக்கப்படுவதாயினும், அதனால் நாட்டுச்செல்வம் குறையும் என்பதில் சந்தேகமேயில்லை. குடும்பங்களின் செல்வமே, குவலயத்தின் செல்வமாகும் என்பதை ஒவ்வொருவரும் நினைக்கவேண்டுகிறோம்.

ராமசாமி-கோதையம்மாள். சுயமரியாதைத் திருமணம்.

சுக்கிலசத்தம் பகுத்தறிவுச் சங்கத்தின் ஆதரவில், சுயமரியாதைக் கொள்கையில் தீவிர பற்றுடையவரும், ஏழை ஆதிதிராவிடமாணவர்களின் கல்விக்காக அரும் பாடுபட்டு வருபவருமான ஷையூர் (ஆசிரியர்) தோழர் எஸ்.எஸ். ராமசாமியவர்களுக்கும், தோழர் எஸ். கோதையம்மாள் அவர்களுக்கும் 21-10-34-ல் இவ்வூர் பஞ்சாயத்து போர்டு தலைவரும், இராமநாதபுரம் ஜில்லா போர்டு மெம்பரும், இவ்வூரில் சுயமரியாதை பரவுவதற்கு காரணருமான தோழர் என். எஸ். ஆர். டி. ரெங்கசாமி அவர்கள் தலைமையில் ஷை சங்கத்தலைவர் தோழர் எம். எஸ். டி. ராமநாதன் அவர்களால் சீர்திருத்த முறையில் இல் வாழ்க்கையொப்பந்தம் நடத்திவைக்கப்பட்டது. அவ்வமயம் தம்பதிகளுக்கு, சங்கத்தாரால் உபசாரப்பத்திரம். வாசித்தளிக்கப் பட்டது. மாலையில் கூடிய சங்கம் பொதுக்கூட்டத்தில் அருப்புக்கோட்டை தோழர்கள் ஆசிரியர், செல்வம், வீரைய்யா, திருப்பதி, அரசப்பா முதலியோர்களால், சீர்திருத்தத்திருமணம் என்பதைப் பற்றி நீண்ட சொற்பொழிவாற்றினார்கள் பின் சங்க காரியதரிசி தோழர் என். கந்தசாமி அவர்களால் வந்தனம்கூறப்பட்டு கூட்டம் கலைந்தது எனக் காரியதரிசி எழுதுகிறார்.

(5ம் பக்கத்தொடர்ச்சி)

போதிக்கும்படி உத்தரவும் அளித்துள்ளனர். அப்படி இருந்தும் அதே பள்ளிக்கூடங்களில், பூமி, பாயாக சுருட்டப்பட்டு ஒரு மனிதனால், கடலில் ஒளித்து வைக்கப்பட்டது என்று போதிப்பது "படிப்பது ராமாயணம் இடிப்பது பெருமாள் கோயில்" என்ற முறையில்தான் உள்ளது. இப்பேர்ப்பட்ட ஒரு கோளமான பூமியை பாயைப்போன்று சுருட்டினானும். சுருட்ட வேண்டுமாயின் பூமி தட்டையாய் (பாய் போன்று) இருத்தல் வேண்டுமே. அப்படி ஏதாகிலும் இருக்கின்றதா எனப் பூகோள சாஸ்திரப்படி ஆராயுங்கள். பிறகு சுருட்டிய பூமியைக் கடலில் ஒளித்தானும். அப்படி ஒளிக்கும்போது இவன் எதன் மேல் நின்று கொண்டிருந்தான்? கடல் எங்கே இருந்தது? இதில் ஏதாவது உண்மை இருக்குமா என வாசகர்களே முடிவு கட்டிக்கொள்ளுங்கள். பிறகு இதை விஷ்ணு பன்றி அவதாரமாக வந்து நிலைக்கச் செய்தாராம். இது ஏதாவது பொருத்தமுடையதாய் இருக்கின்றதா என யோசியுங்கள். தற்காலத்தில் உள்ள மலத்தையே ஆகாரமாக உட்கொள்ளும் பன்றியைப் போன்று வந்து காப்பாற்றினாராம். இவருக்கு இதைவிட வேறு அவதாரம் கிடைக்கவில்லை போலும். பிறகு மலத்தை உட்கொள்ளும் பன்றியை பூமிதேவி காதல் கொண்டாளாம். பூமி என்பது மண்ணும் கல்லும் நிறைந்தது. இந்த மண்ணுக்கும், பன்றிக்கும் கல்யாணம் நடந்ததாம். அது எப்படித் தான் நடந்ததோ! இதுவும் ஆச்சரியமானதே. மண்ணுக்கும், பன்றிக்கும் பிள்ளை பிறந்ததாம். அந்தப் பிள்ளை நரகாசூரனும். அவனைத்தான் பன்றி கிருஷ்ணனாக வந்து கொன்றதாம். எந்த தந்தைக்குத்தான் தன் மகனைக் கொல்ல விருப்பம் இருக்குமோ. மகன் எவ்வளவு துன்மார்க்கனாயிருந்தாலும் கருணையுள்ள, பெருந்தன்மை படைத்த, புத்தியுள்ள ஒரு தகப்பன் மகனைத்திருத்த வேண்டியதே தவிர கொல்வது என்பது அடாத செய்கையே அல்லவா? தகப்பன்தான் அம்மாதிரி என்றால் தாயும் தன் முன்னிலையில் மகனைக்கொல்ல வேண்டுமென்று சொன்னாளாம். பத்து மாதம் சுமந்து பெற்ற தாய் தன் மகனைக்கொல்ல சம்மதித்தது என்பது சிறிதும் நம்பக்கூடியது அன்று.

இக்கதையில் முக்கியமாக கவனிக்க வேண்டியது யாதெனில் பார்ப்பன வம்சத்தைச் சார்ந்த தேவர்களின் வார்த்தையைக்கேட்டு, பார்ப்பனரல்லாத தமிழர் வம்சத்தைச் சார்ந்த ஓர் வீரனைக்கொன்றதாகும். மேலும் தமிழர் வம்சத்தைச் சார்ந்தவர்களை, அசுரர்கள், அரக்கர்கள் தாழ்ந்தவர்கள், என்பதும் பார்ப்பன வம்சத்தைச்சேர்ந்தவர்களை தேவர்கள், பரிசுத்தமானவர்கள் உயர்ந்தவர்கள் என்பதும் பார்ப்பன சூழ்ச்சியே தமிழர்களை தாழ்த்திக்கூறியுள்ள கதையைக் கொண்ட தீபாவளியை தமிழர் கொண்டாடுவது என்றால் இதைவிட கேவலமானது வேறொன்றும் இல்லை. பார்ப்பனர்கள் இதைக்கொண்டாட வேண்டியதுதான். ஏனென்றால் அவர்கள் கொட்டத்தை அடக்கிய ஒரு தமிழன் இறந்த தினம். இதை நாம், நமது தமிழ் வீரனைப்பறிகொடுத்ததினம் என எண்ணி கவலைப்பட வேண்டியதை விட்டு விட்டு பார்ப்பனரின் வாலைப்பிடித்துக் கொண்டு ஒரு நன்னாளாகக் கொண்டாடுகிறோம்.

தீபாவளியால் நாம் அடையும் தீமைகளைச் சற்று கவனிப்போம். சுகாதார சம்பந்தமாய் ஆராய்ந்தால் மழைகாலங்களில் மிதமான ஆகாரத்தை உட்கொள்ள வேண்டும். அப்படி இருந்தும் மழைகாலமாகிய ஐப்பசி மாதத்தில் அதிகாலையில் எண்ணெய் தேய்த்து குளித்துவிட்டு, எண்ணெய்களினாலும், நெய்களினாலும் செய்யப்படும் பலகாரங்களையும் அளவுக்குமீறி உட்கொள்ளுகிறார்கள். இது சரீர சுகத்துக்கு ஏற்றதா என ஆராய்வதே இல்லை. இப்படி உட்கொள்வதினால் தான் அஜீரணம் ஏற்பட்டு, காலராவில்கொண்டுபோய் கடைசியில் சுடுகாட்டிற்கும் கொண்டுபோய் விட்டுவிடுகிறது.

மேலும் அன்றைய தினம் அதிகமான பணம் பட்டாசுகளுக்காகச் செலவழிக்கப் படுகின்றது. நமது நாட்டில் விற்கும் பட்டாசுமன் அனைத்தும் அயல் நாட்டினின்று இறக்குமதியாவதே. சுதேசியை ஆதரியுங்கள் என்று பேசும் சுயநலப் பிரியர்களும் அயல் நாட்டினின்று . இறக்கு மதியான பட்டாசுகளைத்தான் உபயோகிக்கின்றனர். இதை யாராவது கண்டு கேட்டால் நான் யாது செய்வது வீட்டில் குழந்தைகள்வேண்டுமென்கின்றன என்று வாய்கூசாது கூறுவான். பட்டாசுகள் வாங்குவதால் அயல் நாட்டிற்கு எத்தனை கோடி ரூயாய்கள் செல்கின்றன. ஒன்றுக்கும் பிரயோஜனப்படாத பட்டாசுகளை சுட்டு கரியாக்குவதால் என்ன நன்மை. மேலும் இப்பட்டாசின் விஷப்புகையால் நமக்கு வரும் வியாதிகள் பல.

பிறருடைய உழைப்பிலேயேபிழைக்கும் பணக்காரர்கள் தங்கள் பணத் திமிரினால் கொண்டாடுகின்றார்கள் என்றால் ஏழைப் பாட்டாளிகளும் இதைக்கொண்டாடி தீபாவளியாய் விடுகிறார்கள். தீபாவளி வருவதற்கு முன்னாலேயே தான் சம்பாதிப்பதை சரியாக வயிற்றிற்குச் சாப்பிடாமல் மிகுதிவைத்து கடைசியில் தீபாவளியன்று செலவு செய்து விடுகின்றனர். போதாமற்போனால் கடன் பட்டாவது தீபாவளியைக் கொண்டாடுகின்றனர் ஒரு நாள் பண்டிகைக்காக பலநாள் உழைப்பைச்செலவழிப்பது என்பது எவ்வளவு மூடத்தனமானது.

தோழர்களே! இனி யேனும் இம்மாதிரியான ஆபாச பண்டிகைகளைக் கொண்டாடாதிருப்பதற்காக அங்கங்கே விஷயத்தை எடுத்துக் கூறி தடைசெய்யுங்கள்.

ஏஜண்டு தேவை.

திருச்சி பொன்மலையிலும், கோலார் தங்கவயலிலும் நமது "பகுத்தறிவு" வாரப்பத்திரிகை விற்பனை செய்வதற்கு டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டு தேவை. மற்ற விபரங்கள் தெரிந்து கொள்ள விரும்புகின்றவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர், "பகுத்தறிவு" ஈரோடு

நீரழிவு.

நீர்க்கடுப்பு, வெள்ளை, வெட்டை, பவுந்திரம் முதலிய வியாதிகளுக்கு 120 புடம் போட்ட அப்ரேக் செந்தூரமும் மேகநாத நெய்யும் சாப்பிடுங்கள்.

இந்த மருந்தை சாப்பிட்டு ஆயிரக்கணக்கான ரோகஸ்தர்கள் குணமடைந்து விட்டார்கள். நீரழிவுக்கு இதைப்போன்றதொரு குணமுள்ள மருந்து வேறெங்கும் கிடைக்காது. போலி மருந்துகளை வாங்கிச் சாப்பிட்டு மோசம் போகாதீர்கள்.

இதற்குப் பரீக்ஷை.

ஒரு மண்கலசத்தில் ஊசியினால் 7, 8 துவாரங்கள் போட்டு அது நிறையத் தண்ணீர் ஊற்றி அதில் நமது அப்ரேக் செந்தூரத்தைச் சிறிது போட்டால் தண்ணீரை ஒழுக விடாமல் நிறுத்திவிடும். இதைப்போலவே நீரழிவினால் அதிகமாகப்போகும் நீரை நிறுத்தியும், நீரில் சர்க்கரை இருந்தால் அதனை மாற்றியும், நீர்ப்பெருக்கு, நீர்க்கசிவு, பிரமியம், சொட்டு மூத்திரம், தந்திமேகம், நீடித்த வெள்ளை, இந்திரியம் நீருடன் போதல், பவுந்திரம் முதலிய வியாதிகளை அதிவிரைவில் குணப்படுத்துகின்றது. எவ்வளவு நாட்பட்ட கொடிய ரோகமாயிருந்த போதிலும் 24 நாள் வரை நமது செந்தூரத்தைச் சாப்பிட்டால் குணமடையலாம்.

24 நாள் மருந்து விலை ரூ. 15. 12 நாள் மருந்து விலை ரூ. 10. 3 நாள் மேகநாத நெய் ரூ. 5.

குறிப்பு:— சிலருக்கு நீரானது பசு மூத்திரம் போலும் கற்றாளஞ்சாற்றைப்போலும் சுண்ணாம்புத் தண்ணீர் போலும், பனங்கள்ளைப்போலும், நெய்யைப்போலும், தேனைப்போலும், கொழுப்பைப் போலவும் இறங்கும். காய்ச்சினால் அந்தந்த வாசனை கொடுக்கும். இப்படிப்பட்ட நோய்களெல்லாம் நிச்சயமாய் குணமாகின்றது. நம்பிக்கையுடன் மருந்தைத் தருவித்துச் சாப்பிடுங்கள். நம்பிக்கையற்றவர்கள் நேரில் வந்து குணப்படுத்திக்கொண்டு போகலாம். மருந்துடன் சாப்பிடும் பத்திய பாகங்கள் அனுப்பப்படும். மலாய் நாட்டு வாசிகள் 5 ரூபாய் அட்வான்சாய் அனுப்பி மருந்துக்கு ஆர்டர் செய்யவேண்டும்.

அரண்மனை வைத்தியர் S. T. மாணிக்கம் பிள்ளை,
சித்தவைத்தியசாலை,
ஊத்துக்குளி ரோடு, திருப்பூர். (கோயமுத்தூர் ஜில்லா)

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தனை காணிக்கைபெருகியஅளவிற்கு அந்த அந்த மதத்தின் பெயரால் சோம்பேறியாயிருந்து கொண்டுவமாற்றிவயிறுவளர்க்கும்பூஜாரிகளுக்கும், பாதிரிகளுக்கும், மூல்லாக்களுக்கும் தான் பெரும்பாக்கியம். தன்னை ஒரு அரசியல்வாதி அதிலும் இந்தியாவின்தலைவர் என்று நடித்துக்காட்டிக்கொண்டிருக்கும் காந்திஜீயும் இந்தியர்களை பாழ்படுத்திவரும் மூடநம்பிக்கைகளை ஒழிக்க பாடுபடாமல் மூடநம்பிக்கையை மேலும் மேலும் வளர்த்து வரவேபாடு படுகிறார். இதைப் பார்த்து அறிஞர் உலகம் காந்திஜீபேரில் பரிதாபப்படாமல் வேறு என்னதான் செய்யும்?

மனிதன் முன்னேற்ற மடைவதற்கு முன் பலாத்காரமும், அயோக்கியத்தனங்களும் தான் நீதியென்றுசொன்ன பண்டையகாலத்தில் பெண்களை கௌரவமாய் நடத்தும் முறை இருக்கவில்லை. அக்காலத்தில் காமவெறிகொண்ட பலமுள்ளவர்கள் பலாத்காரமாக பெண்களை ஆட்டுக் கூட்டம், மாட்டுக் கூட்டங்கள் வைத்திருப்பதுபோல்ஏராளமானஏழைப்பெண்களை;அடைத்துவைத்துக்கொண்டிருந்திருக்கிறார்கள். இவர்கள்எல்லாரையும் அறியாமை நிறைந்தஇந்தியர்கள் கடவுளாக கருதிவந்தார்கள்! இந்தியர்களின் கடவுள்கள் பதினாயிரக்கணக்கான பெண்களை வைத்துக் கொண்டிருந்தார்கள் என்று இந்தியர்களின் வேதசாஸ்திரங்களில் எழுதிவைக்கப் பட்டிருக்கின்றன. ஆயிரக்கணக்கான பெண்மணிகளை அடிமைப்படுத்திவைத்துக் கொண்டு அயோக்கியத்தனத்தில் நடந்து வந்த இவர்களை தெய்வமாகஇன்றைய இந்தியர்களும் வணங்கிவருகிறார்கள்! நீதியும் யுக்தியும் எப்படியானாலும் ஆகட்டும். பலாத்காரத்திற்கும், அயோக்கியத்தனத்திற்கும் தலைவணங்குவதும், பூஜைசெய்வதும் தான் எங்களுடைய தன்மை என்று இந்தியர்கள் அவர்களுடைய பண்டையகால அயோக்கியர்களை கடவுள்களாக(விக்கிரகமாக) ச்செய்து வைத்துக் கொண்டு பூஜித்து வருகிறார்கள். இவ் விக்கிரகங்களின் பயங்கரமான உருவங்களே (பண்டைய இந்தியர்களின் கடவுள்களாக நடித்த மனிதர்களே) இந்தியர்களை அக்கிரமமானமுறையில் பயமுறுத்தி அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்தி வந்திருக்கின்றனஎன்று காட்டுகின்றன. டசன் கணக்கான கைகளையும், ரோமத்திற்கொருகண்வீதமுள்ள தேகத்தையும், மூன்றுநான்கு ஜோடிமுகங்களையும், நெருப்பைகக்கும் வாயையும், கொடியநீண்டபற்களுடைய வாயையும், கொடிய பாம்புகளைச் சுற்றிய சரீரத்தையும், பயங்கர மிருகங்களை வாகனமாகவும் கொண்டிருக்கும்அற்புதங்களைச் செய்யும் கடவுள்கள் தான் இந்தியர்களிடத்தில் ஏராளமாகக் காணக்கிடக்கின்றன. பெண்சாதியை தலையில் சடைமயிருக்குள் ஒளித்து வைத்துக் கொண்டிருந்த கடவுள்களும் இந்தியர்களிடத்திலுண்டு இன்னும் கிருஷ்ண பகவானின் செய்கையை பெண்களிடம் காட்டப்போனால் விளக்குமாற்றினால் அடிக்காமல் விடமாட்டார்கள். ஆனால் கிருஷ்ணன் அந்த மாதிரி நடந்து கொண்டதிற்கு அவரை கிருஷ்ணபகவான் என்று காந்திமுதல் மாளவியாவரையிலும் வணங்கி வருவது ஆச்சரியப் படவேண்டிய காரியமல்லவா? இந்தியாவைப் போன்று கோடானுகோடிவிதமான தினுசுதினுசான கடவுள்களும், அதைபக்தியுடன் போற்றி புகழ்ந்து வரும் பக்தர்களையும் போன்று இந்த உலகில்வேறு எந்ததேசத்திலுமில்லை. மேனாட்டில் போய் பி.ஏ.எம்.ஏ. வரையிலும் படித்து பட்டம்பெற்றுவந்த இந்தியர்களும் இந்த மூடநம்பிக்கையிலும், குருட்டு பழக்க வழக்கங்களிலும் மூழ்கிக்கிடக்கிறார்கள். இவர்கள் அறிவிற்கு சில கோவில்களில் செருப்படியும், பட்டை அடியும் மேளதாளங்களோடு அளிக்கிறார்கள்! இதை மூடநம்பிக்கைக்காக அளிக்கும் தண்டனை என்றுதான் கருதவேண்டும். இவர்களுக்கு சிறுவயதிலேயே அறிவுவளர்ச்சியடைய விடாதபடி பெற்றோர்களாலும், மற்றவர்களாலும் சிறு பிராயத்திலேயே இத்தியாதி மூட நம்பிக்கைகளை மிக நுணுக்கமாக புகுத்திவிடுவதால் அது அவர்களை விட்டும் ஒழிவதில்லை. இந்த மூடநம்பிக்கைகளையும் குருட்டுத்தனத்தையும் அத்தேசத்தை விட்டும் ஒழித்து விடுவது என்பது சாதிக்க முடியாத காரியமாகவே தெரிகின்றன. இந்தியாவில் நிறைந்திருக்கும் இந்த குருட்டுத்தனங்களும், அதற்குப் பொருத்தமான மதங்களும், மதகுருக்களும், கொடிய ஜாதி பாகுபாடுகளும் இல்லாமல் இருந்திருக்குமாகில் இந்தியா வெகு காலத்திற்கு முன்பே விடுதலையடைந்திருக்கும். இந்தியர்களிடத்தில் இத்தியாதி குருட்டுநம்பிக்கைகளும், மதபக்தியுமிருக்கும் வரையிலும் பிரிட்டிஷாருக்கு இந்தியர்களை அடிமைப் படுத்தி வைத்துக்கொண்டிருப்பதற்கு ஒருவிதக்கஷ்டமும் இல்லை. மகாத்மா காந்தி முதலிய தேசியத் தலைவர்களும் கடவுள் வெறி பிடித்தவர்களாக இருப்பது இந்தியாவிற்கே அவமானம் தன்னை ஒரு தேசத்திற்கு விடுதலைகொண்டு வரும் தலைவர்என்று கருதிக்கொண்டிருக்கிறவர் இத்தகைய மூட நம்பிக்கையில் மூழ்கிக்கிடப்பதைப் பார்த்து அறிஞர் உலகம் ஆச்சரியப்படுகிறது! இந்தியாவில் இத்தியாதி பைத்தியகாரத்தன மில்லாதவர்களாயிருப்பவர்கள் நவீன எண்ணங்கொண்ட சோஷியலிஸ்டுகள் (சமதர்மிகள்) மாத்திரம் தான் இந்தியாவிடுதலையடைந்து முன்னேற்றமடைய வேண்டுமாகில் சோஷியலிஸ்டுகளாலே ஆக முடியுமேயன்றி காந்தி போன்ற "தெய்வீகத் தன்மை" பொருந்தியவர்களால்(மூடநம்பிக்கை கொண்டவர்களால்) ஆக முடியாதென்பதை இந்தியர்கள் குறித்துக்கொள்ள வேண்டும்! காந்தி போன்றவர்களால் இந்தியா பிரிட்டனை விட்டும் விடுதலையடைந்தாலும் அது படுகுழியில் விழுந்து உழன்றுகொண்டு கேவலமான தன்மையிலிருக்குமேயன்றி முன்னேற்றமடையாது.

இந்தியாவிற்கு இரண்டாவதாக இலங்கையிலும் சிங்களவர்களிடத்தில் இதைப்போன்ற மதக்கிறுக்கு இருக்கின்றன. இலங்கையும் பௌத்த கோவில்களாலும், சர்ச்சுகளாலும், மசூதிகளாலும் கேவல நிலைமையிலிருக்கின்றன. இலங்கையரையும் அடிமையாக்கி படுகுழியில் தள்ளியிருப்பது இந்தியாவிலுள்ளது போன்ற கடவுள், மதம், முதலாளித்துவம் என்பவைகள்தான் இலங்கையிலுள்ள தலைவர்களும் காந்திஜீ போன்ற குருட்டு நம்பிக்கைக்காரர்களே. ஆராய்ச்சியும், ஞானமும் இல்லாத பண்டைய காலத்தவர்களின் மூடநம்பிக்கைகளுக்கும், குருட்டுப்பபழக்க வழக்கங்களுக்கும், மூடமதங்களுக்கும் குற்றம் சாட்டத்தேவையில்லை. குற்றம் சொல்லவேண்டியது அறிவும் ஆராய்ச்சியும் ஞானமும் பெருக்கெடுத்தோடும் தற்காலத்திலும் மக்களை அடிமைத்தனத்தில் ஆழ்த்தி மக்களை மூடர்களாக்கி வரும் பண்டைய கொள்கைகளை ஏற்றுக்கொண்டிருப்பவர்களைத்தான்.

(இதைப்போன்ற எத்தனையோ கட்டுரைகள் "சுயதேச மித்திரயா" வில் அறிஞர்கள்எழுதி வருகிறார்கள். அவைகளையெல்லாம் மொழிபெயர்த்து இந்தியப்பத்திரிகைகளுக்கு அனுப்ப பிரியப்படவில்லை. ஏனெனில் சுயமரியாதை இயக்கத்தார் எட்டு வருட காலமாக எழுதியும் பேசியும் வருகிறதுபோதும். சுயமரியாதை இயக்கம் சொல்லுவது இந்தியர்களின் செவியில் ஏறுததினாலேயே யான் இதை மொழிபெயர்த்து அனுப்பினேன். மொ—ர்)

மலையாளம் சில்க்.

$2\frac{1}{4}$-வீதி. 5-நீளம் பட்டு 1-க்கு ரூ. 1-6
ஷை கம்பிக்கரை டஜன் 1-க்கு " 14-0
ஷை $4\frac{1}{2}$-நீளம் டஜன் 1-க்கு " 10-0
3-வீதி 8-நீளம் வேஷ்டி 1-க்கு " 3-8

S. K. R. வீவிங் பாக்டரி,
கோட்டார், திருவிதாங்கூர்.

கொளும்பு.

இவ்விடத்தில் குடி அரசுப்பதிப்பக புஸ்தகங்களும், பகுத்தறிவு நூற்பதிப்புக்கழக புஸ்தகங்களும் விலைக்குக் கிடைக்கும்.

விலாசம்:—

K. N. S. Pillai,
News Agent 281, 2nd Div.
மருதானை, கொளும்பு.

அறிவியக்கப் பத்திரிக்கைகள்.

—0—

நாகர் கோவிலிலிருந்து
தோழர் பி. சுப்பிரமணியம்
பி. ஏ, பி. எல். அவர்களை
ஆசிரியராகக்கொண்டு

"தமிழன்"

ஆங்கிலோ—தமிழ் வாரப்பத்திரிகை ஞாயிறுதோறும் வெளிவருகிறது.

வருட சந்தா ரூ. 3—0—0
6 மாதம் ,, 2—0—0
3 மாதம் ,, 1—4—0

மானேஜர், "தமிழன்" ஆபீஸ்,
கேட்ரோட், நாகர்கோவில்.

"தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தவராதுழைப்பவன் தமிழனே. வெட்டு ஒன்று துண்டுஇரண்டான அபிப்பிராயங்கள். அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0
வெளி நாடு ரூ. 5—0—0

விலாசம்:—

மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்

விதவையர் விடுதலை முழக்கம்.

இது விதவைகள்படும் கொடுமைகளையும், அவர்களின் விடுதலைக்குரிய வழிகளையும் விளக்கும் இனிய வர்ன மெட்டுகளாலமையப்பெற்றது. $1\frac{1}{4}$ அணா ஸ்டாம்பு அனுப்பினால் புக் போஸ்டிலனுப்பப்படும். விலை அணா $\frac{1}{2}$.

விலாசம்:—க. அ. புன்னைமுத்து
கல்லூரணி, அருப்புக்கோட்டை வழி

ஏஜண்டு தேவை.

சென்னையில் நமது "பகுத்தறிவு" வாரப்பத்திரிகை விற்பனை செய்வதற்கு டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டு தேவை. மற்ற விபரங்கள் தெரிந்து கொள்ள விரும்புகின்றவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்
"பகுத்தறிவு" ஈரோடு.

பகுத்தறிவுக் கழக வெளியீடுகள்.

பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணா 5.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை

(சார்லஸ் T. கோர்ஹாம் மொழிபெயர்ப்பு)

இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும் மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 5.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

(பெர்ட்டிரண்ட்ரசல் மொழிபெயர்ப்பு.)

இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணா 3.

மதம் என்றால் என்ன?

(ராபர்ட் G. இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 2.

கடவுள்.

(ராபர்ட் ஜி. இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இதில்உலகிலுள்ள பல்வேறு கடவுள்களின்தன்மைகளையும், உலகத் தோற்றத்திற்குக்காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும்விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட்பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது. விலை அணா 5.

மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

(பெர்ட்டிரண்ட் ரசல் மொழிபெயர்ப்பு).

இந்நூல் மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது. விலை அணா 3.

நான் சம்சயவாதி ஆனதேன்?

(இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இதில், தான்கடவுளைப்பற்றிக்க வலைப்படாதவனாயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணா 3.

பிரபஞ்ச உற்பத்தி

இந்நூலில் பரிணாம வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 3.

மதப் புரட்சி.

இஃது தோழர் ஜோசப் மெக்காபி அவர்களால் எழுதப்பட்ட ஆங்கிலப் புத்தகத்தின் மொழி பெயர்ப்பாகும். விலை அணா 4

குடி அரசு கலம்பகம்.

இந்நூல், தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள், குடி அரசில்எழுதிய தலையங்கங்களையும், பலமகாநாடுகளில்பேசியபேச்சுகளையும் ஒன்று சேர்த்துத்திரட்டியதாகும். 1-ம் பாகம். விலை அணா 6.

பாதிரியும், பெண்களும், பாவமன்னிப்பும்.

(பாதிரி சேனிக்யூ மொழிபெயர்ப்பு.)

இதைப்படிப்பவர்களுக்கு மதக்கொள்கையின் ஆபாசங்களும், அவற்றின் துஷ்பிரயோகங்களும், உள் எண்ணங்களும் பளிங்குபோல் விளங்கும்.சுமார் 90 பக்கங்கள் கொண்டது. 1-ம்பாகம் விலை அணா 3.

பிரகிருதி வாதம்.

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

கடவுள், மதம், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவை இதில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. விலை அணா 3.

மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்.

அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

இதில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள பேதங்கள் விளக்கப்பட்டிருக்கிறது. விலை அணா 3.

"மெய்ஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்"

தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்களால் எழுதப்பட்டது. இதில் சகல விதமான மூடநம்பிக்கைகளும், விபரமான பதில்கள் இருக்கின்றன. சுமார் 128 பக்கங்கள் உள்ள நூல். விலை அணா 6.

ஷை இரண்டாம்பாகம்

சுமார் 116 பக்கங்கள் கொண்டதாகும். விலை அணா 5.

பாதிரிகளின் பிரமச்சரிய லட்சணம்.

ஆசிரியர், ரெவரெண்டு

ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் M.A. மொழிபெயர்ப்பு

இதில் பிரமச்சரியம் என்னும் பெயரால் பல பாதிரிகள் செய்து வந்த அக்கிரமங்களைக் குறித்துச் செய்த சொற்பொழிவாகும். விலை அணா 4.

மரணத்திற்குப் பின் ஜீவன் உண்டா?

என்பதைப் பற்றி பல ஆதாரங்களுடன் ஆராய்ச்சி செய்துள்ள ஆங்கிலப் புத்தகத்தின் மொழிபெயர்ப்பாகும். விலை அணா 4.

விலாசம்:—

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும் ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூல் (தமிழ் மொழிபெயர்ப்பாகும்.)

விலை அணு 8.

லெனினும் மதமும்.

இது ருஷிய பொதுவுடைமைக் கொள்கைவீரராகிய V.I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். விலை அணு 4.

பொதுவுடைமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உபரிய லட்சியங்களை எடுத்துக்காட்டும் மிகச் சிறந்த நூல்.

விலை அணு 3.

கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட ஆராய்ச்சி நிரம்பிய நாஸ்திக விளக்க நூல். விலை அணு 4.

கைவல்ய சாமியாரின் கட்டுரைகள்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது.

விலை அணு 8.

இராமாயண ஆராய்ச்சி.

இது இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் கண்ணாடிபோல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் ஒரு ஆராய்ச்சி நூல். பாலகாண்டம் அணு 4.

அயோத்தியாகாண்டம் அணு 8.

ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் சூட்சிகளையும் ஆபாசங்களையும், அவைகள் உண்டாக்கப்பட்ட எண்ணங்களையும் விளக்கிக் காட்டும் பெரியபுத்தகம். டிம்மி 150 பக்கம் கொண்டது. விலை அணு 4.

தர்ம பரீக்ஷை.

புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல், இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்டது. விலை அணு 3.

மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால் மேயோ கூற்றை எடுத்துக்காட்டி இந்திய நாட்டின் நிலைமையை விளக்கி எழுதப்பட்ட நூல். விலை அணு 3.

பங்கஜம்.

பார்ப்பனீயத்தை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணு 4.

போல்ஷ்விக் முறை.

விலை அணு 1.

சோஷியலிசம்.

உலகானுபவப்பேரறிஞர் ஜியார்ஜ் பர்னட்ஷா எழுதிய "Intelligent womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். ஏ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் பார்க்கவேண்டிய நூல். விலை அணு 3.

சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணு. வேண்டுவோர் 1¼ அணு ஸ்டாம்பு அனுப்பவும்.

ஈ. வெ. ரா. சொற்பொழிவு.

இந்நூல் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சென்னையில் நடைபெற்ற சமூக சீர்திருத்த மகாநாட்டில் தலைமை வகித்துப்பேசிய தலைமையுரையை ஒன்றாகத் திரட்டியதாகும். சமூகசீர்திருத்தமடைய ஆர்வமுள்ள தோழர்கள் ஒவ்வொருவர் கையிலும் இது இருக்க வேண்டியதவசியமாகும்.

விலை அணு 2.

பர்னர்ட்ஷா உபந்யாசம்

இந்நூல் அறிஞர் பர்னர்ட்ஷா அவர்கள் அமெரிக்காவில் ரஷ்யாவைப்பற்றி செய்த பிரசங்கத்தை ஒன்றாகத் திரட்டியதாகும். விலை அணு 1.

ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்.

இது தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல் நாட்டுச்சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பி வருங்கால் கொழும்பு கண்டி முதலிய இடங்களில் செய்த சொற்பொழிவுகளை ஒன்று திரட்டியதாகும். தோழர் ஈ. வெ. ரா அவர்களின் மேல் நாட்டு அனுபவங்களும், பல ஆழ்ந்த அபிப்பிராயங்களும் கொண்டது.

விலை அணு ½.

மநுநீதி விளக்கம்.

விலை அணு 2.

அகத்தியர் ஆராய்ச்சி

விலை அணு 2.

இராமலிங்க சுவாமிகள் பாடல்

விலை அணு 2.

சுயமரியாதைப் பாடல்

விலை அணு 2.

கதர்மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணு 2.

சுயமரியாதை தாலாட்டு

விலை அணு 2.

சோதிடப் புரட்டு

விலை அணு 2.

கத்தோலிக்கர் வீண் கூச்சல்

விலை அணு ½.

புத்தகங்கள் புக்போஸ்டில் அனுப்பவேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணு ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.